உ

சிவமயம்

கம்பனூர் - நாச்சியாபுரம்



அருள்தரு உமாமகேஸ்வரி

உடனுறை

அருள்தரு உமாமகேஸ்வரர்

கும்பாபிஷேக மலர்

1-7-1988

உ

சிவமயம்

35/3

கம்பனூர்—நாச்சியாபுரம்

அருள்மிகு உமாமஹேஸ்வரி சமேத உமாமஹேஸ்வரர் உடனாய

ஜீரணோத்தாரண மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

வெளியீடு:

திருப்பணிக் குழு

1—7—1988

உ

சிவமயம்

ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை

திருப்பணிக்குழு

தலைவர் : திரு. சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்

துணைத்தலைவர்கள் : திரு. பெரி, பெ. வயி. சண்முகம் செட்டியார் அவர்கள்
,, கரு. ச. சண்முகம் செட்டியார் அவர்கள்
,, சே. சு. வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள்

செயலர் : திரு. சுப. ராம. நா. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள் B. A., B. T.


பொருளாளர் : திரு. சு. ராம. நா. [illegible]ழ. இராமசாமி செட்டியார் அவர்கள்

உறுப்பினர்கள்

1. திரு. சே. சு. திருப்பதி செட்டியார் அவர்கள்
2. ,, வயி. ச. மாணிக்கம் ெட்டியார் அவர்கள் B. Com., (Hons)
3. ,, ராம. மு. சொ. சேதுச் செட்டியார் அவர்கள்
4. ,, சுவி. பெ. இராமநாதன் செட்டியார் அவர்கள்
5. ,, சுமு. சுப. விஸ்வநாதன் செட்டியார் அவர்கள் B. Com., (C. A)
6. ,, அரு. மெ. நாச்சியப்ப் செட்டியார் அவர்கள் B. E., M. Sc.,
7. ,, மு. ந. சுந்தரம் செட்டியார் அவர்கள்
8. ,, செ. பழ. மாணிக்கம் செட்டியார் அவர்கள்
9. ,, சுப. தியாகராசன் செட்டியார் அவர்கள்
10. ,, பெரி. பெ. நா. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள்
11. ,, கண. செ. கண. அண. கண்ணப்ப செட்டியார் அவர்கள்
12. ,, நா. லெ. ராம. லெட்சுமணன் செட்டியார் அவர்கள்
13. ,, லெ. நா. பழநியப்ப செட்டியார் அவர்கள்
14. ,, நல. சு. ஆ. சண்முகம் செட்டியார் அவர்கள்
15. ,, ராம. மு. சொ. கரு. கணேசன் செட்டியார் அவர்கள்

மலராசிரியர் : திரு. நா. சே. நாராயணன் செட்டியார் அவர்கள், நாட்டரசன்கோட்டை

கருவறைத் திருமேனிகள்




அருள்தரு உமாமகேஸ்வரி



அருள்தரு உமாமகேஸ்வரர்

யாகசாலைக் காட்சிகள்




சுவாமி வேதிகை அலங்காரம்



அம்மன் வேதிகை அலங்காரம்

குடமுழுக்குக் காட்சிகள்



உமாமகேஸ்வரர் கருவறைக் கோபுரம் நன்னீராட்டு.



நன்னீராட்டுக்குத் திருக்குடங்களைச் சிவாச்சாரியார்கள் எடுத்துச்செல்லும் எழில்மிகு காட்சி

1900—1903 இல்
திருப்பணி செய்த
திருவுடையாளர்



திரு. சுப. ராம. இராமன் செட்டியார்

கற்றளி கண்ட கர்ம வீரர்



திரு. சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார்,
தலைவர்,
திருப்பணிக் குழு-1988

உ

சிவமயம்

சமர்ப்பணம்

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளொடு நிறைந்த அன்னை உமாமகேஸ்வரி உடனுய உமாமகேஸ்வரர் திருக்கண்ணேக்கினுல் முகிழ்த்து மலர்கின்ற இம்மலரை உங்கள் திருமுன் படைப்பதிலே பெருமகிழ்ச்சி யடைகின்ருேம்.

திருப்பணிக்குத் தலைவர் எங்கள் மதிப்பிற்குரிய திரு. சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின அயராத உழைப்பும், நன்கொடைகள் பெற்றுத் தந்த பாங்கும், விளம்பரங்கள் சேகரித்துத் தந்த முறையும், எங்களை ஊக்குவித்த அன்பும்தான் இக்குடமுழுக்கும், கல்திருப்பணியும் செய்ய எங்களுக்கு ஊக்கமளித்தது என்ருல் அது மிகையாகாது. கைமாறு கருதாத கடப்பாடு நிறைந்த அன்னுரின் தொண்டிற்கு நன்றி கூற வார்த்தையேகிடையாது. எங்கள் இறைவி, இறைவன், எங்களூர் காவல் தெய்வம் அருள்தரு நாச்சியார் அம்மன் ஆகியோரின் கழல்போற்றி, அப்பெருந்தகைக்கு நீண்ட ஆயுளையும், உடல் வளத்தையும் தந்தருளப் பிரார்த்திப்பதல்லாது வேறு வகை யறியோம். மேலும் அவர் தொண்டால் எம்மூர் சிறப்படையும் என்று நம்புவதிலும் பெருமை யடைகிருேம்.

பரம்பரை தர்மகர்த்தா திரு. சுப. ராம. நா. ராம. இராமசாமி செட்டியாரவர்கள் இக்கோயிலின் தோற்றத்தையும், புதிதாகச் செய்த கல்திருப்பணியையும், குடமுழுக்கு நிகழ்ச்சிகளையும், எங்கள் இறைவனின் பெருங்கருணையையும் விரிவாகத் தனது கட்டுரையில் கூறியுள்ளதால், நாங்கள் அதனையே ஏற்று பிறசெய்திகள் கூருமல் நிறைவு பெறுகிருேம்.

நன்கொடைகள் தந்து இப்பெரும் பணி நிறைவுற உதவிய இறை உணர்வு கொண்ட பெருமக்களுக்கும்; விளம்பரங்கள் தந்து இறைப்பணியிலும், இம்மலர் மலரவும் துணை நின்றவர்களுக்கும், கல்திருப்பணியிலும், ஐந்து வண்ணங்கள் வைப்பதிலும், மற்றும் கட்டிட வேலையிலும், பிறபணிகளிலும் ஈடுபட்டு சிறப்புறச் செய்தவர்கள் அனைவருக்கும், யாகசாலையை வைதிக முறையில் நன்கு நடத்திவைத்த சிவாச்சாரியார்களுக்கும், பொருள் கொடுத்தும், தொண்டாற்றியும், நற்சொற்களால் பாராட்டியும் உதவிய அனைவருக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

இம்மலரை நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த மதுரை சக்திவிநுயகர் அச்சக உரிமையாளர் திரு. வெ. மாணிக்கம் செட்டியார் அவர்களுக்கும், மலர் மணம்பெற கருத்துக்கள் கூறி உதவிய மதுரை சுந்தரனுர் அவர்களுக்கும் நன்றி கூறி, பிறவா யாக்கைப் பெரியோன் காட்டிய மூர்த்தங்கள் 25 பற்றியும், பிரதோஷ மகிமை பற்றியும், ருத்திராக்க மகிமை பற்றியும் சைவத்திற்குப் பெருமை சேர்க்கவல்ல கட்டுரைகளைக் கொண்டதும், நகரத்தார் பெருமக்கள் வாழும் ஊர்கள், அவ்வூர்களில் உள்ள சிவன் கோயில்களில் 38 திருப்பெயர்களுடன் இறைவனும், 28 திருப்பெயர்களுடன் இறைவியும் எழுந்தருளி உள்ள விபரங்கள், நகரக் கோயிற் பதிகங்கள் முதலிய நகரத்தார் குலத்திற்குப் பெருமை சேர்க்கவல்ல கட்டுரை கவிதைகளைக் கொண்டதும், நாட்டரசன்கோட்டை திரு. நா. சே. நாராயணன் செட்டியாரால் தொகுத்துத் தரப்பட்டதுமான இம்மலரை, அருள்தரு உமாமகேஸ்வரி உடனுய அருள்தரு உமாமகேஸ்வரர் பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கின்ருேம்.

இவ்வண்ணம்
திருப்பணிக்குழு.

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கரசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸமஸ்தானம், காஞ்சிபுரம்.

தலைமை அலுவலகம் 1, சாலைத்தெரு, பெரிய காஞ்சிபுரம் - 631 502.

மக்களுடைய மனக்கவலைகளையும் உடற்பிணிகளையும் களைந்து வாழ்க்கையை வளப்படுத்த இறைவன் குடிகொள்ளும் இடமே கோயில். தேவநிர்மிதம்-ருஷிநிர்மிதம்-ராஜநிர்மிதம் - மனிதநிர்மிதம் - என இவை நால்வகைகப்படும்.

கோயில் நிர்மாணப்பணி மிகப்பெரும் புண்ணியப்பணி. இதனது பெருமையுணர்ந்து நாச்சியாபுரம் கிராமத்தில் அருள்மிகு உமாமகேச்வரன் சிவன்கோயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற விருப்பதையும் மலரொன்று வெளியிடவிருப்பதையும் அறிந்து மகிழ்கிறோம்.

கும்பாபிஷேகம் இனிதே நடைபெறவும் மலர் இப்பணிகளின் பெருமைகளைப் புரிய வைப்பதில் வெற்றி பெறவும் ஸ்ரீ உமாமகேச்வரர் அருள் கிட்டுவதாக. —நாராயணஸ்மிருதி

உ

சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி-623 206
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
தமிழ் நாடு
தொலைபேசி : குன்றக்குடி 27

6—6—88

அன்பிற் சிறந்த நமது சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக, திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

நமது நாச்சியாபுரத்தில் அருள்தரு அம்மையப்பன் எழுந்தருளியுள்ள திருக்கோயில் திருப்பணி இனிதே நிறைவு பெற்றுள்ள செய்தி, சிந்தைக்கு இனிக்கிறது; இத்திருக் கோயில், இயற்கைச் சூழலில் அமைந்த திருக்கோயில். அறநெறி ஆர்வலர் திருமிகு. இராம வீரப்பன் அவர்கள், திருப்பணியைத் தொடங்கி வைத்த பொழுது நாம் திருக்கோயில் வழிபாடு செய்து கொள்ளும் இனிய பேறு கிடைத்தது. நம்மனோரை ஆட்கொண்டருள இறைவன் எழுந்தருளியுள்ள திருமேனிகள் அற்புதமானவை; அழகொழுக அமைந்தவை. "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்பது சித்தாந்தம். அம்மையப்பர் திருமேனியே அருளும் திருமேனி. இத்தகு பெருமான் உமையொரு பாகனாக நம்மையெல்லாம் ஆட்கொள்ள விரும்பி

நாச்சியாபுரத்தில் எழுந்தருளியுள்ளமைக்குக் கைம்மாறு ஏது? கடப்பாடு ஏது? நாளும் வழிபாடு செய்து நல்லருள் பெறுவதே செய்யக் கூடிய ஒன்று. பெருஞ்சாந்தி விழா நிறைவு பெறும் நிலையிலேயே அம்மையப்பன் சபை தொடங்குங்கள். நாளும் திருக்கோயில் வழிப்பாட்டுக்கு மக்கள் வரும்படி செய்யுங்கள். கூடித் தொழுவோம்.

திருப்பணியில் பங்கு கொண்டு ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் நமது பாராட்டுக்கள் ! வாழ்த்துக்கள் !

பெருஞ்சாந்தி விழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

-அடிகளார்

கோவிலூர் மடாலயம் ஆண்டவர் மன்றம்

(பதிவு எண். S. 35 of 1972)

தந்தி நிலையம் : காரைக்குடி.
தொலை பேசி எண் :
காரைக்குடி - 2646.

கோவிலூர் B. O.
(காரைக்குடி வழி)
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
10—6—88

சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார்
நாச்சியாபுரம் 623207
ப.மு. மாவட்டம்.

கோவிலூர் மடாலயத்திலிருந்து எழுதிக்கொள்வது.

இப்பவும் அவடம் 27—5—88உ கடிதம் கிடைத்தது. ஸ்ரீலஸ்ரீ சந்நிதானங்கள் வெளியூர் சென்றிருந்தமையால் பதில் எழுத சுணங்கிவிட்டது.

தாங்கள் கேட்டிருந்தபடி குடமுழுக்கு விழா மலரில் வெளியிட ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அருளாசி வழங்கியதை கீழே தந்துள்ளது.

'அருளாசி உரை'

இருள் வழி செல்லும் இடர்கள் மாறுக ! இன்ப நிலைகள் இனிதாக வளருக !
மருள் வழி செல்லும் மாயைகள் மாறுக ! மனமாயைகள் மாறி மாற்றங்கள் பெருகுக !
பொருள் வளம் பெருகி புதுமைகள் தோன்றுக ! அன்பருளம் மகிழ
அருள்மிகு உமாமகேஸ்வரர் குடமுழுக்கு விழா அடியேனை ஆட்கொண்ட
கொற்ற வாளிசுவரர் திருநெல்லைத்தாயின் திருவருளால் இனிதே நடைபெற
இன்பமாய் வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ காசி விசுவநாத ஞானதேசிகர்

உ

சிவமயம்

ஸ்ரீ உமாமகேஸ்வரர் துணை

கோயில் வரலாறு

சுப.ராம.நா.ராம. இராமசாமி செட்டியார்
பரம்பரை தர்மகர்த்தா

பணியாத கோயில் அணியாத நீறு
பசியாத சோறு தருவாய்
துணிவான வாசி சிவஞான மோன
சுகமே எனக்கு அருள்வாய்
தணியாத கோப உடலோடிருந்து
சலியாத மாய்கை வெளியே
மணியோடு நாதர் அருணசலீசர்
வரவேணுமென்றன் அருகே,"

அருணச்சலீசர் பதிகம்

சிவநெறிச் செல்வர்களுக்கு என்சிரம் தாழ்ந்த வணக்கங்கள் பல!

என் குலக்கடவுளான கம்பனூர் நாச்சியாபுரம் அருள்மிகு உமாமகேஸ்வரி உடனுய உமாமகேஸ்வரர் திருக்கோயில் வரலாறு வரைவதில் நான் பேருவகை எய்துகின்றேன். இத்திருக்கோயிலில் கொலு வீற்றிருக்கும் என் அப்பனையும் அம்மையையும் என் தாய் தந்தையாகவே உருவகப்படுத்தி என் மனக்கண் முன் நிறுத்தி வழிபட்டு வருகின்றேன். தாயாகி தந்தையாகித் தாங்குகின்ற தெய்வமாம் என் அப்பனின் பெருமையை எல்லே விஞ்சிய அருள் சக்தியை உலகோருக்கு இந்த மலர் வாயிலாக எடுத்துரைக்கக் கிடைத்த ஒப்பற்ற வாய்ப்பிற்கு எம்பெருமானுக்கு என் இதய நன்றி!

அருள்மிகு ஸ்ரீ உமாமகேஸ்வரர் திருக்கோயில் எனது பாட்டய்யா திருவாளர் சுப. இராம. இராமன் செட்டியார் அவர்களால் முழுமையாக அவர்களுடைய சொந்தப் பணத்தில் கட்டப் பெற்றது. இத்திருக் கோயிலுக்குரிய இடம் சிவகங்கை மன்னரிடமிருந்து விலே கொடுத்துக் கிரயமாக 1900 இல் மேற்படி இராமன் செட்டியாரால் வாங்கப் பட்டது. சிவகங்கை மன்னரிடம் ஊருணி வெட்டவும், சொந்தத்திற்கு வீடு கட்டவும் 20குருக்கம் இடம் வாங்கப்பட்டதில் 10குருக்கம் இத்திருக் கோயில், குளம், நந்தவனம், அக்ரஹாரம், சிப்பந்திகள் குடியிருப்புக்கள் ஆகியவைகள் அமைக்க ஒதுக்கப்பட்டது. மேற்படி சிவநேசச் செல்வர் இராமன் செட்டியார் தன் சம்பாத்தியத்தில் சரிபாதியை எம்பெருமானுக்கே அர்ப்பணம் செய்திருக்கிறார். கோயில் நிர்வாகச் செலவிற்கு பர்மா நாட்டில் போக்கலே என்ற நகரிலே எங்களுக்கு இருந்த நிலங்களிலும் லேவாதேவிக் கடையிலும் ஒரு கணிசமான பங்கை இத்திருக்கோயில் நிர்வாகத்திற்காக ஒதுக்கியிருந்தார். அத்துடன் நமது தற்போதைய பசும்பொன் மாவட்டத்தில் கருப்பூரில் 80ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் வாங்கி அதில் சரிபாதியை கோயில் நிர்வாகச் செலவிற்கு ஒதுக்கியிருந்தார். மேற்படி புன்செய்யில் அவர் திருக்கோயில் காட்டும் முன்னதாகவே உண்டாக்கியிருந்த 7 ஏக்கர் தென்னந்தோப்பையும் கோயில் நிர்வாகச் செலவிற்காக ஒதுக்கி விட்டார். சுருக்கமாகச்சொன்னால் குடும்பத்தில் அவருக்கு இருந்த பற்றைவிட எம்பெருமானிடத்திலே அவருக்கிருந்த ஈடுபாடும் பற்றும் அளவிடற்கரியதாக இருந்தது.

கம்பனூர் நாச்சியாபுரம் கிராமத்தில் 1900 இல் வாங்கப்பட்ட இடத்தில் திருக்கோயில், குளம், அக்ரஹாரம், நந்தவனம் இவையனைத்தும் 1903க்குள் அமைக்கப் பெற்று 1903இல் முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்பொழுது எனது பாட்டையாவிற்கு வயது அறுபதையும் தாண்டியிருந்தது. அவர்கள் ஒரு பிள்ளையார் கோயிலும், திருக்குளமும் கட்ட வேண்டுமென்ற எண்ணத்திலேயே சிவகங்கை மன்னரிடம் இடம் வாங்கினர்கள் ஆனல், இறைவன் திருவுள்ளம் வேறாக இருந்தது.

அக்காலத்தில் கோயிலூர் திருமடத்திற்கு மடாதிபதியாக தவத்திரு. வீரப்பசுவாமிகள் இருந்தார்கள். அவர்கள் ஒரு பஞ்சாயத்திற்காக நாச்சியாபுரம் வந்திருந்தார்கள் எங்கள் வீட்டில் மடாதிபதிக்கு மதிய உணவு. அவர்கள் மதிய உணவு அருந்துவதற்கு முன் சிவன் கோயிலில் வழிபாடு செய்வது வழக்கம். உணவிற்கு அமருமுன் என் பாட்டய்யாவைப் பார்த்துச் சிவன் கோயிலுக்குச் சென்று வழிபட்டுப்பிறகு உணவு

உண்ணலாம் என்று கூற, அதற்கு என் பாட்டய்யா, ''இந்த ஊரில் சிவன் கோயில் இல்லை. கம்பனூரில் சிவகங்கை மன்னருக்குப் பாத்தியமான சிவன் கோயில் இருக்கிறது. அங்கு சென்று வழிபட்டு வருவோம்.'' என்றார்கள். அதற்கு மடாதிபதி அவர்கள் ''சிவன் கோயில் இல்லாத ஊரில் நான் உணவு உண்ணுவதில்லை. நீ குடியிருப்பதும் தவறு. ஆகவே நான் கோயிலூருக்கே செல்லுகிறேன். அங்கு இறை வழிபாட்டிற்குப் பின் உணவு அருந்துகிறேன்'' என்றார்கள். மாட்டு வண்டி தவிர வேறு போக்குவரத்து வசதி இல்லாத காலம். சுவாமிகள் கோயிலூர் செல்ல மாலை நேரமாகி விடும். பசியுடன் சுவாமிகளைப் போக விட மனமில்லாத நிலையிலிருந்த என் பாட்டய்யாவின் பரிதாப நிலையைப் பார்த்துச் சுவாமிகள், ''நீ ஏதோ கோயில் கட்டப் போவதாகச் சொன்னாயே, அது என்ன கோயில்?'' என்று கேட்க 'அது பிள்ளையார் கோயில்' என்று பதில் உரைத்தார்கள். உடனே சுவாமிகள் அடுத்த ஆண்டுக்குள் அதைச் சிவன் கோயிலாக கட்டுவதாக உறுதியளித்தால் கம்பனூர் சிவன் கோயிலில் வழிபாடு செய்து உணவு அருந்துகிறேன் என்றார்கள். உடனடியாக, எப்படியும் சுவாமிகள் உணவருந்தினால் போதும் என்ற நிலையில் சிவன் கோயில் கட்ட ஒப்புக் கொண்டார்கள். சுவாமிகள் உணவருந்திச் சென்றார்கள். சிவன் கோயிலில் ஒருநாள் பூஜை நின்றால் அதனால் ஏற்படும் பாபத்தைத் தீர்க்கப் பல பிறவிகள் எடுக்க வேண்டும் என்பார்கள். எப்படியோ துணிவே துணை என்ற நிலையில் இக்கட்டான சூழ்நிலையில் திருக்கோயில் உருவானது.

உடனடியாகக் கோயில் கட்டப்பெற்று 1903 இல் முதல் குடமுழுக்கு நடைபெற்றது. கோயிலில் உள்ள மூர்த்தங்கள் அனைத்தும் அற்புதமான சிற்பவேலைப்பாடு அமைந்தவைகள். தெட்சிணாமூர்த்தியின் திருவுருவச்சிலைக்கு ஈடு இணை இல்லை என்று அறுதியிட்டுக் கூறலாம். கருவறை, அர்த்த மண்டபம், மஹா மண்டபம், சுவாமி, அம்பாள், பைரவர், பிள்ளையார், சுப்பிரமணியர், கருவறைகளின் மேல் விமானங்கள், இராஜ கோபுரம், உக்கிராணம், மடைப்பள்ளி, வெளிப்பிரகாரம், ஆகிய எல்லா அமைப்புகளுடனும் அடக்கமாக, அழகாக திருக்கோயில் அமையப்பெற்றது.

1923ல் இரண்டாவது குடமுழுக்கு என் பாட்டய்யாவினால் செய்யப் பெற்றது. அப்பொழுது மேல்தள வரிசை, கீழ்த்தள வரிசைகளுக்கு சதுரக் கற்கள் பாவப்பட்டு, கோபுரங்கள் புதுப்பிக்கப்பெற்று அலங்கார மண்டபம், வாகனக் கொட்டகை, வெளிப்பிள்ளையார் கோயில் ஆகியன அமைக்கப் பெற்றன.

கற்கோயிலாக் கட்டப் பெறாமல் செங்கல் சுண்ணாம்பினால் தார்சுக் கட்டடமாகக் கட்டப்பட்டதால் காலப் போக்கில் அதன் பல பகுதிகள் இடிபாட்டிற்கு உள்ளாகி விட்டன. 1969இல் மூர்த்தங்கள் எல்லாம் வாகனக் கொட்டகையில் என்னால் பாலாலயமாக பிரதிஷ்டை செய்யப்பெற்று பூஜைகள் நடைபெற்று வந்தன.

1983இல் புனருத்தாரண திருப்பணி வேலைகள் துவங்கப் பெற்று 1988ல் ஜூலை மாதம் 1ம் தேதி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. புனருத்தாரண வேலையில் சுவாமி கருவறை, அர்த்த மண்டபம், மஹா மண்டபம் முழுவதும் கல்லால் மிக அற்புதமாக புதியனவாக கட்டப் பெற்று இருக்கின்றன. பிரகார மண்டபம், மஹா லெஷ்மி, பிள்ளையார், சுப்பிரமணியர் மண்டபங்கள் காங்கிரீட்டால் புதிதாகக் கட்டப் பெற்று இருக்கின்றன. திருப்பணியைக் கற்கோயில் விற்பன்னர் எழுவங்கோட்டை திரு எஸ். சட்டநாத ஸ்தபதி அவர்கள் மேற்கொண்டு வியத்தகு முறையில் அமைத்துள்ளார்கள். சுவாமி, பிள்ளையார், சுப்பிரமணியர் விமானங்கள் புதிதாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. இராஜ கோபுரம், அம்பாள், பைரவர் மண்டபங்கள், அவற்றின் விமானங்கள் புதுப்பிக்கப் பெற்றிருக்கின்றன. எல்லாக் கோபுரங்களிலும் ஐந்து வண்ணங்கள் அழகுறத் தீட்டப் பட்டிருக்கின்றன. முன் அலங்கார மண்டபம் கான்கிரீட்டால் கட்டப்பெற்று மண்டப முகப்பில் சுவாமி அம்பாள் ரிஷபாரூடராகக் காட்சி தருகிறார்கள். புதிதாகப் பள்ளியறை கட்டப் பெற்றுப் பள்ளியறை சுவாமி அம்பாள் செப்புச் சிலைகள் வைக்கப்பெற்றிருக்கின்றன. புதிதாகக்

கொடிமரம் அமைக்கப் பெற்று இருக்கிறது. ஏராளமான மின்விளக்குகள், கோபுர மெர்க்குரி விளக்கு முதலியன அமைக்கப் பெற்றிருக்கின்றன. இவ்வாறு திருப்பணி $5\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பெற்று ரூபாய் 50 ஆயிரம் செலவில் அஷ்ட்ட பந்தன மகா கும்பாபிஷேகம் இறைவனின் திருவருளாலே இனிது நிறைவேறியது.

குடமுழுக்கு பூஜைகள் 27—6—88 இல் ஆரம்பிக்கப் பெற்று அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரஹ பூஜை முதலியன நடைபெற்றன. அழகாக அமைக்கப்பெற்ற யாக சாலையில் வேதவிற்பன்னர்களால் யாகசாலை பூஜைகள் தினமும் சிறப்பாக நடைபெற்றன. 1—7—88 வெள்ளிக்கிழமையன்று காலை மணி $9\frac{1}{2}$ முதல் 10-25க்குள் குடமுழுக்கும், அன்று மாலை மஹாபிஷேகமும் நடைபெற்றது. சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் ஆகியவையும் இடம் பெற்றன. பல்லாயிரக் கணக்கான மக்கள் குடமுழுக்கில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருளைப் பெற்றனர்.

இப்புதிய திருப்பணி கற்றளியாக வடிவெடுத்திருப்பது, அதில் கொலுவீற்றிருக்கும் சர்வேசுவரரின் திருவுள்ளம். அத்துடன் நாச்சியாபுரத்தைச் சேர்ந்த எங்கள் ஐயா வகையில் மூத்தவரும், 84 வயதினரும், செட்டிமார் நாட்டிலே தனவணிக குலத்திலே பெரும் செல்வாக்குப் படைத்தவருமான பெரியவர் சுப, சொ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தனது விருத்தாப்பிய நிலையையும் கருத்தில் கொள்ளாது இளம் சிங்கமென அயராது மேற்கொண்ட கடும் முயற்சியின் பலன் இன்று நம் முன்னே ஓங்கி உயர்ந்து நிற்கும் இந்தக் கற் கோயில்.

இக்கற்றளியைப் புதுப்பித்து உருவாக்கிய உயர்திரு. சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் தந்தையாருக்கு எல்லாமே பெண் குழந்தைகள் தான். 85 ஆண்டுகளுக்கு முன் அவர்கள் இத்திருக் கோயிலில் இரண்டாவது சோமவார உபயம் செய்து முழுமுதற் கடவுளை வழிபட்டார்கள். அதனால் கைமேல் பலனாக அடுத்த ஆண்டு நமது பெருமகனார் சுப. சொ. சுப்பிரமணியன் செட்டியார் பிறந்தார்கள். கவிஞர் கண்ணதாசன் கேட்பார் 'ஏன் பிறந்தாய் மகனே?' என்று. அவர் சம்மந்தி சுப. சொ. கவிஞர் கேள்விக்குப் பதில் சொல்ல, இத்திருக்கோயிலை கற்கோயிலாக்க வந்து பிறந்தேன் என்று பதில் சொல்லும் வண்ணம் வந்து பிறந்தார். எதற்கு இப்பூவுலகில் அவதரித்தாரோ அத்திருப்பணியை யாவரும் வியக்கும் வண்ணம் செய்துமுடித்திருக்கிறார். கர்மவீரர், பசிநோக்கார், கண்துஞ்சார், கர்மமே கண்ணாகியவர் அவர். இத்திருக்கோயிலைக் கட்டி முடிக்க சுப. சொ. விற்கு உறுதுணையாக நின்றவர் அம்பலகாரச் செட்டியார் வீட்டு சு. ராம. நா. [redacted]. இராமசாமி செட்டியார் அவர்களாவார்கள். அவர்களின் சலியாத உழைப்பு மகத்தான பாராட்டுக்குரியது.

மூவேந்தர்களுக்கும், குறுநில மன்னர்களுக்கும் பின்னே திருக்கோயில்கள் அமைக்கப் பெற்று சைவம் வளர்க்கப் படுகிறது என்றால் அது நகரத்தார் பெருமக்களால்தான் என்பது உலகம் அறிந்த மறுக்க முடியாத உண்மை. அந்த வகையில் அருள்மிகு ஸ்ரீஉமாமகேஸ்வரர் திருக்கோயிலும் நகரத்தார் பெருமக்களின் பெரு முயற்சியால் அற்புதமான கற்கோயிலாக, நீண்ட நெடுங் காலத்திற்கு சைவம் வளர்க்கும் திருக்கோயிலாக அமையப் பெற்றிருக்கிறது.

திருக்கோயிலிலே விஜயதசமி நாளில் அம்மனை எழுந்தருளச் செய்ய குதிரை வாகனம், கார்த்திகை சோம வாரங்களிலும், திருக்கார்த்திகையிலும் சுவாமி அம்பாள் (பிரதோஷ நாயகரை) எழுந்தருளச் செய்ய ரிஷப வாகனம், நாயகர் புறப்பட்டிற்கு மூஷிக வாகனம், கேடகம் முதலிய மர வாகனங்கள் உள்ளன. பிள்ளையார், சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை, பிரதோஷ நாயகர் (சுவாமி அம்பாள்), தனி அம்மன், நடராஜர், சிவகாமி அம்பிகை, மாணிக்க வாசகர், பள்ளியறை சுவாமி அம்பாள் முதலிய செப்புச் சிலைகள் திருக்கோயிலில் காட்சி தருகின்றன.

இத்திருக் கோயிலின் காவல் தெய்வமான பைரவரின் சக்தி, அவருக்கு எதிரிலே அமைந்திருக்கும் திருக்குளம் 1900 இல் அமைக்கப் பட்டதிலிருந்து இன்று வரை வற்ருத பொய்கையாக இந்தப் பண்டி வளநாடு கண்டு கொண்டிருப்பதிலிருந்து புலனுகும். இந்த அற்புதப் பொய்கையை அமைக்கும் எண்ணத்தை கருத்தில் கொண்டு ஒருநாள் மாலை என் பாட்டய்யா அவருடைய பணியாள் குண்டன் என்ற முத்திரையர் குலத்தவனுடன் பொய்கை இடம் குறிக்கச் சென்ற பொழுது கருடன் வட்டமிட்டதைக் கண்டார். அது வட்டமிட்ட இடத்தில் வட்டமாக கற்களை வைக்கச் சொன்னுர். அது பொய்கையின் மையப் பகுதியாயிற்று. 30 அடி ஆழமும் மூன்று அலங்கங்களும் சுற்றிலும் நான்கு படித்துறைகளையும் கொண்டு முற்றிலும் கல்லால் சுமார் 2½ ஏக்கர் பரப்பளவில் அமைக்கப் பெற்றிருக்கும் திருக்குளம் இந்த வட்டாரத்திற்கே ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது அத்தகைய திருக்குளத்தில் தூர்வை எடுத்து செப்பனிடுதலாகிய அரும்பணி, திருப்பணி வேலையுடன் சேர்த்து இப்பொழுது முடிக்கப்பெற்றிருக்கிறது. அதில் என்றென்றைக்கும் பால்போல் தெளிந்து நிற்கும் தண்ணீர், அதை அமைத்த பெருமகனுரின் பால் போன்ற நல்ல உள்ளத்தின் பிரதிபலிப்பு என்ருல் மிகையாகாது.

திருக்கோயில் தோற்று விக்கப்பட்டகாலம் முதல் 40 ஆண்டு காலத்திற்கு 6 காலபூஜைகள் திருக்கோயிலில் என் மூதாதையர்களால் நடத்தப் பெற்றன. பிறகு 45 ஆண்டுகால மாக இன்றுவரை 4 கால பூஜைகள் நடைபெறுகின்றன. முக்கிய வருமானமான பர்மா நாட்டு வருமானம் இரண்டாம் உலக யுத்தத்தினுல் தடைபட்டுப் போனதால் உள்நாட்டுக் கிராம வருமானத்தை நம்பிக் கோயில் படித்தரம் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. பசும்பொன் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் முற்றிலும் வானம் பார்த்த பூமியாதலால் நீண்ட நெடுங்காலமாக ஏற்பட்ட கடும்வறட்சியின் காரணமாக நீர் நிலைகள் எல்லாம் வற்றி வரண்டுபோய், மரங்கள் எல்லாம் இருந்தஇடம் தெரியாமல் போனபடியால், இத்திருக்கோயிலின் நிர்வாகத்தைப் பரம்பரை தர்மகர்த்தாவாக கடந்த 31 ஆண்டு காலமாக நிர்வகித்து வருகின்ற எனக்கு, என்னையே நம்பி இத்திருக் கோயில் படித்தரம், ஆட்ட விசேடச் செலவுகள், சிப்பந்திகள் சம்பளம் முதலியன செய்ய வேண்டிய நிலை நீண்டநெடுங் காலமாக ஏற்பட்டிருக்கிறது, எம்பெருமான் தனது திருவருளாலே எப்படியோ பகவானது கைங்கர்யம் தங்கு தடையின்றி நடத்த எனக்குப் போதிய சக்தியை இன்றுவரை நல்கியிருக்கிருர் என்று சொன்னுல் அது மிகையாகாது, அவனருளாலே அவன் தாள் வணங்குகிறேன். அவ்வளவு தான்.

அருள்மிகுஸ்ரீஉமாமஹேஸ்வரியை வழிபட்டு இத்திருக் கோயிலில் துர்க்கைக்கு ராகு காலத்தில் பூஜை செய்த கன்னிப் பெண்கள் அனைவரும் நல்ல மணவாழ்வில் புகுந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

எம்பெருமானின் அளவற்ற சக்தியைக் கூறப்புகின் உடல் மெய்சிலிர்க்கும். எனது ஒரு சில அனுபவங்களைக் கூறுகிறேன். ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் பகவானுக்கு அன்னுபிஷேகம் நடைபெறும். உபயம் செய்பவர்கள் உயர்திரு. சுமு. சுப. சொக்கலிங்கம் செட்டியார் (கொழும்பு, சொ.) குடும்பத்தினர். நான் காரைக்குடியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். கோயில் காரியங்களுக்கு அடிக்கடி நாச்சியாபுரம் வந்து போவது வழக்கம். எப்பொழுதும் பஞ்சாங்கம் பார்த்து விசேட நாட்களைக் குறித்து வைத்துக்கொள்வது எனது வழக்கம். 12 ஆண்டுகளுக்கு முன் ஒரு ஆண்டு எப்படியோ அன்னுபிஷேகத் தேதியைக் குறித்து வைத்துக்கொள்ள மறந்து விட்டேன். அன்று பள்ளி சென்றுவிட்டு திரும்பி வந்து மாலையில் கரைக்குடியிலுள்ள என் வீட்டில் இருந்தேன். சற்றும் எதிர்பாராவண்ணம் என் அம்மான் மகன் திருவாளர் நா. லெ. லட்சுமணன் செட்டியார் அவர்கள் என் வீட்டிற்கு வந்து "இன்று அன்னுபிஷேகம் ஆயிற்றே நீ ஏன் கோயிலுக்கு வரவில்லை" என்று கேட்டார்கள். உடனே பஞ்சாங்கத்தைப் பார்த்தேன். அவர்களுடன் புறப்பட்டு உடனே

நாச்சியார்புரம் வந்தேன். அவர்களிடம் இதைச் சொல்வதற்கா என் வீட்டிற்கு வந்தீர்கள் என்று கேட்டேன். அவர்களுக்கு காரைக்குடியில் ஏதோ வேலை, ஆகவே வந்தேன் என்றார்கள். ஆனால் அவர்கள் காரைக்குடியில் ஒரு வேலையும் பார்க்காமல் என்னுடன் வந்து விட்டார்கள். அவர்கள் வீட்டில் எம்பெருமானின் திருவாபரணம் பாதுகாப்பிற்காக வைத்திருந்தேன், நான் வந்ததும் கோயிலுக்கு எடுத்துச் செல்ல அவர்கள் வீட்டு வாசலில் வைராவி காத்திருந்தார். திருவாபரணத்தை நான் கோயிலுக்கு எடுத்துச் செல்வதற்கும் அங்கு அபிஷேகம் முடிந்து திருவாபரணம் சாத்த வேண்டிய நேரத்திற்கும் சரியாக இருந்தது. எம்பெருமானுக்கே அடிமையான நான், அவர் சிந்தனை இல்லாது அயலூரில் இருந்ததால் எனக்கு வேண்டியவரைக் கொண்டு என்னை அழைத்து வரச் செய்தார் என்பதை எண்ணும் போது எனக்கு அளவு கடந்த வியப்பாக இருந்தது. ''யாவரும் அறிவரியா, யெமக்குத் தெளியாய்'' என்ற மாணிக்க வாசகரின் திருவெம்பாவையே என் நினைவிற்கு வந்தது.

மற்றொரு நிகழ்ச்சி. இக்காலத்தில் வாரம் கொடுக்காமல் கதிர் அறுத்துச் செல்வது என்பது சர்வசாதாரண நிகழ்ச்சி. குடிவாரதார்கள் பாதுகாப்புச் சட்டம் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். கருப்பூர் கிராமத்தில் கோயில் நிலத்தில் கடும் வறட்சியினூடே இரண்டு மூன்று முறை பெய்த மழை நீரைத் தேக்கி ஒரு விவசாயி ஒரு ஏக்கர் மாத்திரம் ஓராண்டு விவசாயம் செய்திருந்தார். கோயிலுக்குரிய வாரத்தைக் கொடுக்காமல் என் கண்முன்னே கதிர் அறுத்துக் கொண்டு சென்று விட்டார். குற்றவியல் முறையில் நடவடிக்கை மேற்கொள்ளாமல் உரிமையியல் முறையில் நடவடிக்கை மேற்கொள்வது சாலச் சிறந்தது என்ற முடிவில் அவரை உடனடியாக நான் தடை செய்யவில்லை. மேலும் அவர் என்முன்னே கதிர் அறுத்திருக்கிறார், இந்தத் தெய்வத்திற்கு சக்தியிருந்தால் அடுத்த ஆண்டுக்குள் அவர் தன் குற்றத்தை உணர்ந்து என்னிடம் வந்து மன்னிப்புப் பெற வேண்டும். இல்லையேல் வழக்குத் தொடர்வோம் என்றிருந்தேன். அடுத்த ஆண்டுக்குள் அவருக்கும், அவர் மனைவிக்கும் கடுமையான நோய் ஏற்பட்டு திருப்பத்தூர் மருத்துவமனைக்குச் சென்று விட்டனர். அவரது வண்டி உடைந்து, மாடு கால் ஒடிந்து விவசாயம் செய்ய முடியாத நிலை. அவரது உறவினர் அவருக்காக அடுத்த வருடம் விவசாயம் செய்தார். கதிர் முழுவதையும் இரவோடு இரவாக பலத்த காவலுக்கு இடையில் ஊர்க் கோயில் மாடு மேய்ந்து விட்டது. அவர் எங்கு சென்றாலும் இத்தெய்வத்தின் குறை என்று கூறினார்கள். நான் எதிர் பாராத வண்ணம் ஒருநாள், கருப்பூர் கிராமத்திற்குச் சென்றிருந்த பொழுது நான் அங்கு அன்று வருவதை முன் கூட்டியே தெரிந்து கொண்டு எனது நண்பர் கீழச்சிவல்பட்டி ஊராட்சித் தலைவர் கருப்பூர் சுப்ரமணியன் செட்டியாரைக் கூட்டிக்கொண்டு வந்து வைத்திருந்தார்கள். அவர்கள், மற்றும் ஊர்மக்கள் முன்னிலையில் அந்த விவசாயி ''நான் ரொம்பவும் கெட்டு விட்டேன் என்னை மன்னியுங்கள்'' என்று விழுந்து வணங்கினார் ''இதுவும் எம்பெருமானின் திருவிளையாடல், பகவான் தன் சக்தியைக் காட்டிவிட்டார், இனி நமக்கு வழக்குத் தொடரும் வேலையில்லை எனக்கருதி மன அமைதியடைந்தேன். ''அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்'' என்ற பழமொழி என் நினைவிற்கு வந்தது.

இந்தத் திருக்கோயில் தொடர்பாகவும், தனியாகவும் என்னிடத்தே வலிய வந்த வழக்குகள் ஏராளம். ஆகக் கீழ் நீதி மன்றங்கள் முதல் உயர்நீதி மன்றம் வரை எம்பெருமானுடைய அளவிடற்கரிய கருணையினாலே; பகவான் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து அருள்பாலித்த காரணத்தினாலே நான் எதிர்பாரா வண்ணம் அனைத்து வழக்குகளிலும் வெற்றி பெறுகின்ற வாய்ப்பினை எனக்கு என் தெய்வம் அருள்கூர்ந்து நல்கியது என்று கூறினால் அது சாலப் பொருத்தமானது.

முன்காலத்தில் திருவிளையாடல்கள் பல புரிந்தார் அருள்மிகு சொக்கநாதப் பெருமான் மதுரையிலே, அதே பாண்டிய நாட்டில் இந்தக் காலத்தில் திருவிளையாடல் பலபுரியும் ஆதியும் அந்தமுமில்லாத அரும் பெரும் ஜோதியாம் அருள்மிகு உமாமஹேஸ்வரப் பெருமான் இங்கே கம்பனூர்—நாச்சியாபுரத்திலே. பக்தகோடிகள் நம் பெருமானை பொன்னும், மெய்ப் பொருளும் தந்து போகமும் திருவும் புணர்ப்பானை மனத்தில் வைத்து நித்தநித்தம் வழிபாடு செய்ய வேண்டும். பிறவியின் பயனைக் குறைவற எய்த வேண்டும். அதற்கு அவர் அருள்புரிவார் என என் உளமார நம்பி உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு இக்கட்டுரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.



உ
சிவமயம்

சிவமூர்த்தங்கள்–25

பேராசியர் வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர் தொழும் அடிகள்வே
டங்களே.
—திருஞானசம்பந்தர்.

சிவன் என்ற சொல்லுக்கு மங்கல வடி-வினன் என்பது பொருள். மங்கலம்-நன்மை. தானும் மங்கல வடிவோடு விளங்கித் தன்னை வழிபடும் அடியார்களையும் மங்கலத்துக்கு உரியவர்களாகச் செய்யும் தெய்வம் சிவபிரானையன்றி வேறு தெய்வம் எவரும் இலர்.

"குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன் என அறிவின் மேலவர்
இறைஅவன் பெருமையை யாவர் கூறுவார்"

என அருளிச் செய்கின்றார் ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

சிவபிரானது நிலை இருவகைப்படும். குணம், குறி, செயல் முதலியன இல்லாத அவரது நிலையைத் தடத்தம் எனக் கூறுவர். அப்பெருமான் உயிர்களின் ஈடேற்றம் கருதி அருவம், அருவுருவம், உருவம் என்ற நிலைகளில் தோன்றி அருள்புரியும் நிலையைச் சொரூபம் எனக் கூறுவர்.

சிவபெருமான் பல்வேறு சமயங்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளிய நிலைகளைப் புராணங்களில் காண்கிறோம்.

அவ்வுருவ நிலைகளைச் சிவமூர்த்தங்கள், அல்லது மகேசுரமூர்த்தங்கள் என வழங்குவர் ஆன்றோர். அறக்கருணையினாலோ மறக்கருணையினாலோ அப்பெருமான் பல்வேறு வடிவங்கள் கொண்டு வருதலை 'நானாவித உருவாய் நமை ஆள்வான்' எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

திருந்துதேவன் குடித் தேவாரத்தில் அவ்விறைவன் கொண்டருளிய பல்வகை வடிவங்களை நாம் வழிபடுவது மருந்தாக மந்திரமாக மறுமைநெறி பயப்பதாக அமையும் எனவும் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருள்கிறார்.

இறைவன் கொண்டருளிய வடிவங்களைப் போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என மூன்று வகையாகக் கூறுவர். உமாமகேசுமூர்த்தம், சந்திரசேகர மூர்த்தம், இடபாரூட மூர்த்தம், சோமாஸ்கந்தமூர்த்தம் போல்வன போக வடிவங்கள் எனப்படும். தக்ஷிணாமூர்த்தி மூர்த்தம், சுகாசனமூர்த்தம் போல்வன யோக வடிவங்களாகும். காமாரிமூர்த்தம், காலாரி, கங்காளர் விரபத்திரர் போலும் மூர்த்தங்கள் வேகவடிவங்கள் எனப்படும்.

போக வடிவங்கள் உயிர்களுக்கு போகத்தைஅளித்தற் பொருட்டும், யோக வடிவங்கள் யோகநிலைகளை அருளுதற் பொருட்டும், வேக வடிவங்கள் உயிர்களின் வினைமாசுகளை நீக்குதற் பொருட்டும் அப்பெருமான் கொண்டருளியனவாகும். அவ்வடிவங்களைத் தொகுத்து 64 என வகைப்படுத்தியும், அவற்றையும் சுருக்கி 25 எனத் தொகைப்படுத்தியும் கூறுவர்.

திருக்கோயில்களில் விளங்கும் அம்மூர்த்தங்களை வழிபடும்போது அவ்வடிவத்தை மனத்திலே நிறுத்த தியானசுலோகமும் அவ்வடிவம் மேற்கொண்ட காரணத்தை அறிய வரலாறும் தோத்திரிக்கத் தேவராமும் பயன்படுமாதலின் இத்தொகுப்பில் அம்மூன்றும் குறிக்கப்பெற்று வெளியிடப் பெறுகின்றன.

சிவலிங்கம்



சிவபெருமானுக்குரிய திருமேனிகள் மூன்று. அவை அருவம், உருவம், அருவுருவம் எனப்படும். அருவத்திருமேனி உருவமற்ற வடிவாகும். அகத்தில் கண் கொண்டு உள் நோக்கி உணரும் யோகிகளின் நோக்கிற்கு மட்டுமே அவ்வடிவம் புலப்படும். உருவத்திருமேனி கை, கால் முதலிய அவயவங்களுடன் கூடிய வடிவமாகும். அருவுருவத் திருமேனி உருவத்திற்கு வேண்டிய கை, கால் முதலிய அவையங்கள் இல்லாமையால் அருவமாயும், கண்களால் காணவும் கைகளால் தொடவும் கூடியதாயிருத்தலின் உருவமாயும், இருநிலைகளும் விரவப் பெற்ற வடிவமாகும். சிவாலயத்துள் சிவலிங்கம் அருவுருவத் திருமேனியாகவும், சிவபிரான் கொண்டருளிய பல்வேறு வடிவங்கள் உருவத் திருமேனிகளாகவும் விளங்குகின்றன.

இலிங்கம் என்பதற்குச் சித்திரித்தல் என்பது பொருள். லிங்-லபம்-கம்-தோற்றம் சங்கார காலத்தில் பிரபஞ்சங்கள் ஒடுங்கிய பின் சிருஷ்டி காலத்தில் அதனின்றும் உலகம் தோன்றும் எனப்படுதலினுல் இலிங்கம் என்பதற்குப் படைப்பு முதலியவற்றுல் உலகைச் சித்திரித்தல் என்ற பொருள் ஏற்புடையாதலை உணரலாம்.

சிவபெருமானை நாம் அறிந்துணர்தற்குக் குறியாகச் சிவலிங்கம் ஆலயங்களில் விளக்குகிறது. 'காணுத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்' எனச் சேக்கிழார் சிவலிங்கத் திருவுருவைக் குறிப்பிட்டருளியுள்ளார். சிவலிங்கம் மும்மூர்த்திகளின் சொரூபமாக விளங்குவது. இலிங்க வடிவில் ஆவுடையாரின் அடிப்பாகம் பிரமபாகம், மேற்பகுதி விஷ்ணு பாகம், குழவி-உருத்திரபாகம். இவை முறையே இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்திகளாக விளங்குகின்றன எனவும் கூறுவர்.

சிவலிங்க பாணத்தின் மேல் பாகம் ஈசான முகமாகவும், மேற்கு சத்யோசாத முகமாகவும் வடக்கு வாமதேவ முகமாகவும், தெற்கு அகோரமுகமாகவும் கிழக்கு தற்புருட முகமாகவும் கற்பிக்கப்படும். ஆகவே சிவலிங்கம் போக மூர்த்தியாகிய சதா சிவமூர்த்தியாக விளங்குவதை அறியலாம். கருவறையில் விளங்கும் மூலலிங்கம் அருவுருவ நிலையிலேயே எல்லாக் கோயில்களிலும் இருக்கும். முகலிங்கங்கள் பிராகாரங்களில் தனி இடங்களில் சில ஆலயங்களில் அமைந்து விளங்கக்-காணலாம்.

சிவலிங்கம்-சுயம்புலிங்கம், கணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம், என ஐந்து வகைப்படும். தானே தோன்றியது சுயம்புலிங்கம். விநாயகர் முருகன் முதலிய கணநாதர்களால் தாபிக்கப்பெற்ற லிங்கம் கணலிங்கம். பிரமன், திருமால் இந்திரன் முதலிய தேவர்களால் தாபிக்கப் பெற்றது தைவிகலிங்கம். அகத்தியர் வசிட்டர் முதலிய இருடிகளாலும், அசுரர் இராக்கதர் முதலியவர்களாலும் தாபிக்கப் பெற்றது ஆரிடலிங்கம் எனவும், மனிதர்களால் தாபிக்கப்பெற்ற லிங்கம் மானுடலிங்கம் எனவும் பெயர் பெறும்.

இவை கீழிலிருந்து முறையே ஒன்றுக்கொன்று சிறந்ததாகக் கூறப்படும்.

சிவாலயங்களில் சிவலிங்கப் பெருமானே மூலமூர்த்தியாக, அனைத்துப்பெருமைகளுக்கும் உரியவராக விளங்கியருள்கிருர்.

தேவாரம்

மண்ணெடுநீர் அனல்காலோ டாகாயம்
மதிஇரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும்
எண்திசையும்
பெண்ணினெடாண் பெருமையொடு சிறுமை
யுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா
விரும்பினனே.

— ஞானசம்பந்தர்

இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

— அப்பர்

திருமந்திரம்

இலிங்கம தாவது யாரும் அறியார்
இலிங்கம தாவது எண்திசை எல்லாம்
இலிங்கம தாவது எண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்தது உலகே.

— திருமூலர்

ஸ்ரீ மஹாலிங்காஷ்டகம்

பிரம்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மலபாஷித ஶோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம் 1

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்பவிநாசக லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம். 2

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம். 3

கனகமஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷஸுயக்ஞ விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம். 4


குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுஸோபித லிங்கம்
சஞ்ஜிதபாப விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம். 5

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்தி பிரவேசக லிங்கம்
தினகர கோடிப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம். 6

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம். 7

ஸுரகுருஸுரவர பூஜித லிங்கம்.
ஸுரவன புஷ்பஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மிக லிங்கம்
தத்ப்ரணமாமி சதாசிவ லிங்கம். 8

1. ஸ்ரீ சந்திரசேகரமூர்த்தி



(நாட்டரசன்கோட்டை)

(தியான சுலோகம்)

அபய வரத ஹஸ்தம் ஸௌம்ய ச்ருங்கார பாவம்
விபுல வதன நேத்ரம் சந்த்ர பிம்பாங்க மௌளிம் :
ருஜுதநு ஸமபாதஸ்தாநகம் வித்ருமாபம்
ஹரிண பரசு பாணிம் பத்மபீடோபரிஸ்தம்.

பொழிப்புரை : மானையும் மழுவையும் தரித்தவரும், அபயவரத ஹஸ்தம் உள்ளவரும் விரிந்த முகம் கண்கள் உள்ள வரும், இனி

மையான சிருங்காரக் குறிகளை உடையவரும் பவளம் போல் மேனி உள்ளவரும், பத்ம பீடத்தில் சமமாக பாதங்களை வைத்து நின்ற திருக்கோலத்தில் இருந்து அருளுகின்ற வரு மான பிறைஅணிந்த பெம்மானை வணங்கு கின்றேன்.

விளக்கம் :

தக்கன் தான்பெற்ற அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு மணம் முடித்துத் தந்தான். சந்திரன் தன் மனைவியருள் கார்த்திகை, உரோகிணி ஆகிய இருவரிடம் மட்டுமே மிக்க அன்பு செலுத்தி ஏனையோரைப் புறக்கணித்து வந்தான். இதனைத் தன் மகளிரால் அறிந்த தக்கன் சினந்து சந்திரன் நாளுக்கு ஒரு கலையாய்க் குறைந்து அழியக்கடவன் எனச் சாபம் கொடுத்தான். அச்சாபத்தால் தன் கலைகள் ஒவ்வொன்றாய்க் குறைந்து வருதலை அறிந்த சந்திரன் எஞ்சிய ஒரு கலையோடு சிவபெரு மானைச் சரணடைந்தான். தன்னைக்காப்பாற்று மாறு வேண்டினான். சிவபிரான் தன்னைச் சரணாக அடைந்த சந்திரனைக் தன் திருமுடி மீது தரித்து அவனைக் காத்துத் தக்கன் சாபத் தால் இழந்து வரும் கலைகள் தன் வரத்தால் வளர்ந்துவர அருள்புரிந்தார். சரண் அடைந்த சந்திரனை முடிமீது தரித்துக் காத்த காரணத் தால் சந்திரசேகரர் என வழங்கப்பெற்றார்.

தேவாரம்

"குறைவதாய குளிர்திங்கள்
சூடிக் குனித்தான்வினை
பறைவதாக்கும் பரமன்
பகவன் பரந்த சடை
இறைவன் எங்கள் பெருமான்
இடம்போல் இரும்பைதனுள்
மறைகள் வல்லார் வணங்கித்
தொழுகின்ற மாகாளமே"

(திருஞானசம்பந்தர்)

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

— அப்பர்

2. ஸ்ரீ உமா மகேசமூர்த்தி



(சீகாழி)

(தியான சுலோகம்)

தவளாப ஸுகாஸந ஸந்நிஹிதம்
ம்ருக டிம்பக டங்க வராபயதம்
ஸுமுகம் பரமுத்பலத்ருக் வரதம்
உமயா ஸஹிதம் ப்ரணமாமி பவம்.

பொழிப்புரை :- வெண்ணிறமுள்ளவரும், சுகாஸனமாக அமர்ந்திருப்பவரும், மான், மழு, வரத, அபய ஹஸ்தம் உள்ளவரும், ப்ரஸந்நமான முகத்தை உடையவரும், உத்பலத்தைக் கையிலுடையவரும், பார்வதி தேவியோடு கூடியவருமான ஸ்ரீ உமா மஹேச்சுவர மூர்த்தியை நமஸ்கரிக்கின்றேன்.

விளக்கம் :

உலகமாதாவாகிய உமையம்மை மலரும் மணமும் போலப் பிரிவின்றிச் சிவபெருமான்

ஐந்தொழில் இயற்றுவதற்குத் துணை நிற்பாள். ஐவகைச் சத்தியாய் நின்று உயிர்களை ஆட்கொண்டருளுவாள். ஐவகைச் சத்தி யாவார் - பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி ஆகியோராவர். பராசக்தி பக்குவமுள்ள உயிர்களுக்குக் கருணை யோடு அருள்புரிவார். ஆதிசக்தி உயிர்கட்குப் பொருள் நுகர்ச்சியையும், இச்சாசக்தி விருப்பத்தையும், ஞானசக்தி அறிவையும், கிரியாசக்தி செயலையும் தந்தருளுவர். இறைவன் உலகில் ஐந்தொழில் நிகழ்த்தியருளுவதற்கு உமையம்மையோடு கூடி நிற்கும் நிலையில் உமாமகேசுவரர் என வழங்கப்பெறுவார்.

தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு
யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே"

— திருஞானசம்பந்தர்

பெருந்திரு இமவான் பெற்ற
பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனி தன்பால்
அங்கொரு பாக மாகத்
திருந்திட வைத்தாற் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே

— அப்பர்

3. ஸ்ரீ இடபாரூட மூர்த்தி

(தியான சுலோகம்)

ஸவ்யே ஸ்யாத் வக்ர தண்டாந்வித கடககரம்
கோபதே: ப்பிருஷ்ட ஸம்ஸ்தம்
வாமஸ்யார்த்தம் ஸதக்ஷம் வரகரயுகளே
டங்கக் கிருஷ்ணம் ததாநம்
பாலஸ்தாக்ஷம் பிரசந்நம் திரிநயநஸஹிதம்
பத்தவேணீ கிரீடம்
வாமே கௌர்யாஸமேதம் நமத சுபகரம்
தம் வ்ருஷாருடமீசம்.

பொழிப்புரை : வளைந்த கோலுடன் கூடிய வலது கடக கரத்தோடும் வரதஹஸ்தத் தோடும், மான், மழு ஏந்திய கைகளோடும் நெற்றிக் கண்ணோடும் எப்பொழுதும் திருவருள் புரியும் நோக்கத்தோடும், ஜடாமகுடத்தோடும், இடது பாகத்தில் பார்வதியோடும் கூடிவிடை மேல் அமர்ந்திருக்கின்ற ஸ்ரீ இடபாரூடமூர்த் தியை நீங்கள் எல்லோரும் வணங்குவீர் களாக.



(ஆவுடையார்கோயில்)

விளக்கம் :

சிவபெருமானுக்குரிய வாகனமும், கொடி யும் இடபமாகும். 'ஊர்தி வால் வெள்ளேறே சிறந்த சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப' என்பது புறநானூறு. அறக்கடவுளே விடை யாக இருந்து இறைவனைத் தாங்கி வருகிறது என்பது மரபு. ஒருசமயம் தேவர்களின் வேண்டுகோட்படி திரிபுரத்தசுரர்களை அழிக்கச் சிவபெருமான் மேருவில்லை ஏந்தித் தேவர் படைத்த தேர்மீது ஏறிப் புறப்பட்டார். தேரின்

அச்சு முரிந்தது. திருமால் வெள்விடையாக உருவெடுத்துச் சிவபெருமானைத் தாங்கினர். அவர் என்னையன்றி எம்பெருமானைத் தாங்கிச் சுமப்போர் யாவருளர், என்று சிறிது இறுமாப்பு அடைந்தார். இறைவன் திருமாலின் செருக்கை அகற்றத் திருவுளம் கொண்டார். அடுத்தகணம் சிவபிரானைச் சுமக்க மாட்டாது விடை வடிவெடுத்த திருமால் செவி, வாய், மூக்கு வழியாக உதிரம் பெருகநிலத்தில் வீழ்ந்தார். தன் பிழை பொறுக்க வேண்டினர். தன்னையும் அறவிடையோடு மால் விடையாக ஏற்றருளக் கேட்டுக் கொண்டார். இறைவன் திருமால் வேண்டுகோளை ஏற்று அருள் புரிந்து அவரைத் தன் வெள்விடையாக ஏற்று அதன் மீது அமர்ந்து அருள்புரிந்தார்.

தேவாரம்

"தோடுடைய செவி யன்விடையேறி
யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி
யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்
பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மானி வனன்றே"

(திருஞானசம்பந்தர்)


மருவார் கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்துபூதப் படை சூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. —சுந்தரர்.

4. சபாபதி மூர்த்தி

(தியான சுலோகம்)

ஏகாஸ்யந்து சதுர்புஜம் த்ரிநயநம்
வாமேது துர்தூரகம்
சந்த்ரம் பத்ரசிகி ப்ரஸாரிதகரம்
சோர்த்வம் பதம்குஞ்சிதம்
ஸவ்யே ஸ்வஸ்திககுண்டலம் டமருகம்
கங்காபயே பிப்ரதம்
வந்தே கீர்ணஜபம் நடேசமநிசம்
ஹ்யபஸ்மார தேஹேஸ்திகம்.

பொழிப்புரை: ஒரு முகம் நான்கு கைகள் முக்கண் இவைகளை உடையவரும் தலையில் இடது பாகத்தில் ஊமத்தைப்பூ சந்திரன் இவைகளை உடையவரும், இடது மேல் கையில் ஜ்வாலாக்னி உடையவரும். நீட்டிய கீழ்க்கையை உடையவரும், தூக்கிய இடது காலை உடையவரும், வலதுபக்கத்தில் குண்டலம், உடுக்கை, அபயம் இவைகளை உடையவரும், தலையின் வலது பாகத்தில் கங்கையை உடையவரும், விரிந்த சடையை உடையவரும், அபஸ்மாரன் சரீரத்தில் ஊன்றியகாலை உடையவருமான ஸ்ரீ ஸபாபதிப் பெருமானை இடைவிடாது வணங்குகிறேன்.



(திருநல்லம்)

விளக்கம்:

சிவபெருமான் கொண்டருளிய திருக்கோலங்களில் சிறப்பு வாய்ந்தது நடராச மூர்த்தம். பெருமான் உயிர்களுக்குப் பெத்த முத்திகள் அருளுதற் பொருட்டுத் திருவைந்தெழுத்தையே திருமேனியாகக் கொண்டு ஐந்தொழிலியற்றும் ஆனந்தக் கூத்தைப் புரியும் இத்திருவுருவச் சிறப்பை வியவாதவர் இல்லை எனலாம். எண்டோள் வீசி இறைவனியற்றும் ஆனந்தக் கூத்திற்குச் சிறப்பாக உரிய இடம் சிதம்பரத் தலமாகும்.

பஞ்சாக்கரமே வடிவாகி அப்பரமன் கொண்டருளிய திருக்கோலத்தை உண்மை விளக்கம்.

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் — கூடும்
மகரம் உதாரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம்முகம் வாமுடியப் பார்."

என்று கூறுகிறது. ஆனந்தக் கூத்தனது அருளாடலை ஊன நடனம் எனவும் ஞான நடனம் எனவும் இருவகையாகக் கூறுவர். நடராசப் பெருமான் மூன்று திருக்கரங் களாலும், இரண்டு திருவடிகளாலுல் இயற்றும் ஐந்தொழிலை, உலகைத் தொழிற்படுத்தற் பொருட்டாகக் கொள்வதை ஊன நடனம் எனவும், ஞானிகளுக்கு அவ்வைந்தொழிலால் அருள் செய்வதை ஞான நடனம் என்றும் கூறுவர். இவற்றை உண்மை விளக்கம் பின்வரும் செய்யுட்களால் தெரிவிக்கின்றது.

"தோற்றம் துடியதனில்
தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில்
உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதற்தே நாடு"

என்பது ஊன நடனத்தைக் குறிப்பது இறைவனது துடியேந்திய கை உலகைப் படைத்தலையும், அபயமளிக்கும் கை காத்தலையும், அனல் ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும், எடுத்த பொற்பாதம் அருளலையும் புரிகின்றன் என்று கொள்வது ஊன நடனமாகும்.

தன்னை வழிபடும் ஞானிகளின் மாயை தனைத் துடியேந்திய கை உதறுவதாகவம், அனலேந்திய கை அதனைச் சுடுவதாகவும் ஊன்றிய திருவடி ஆணவத்தை அழுத்துவ தாகவும், எடுத்த திருவடி கருணையோடும் நேயத்தோடும் உயிரை ஆனந்தக் கடலில் அழுத்துவதாகவும் கொள்வது ஞான நடன மாகும்.

"மாயைதனை உதறி
வல்லினையைச் சுட்டுமலம்
சாய அழுக்கியருள்
தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில்
ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான்"

என்பன உண்மை விளக்கப் பாடல்கள்; அநாதியாகவே உயிர்களைப்பந்தித்துள்ள பாசங்களைப் போக்கி அவைகட்கு முத்தியருளுதற் பொருட்டு அருள்வடிவான அம்பிகை அருகில் இருந்து அத்திரு நடனத்தைக் கண்டு மகிழ்வார். இத்திரு நடனத்தைச் சிதம்பரத் தலத்தில் பதஞ்சலி வியாக்கரபாத முனிவர் காண இறைவன் காட்டியருளுகின்றார்.

தேவாரம்

"குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற்குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும்
வேண்டுவதே இந்தமாநிலத்தே"

—திருநாவுக்கரசர்

5. ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி



(திருவேள்விக்குடி)

(தியான சுலோகம்)

ஸிந்தூராபம் த்ரிணேத்ரம் யுகபுஜஸஹிதம்
ஹாரகேயூர பூஷம்
திவ்வையார் வஸ்த்ரைர் வ்ருதரங்கம் வரஸமு
சிதலஸத்
வேஷயுக்தம் சுபாங்கம்
வந்தே கல்யாணமூர்த்திம் கரதலகமலே
தேவிஹஸ்தம் ததாநம்
ஹஸ்தே டங்கம் ம்ருகஞ்ச
தததமதவரம் பத்தகங்கேந்துசூடம்.

பொழிப்புரை: சிவந்த காந்தி உள்ளவரும், முக்கண்ணரும், நான்கு கைகளோடு கூடியவரும், மாலை தோள்வளை முதலிய ஆபரணங்களைப் பூண்டவரும், உயர்ந்த வஸ்த்ரங்கள் உடுத்தியவரும் கல்யாண கோலம் பூண்டவரும், நிலவுலாவிய நீர்மலி வேணியை உடையவரும், வரதம், பரசு, மான், இவைகளை தரித்தவரும், வலது கையால் உலகமாதாவான பார்வதி அம்மையாரின் வலக்கையைப் பிடித்துத் திருமணம் செய்து கொண்டவருமான ஸ்ரீ கல்யாண சுந்தரப் பெருமானை வணங்குகின்றேன்.

விளக்கம்:


உமையம்மை இமவான் மகளாகப் பார்வதி என்னும் திருப்பெயரோடு தோன்றி வளர்ந்தாள். உரிய வயதடையும் போது சிவபெருமானை மணம்புரிந்து கொள்ளுதற்குக் கடுந்தவம் மேற்கொண்டாள். பெருமான் கிழவேதியர் வடிவம் கொண்டு அம்மையிடம் சென்று திருவிளையாடல் புரிந்து முடிவில் விடைமீது காட்சிதந்து அவரை மணம்புரிந்து கொள்ளுவதற்கு உடன்பட்டு அருள்புரிந்தார். முறைப்படி முனிவர்களை இமவானிடம் அனுப்பி மணம் பேசிவரச் செய்து ஓர் பங்குனி உத்திர நாளில் தேவர்கள் முனிவர்கள் அனைவரும் புடைசூழ எழுந்தருளி இமவான், மேனை இருவரும் தம் மகளைக் கைப்பிடித்துத்தர திருமாங்கல்யம் அணிவித்து திருமணம் புரிந்து கொண்டருளிய திருக்கோலத்தில் எழுந்தருளிய நிலையில் கல்யாண சுந்தரர் என வழங்கப் பெற்றார். இறைவன் உயிர்கட்கு போக மோட்சங்களைத் தந்தருளக் கொண்ட கோலம் இதுவாகும்.

தேவாரம்

"குரும்பைமுலை மலர்க்குழலி
கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன்
குணத்தினை நன்கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை
வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன்
மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ
அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும்
அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலருங்
கலயநல்லூர் காணே"

(—சுந்தரர்)

6. ஸ்ரீ பிக்ஷாடன மூர்த்தி



(திருவேள்விக்குடி)

(தியான சுலோகம்)

சுக்லாபம் சுபலோசனம் டமருகம்
தூர்வாங்குரம் தக்ஷிணே
வாமே சூல கபால ஸம்யுதகரம் ஸத்பாதுகம்
பாதயோ:
லம்பத் பிங்க ஜடாதரம் சசிதரம் தக்ஷே
ம்ருகம் வாமகே
பிக்ஷா பாத்ரதரம் சகுண்டபிடரம்
பிக்ஷாடனேசம் பஜே.

பொழிப்புரை : வெண்மைநிறம், அழகான கண்கள் இவைகளை உடையவரும் வலது மேற்கையில் உடுக்கு கீழ்க்கையில் அறுகு இவைகளை உடையவரும் வலது பாகத்தில் நிற்கின்ற மானை உடையவரும், இடது கையில் சூலம் பிக்ஷாபாத்திரம் இவைகளைத் தாங்கியவரும், தொங்குகின்ற செஞ்சடையை உடையவரும் பானைபோல் வயிற்றை உடையவருமான ஸ்ரீ பிக்ஷாடன மூர்த்தியை ஸேவிக்கின்றேன்.

விளக்கம் :

தாருகாவன முனிவர்கள் சிவபக்தியில்லாதவராய், வேள்வி யொன்றே முக்தியளிக்க வல்லது என்ற எண்ணமுடையவராய் எண்ணற்ற வேள்விகளை இயற்றி வந்தனர். பெருமான் முனிவர்களுக்கு அறிவு புகட்டுதற் பொருட்டுத் திருமால் மோகினியாய்ப் பின்வரத், தாம் அம்மோகினிக்கேற்ற அழகிய மணாளராய்க் கையில் கபாலமும் சூலமும் ஏந்தித் திகம்பரராய்த் தாருகாவனம் சென்றார். முனிவர்கள் வாழும் அவ்விடத்தை அடைந்தவுடன் மோகினியை ஓரிடத்தில் இருக்கச் செய்து பெருமான் பண்ணோடு இசைபாடிக் கொண்டு பலியேற்று முனிவர் இல்லங்களுக்குச் சென்றார். முனிவர்களின் மனைவியார் அனைவரும் பிக்ஷாடனராய் வந்த பெருமானது வடிவழகில் ஈடுபட்டுக் காமநோயால் துன்புற்றனர் அவ்வாறே முனிவர்கள் பலரும் மோகினியின் பேரழகில் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்து தவநெறி தவறி விளக்கைக்கண்ட விட்டில்கள் போலாயினர். முடிவில் பெருமான் மோகினியை அடைந்தார். முனிவர்கள் தங்களது தவநெறியையும் தங்கள் மனைவியரின் கற்புநெறியையும் அழித்தவர்சிவபெருமானே என்றறிந்து அவரைக் கொல்ல ஆபிசார வேள்வி புரிந்து அதில் தோன்றிய புலி, பாம்பு, யானை, மான் முதலியவற்றைச் சிவபெருமான் மீது ஏவினர். பெருமான் அவற்றைக் கொன்றும் அணிகலனுக ஏற்றும் எழுந்தருளியிருந்தார். பெருமான் திகம்பரராய்த் தாருகாவனம் சென்ற திருக்கோலத்தையே பிக்ஷாடனத் திருஉருவமாக நாம் கொண்டாடி வழிபடுகிறோம்.

தேவாரம்

"சூட்டல்வெண் பிறையினர் சுடர்முடியர்
சுண்ணவெண் ணீற்றினர் சுடர்மழுவர்
பாடல்வண் டிசைமுரல் கொன்றையந்தார்
பாம்பொடு நூலவை பசைந்திலங்கக்
கோடனன் முகிழ்விரல் கூப்பிநல்லார்
குறையுறு பலியெதிர் கொணர்ந்து பெய்ய
வாடல்வெண் டலைபிடித் திவராணீர்
வாய்மூ ரடிகள் வருவாரே."
—(திருஞானசம்பந்தர்)

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேருந்தலைவனைத்
தலையே நீ வணங்காய்
—அப்பர்

7. ஸ்ரீ காமதகன மூர்த்தி

(தியான சுலோகம்)

பஸ்மோத்தூளித விக்ரஹம் சசிதரம் கங்கா
பணீமண்டிதம்
டங்கம் க்ருஷ்ணம்ருகம் ததாநமமலம்
வீராஸநே ஸுஸ்திதம்
அங்கே ஸவ்யகரே பரம்கரதலம் விந்யஸ்ய
யோகேரதம்
வ்யாகர த்வக்வஸநம் லலாடஜத்ருசா
தக்தஸ்மரம் த்வாம் பஜே.

பொழிப்புரை : திருநீறுபூசிய திருமேனியுடன் சந்திரனைத் தாங்கி கங்கை ஸர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்டு, மழுமான் ஏந்தி, வீராஸனத்திலிருந்து, மடியில் வலது கைமேல் இடது கையை வைத்துக் கொண்டு, யோகத்திலமர்ந்து, புலித்தோலாடை அணிந்து, நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்த உன்னை வணங்குகிறேன்.

விளக்கம் :

உமையம்மை சிவபெருமானைப் பிரிந்து இமவான் மகளாகப் 'பார்வதி' என்னும் திருப்

பெயரோடு தோன்றி வளர்ந்து பெருமானைத் திருமணம் புரிந்து கொள்ளத் தனித்திருந்து தவம் செய்து வந்தாள். பெருமான் சனகாதி முனிவர்களுக்காகக் கணப்போது யோகியாயி ருந்தார். அவ்வொருகணம் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல யுகங்களாயின. பெருமான் உமையம்மையைப் பிரிந்து இருந்ததால் உயிர் களனைத்தும் ஆண் பெண் உறவின்றியிருந்-தன. உலக வளர்ச்சி தடைப்பட்டு நின்றது. இந்திரன், நான்முகன், திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் கூடிப் பெருமானை அம் மையோடு கூட்டினலன்றி உய்தியில்லை என உணர்ந்து மன்மதனை அழைப்பித்துச் சிவ பெருமான் யோகநிலை நீங்கிப் பார்வதிதேவி யை மணம்புரிந்து கொள்ளுமாறு காமஉணர் வூட்டும் மலர்க்கணைகளை அப்பெருமான் மீது செலுத்துக எனப்பணித்தனர். மன்மதன் முத லில் மறுத்தான். பின் நான்முகன் முதலியோர் சாபத்தால் உயிரிழப்பதைக் காட்டிலும் பெரு மான் மீது மலர் அம்பு தொடுத்து மாள்வது மேல் என முடிவு செய்து ஐம்மலர்க்கணை ஏந்தித் தென்றல் தேர் ஏறித் திருக்கோயிலை நோக்கிச் சென்ருன். இறைவன் பணித்த வண்ணம் நந்திதேவர் மன்மதனை மேல்புற வாயில் வழியாக உள்ளே செல்க எனப்பணித் தார். காமன் முதலில் மயங்கினுன். இரதிதேவி தேற்றத் தெளிந்தான். கரும்பு வில்லில் சுரும்பு நாண் ஏற்றிப் பஞ்ச பாணங்களைப் பரமன் மீது தொடுத்தான். மலர்க்கணைகள் பட்ட அளவில் பெருமானது நெற்றி விழி திறந்தது. மன் மதன் நீருனுன். இரதிதேவி புலம்பிப் பெரு மானைத் துதித்தாள். பார்வதிதேவியை பெரு மான் மணம் புரிந்து கொண்ட நாளில் மன் மதன் இரதிக்கு மட்டும் உருவுடையவனுக வும் எனையோர்க்கு உருவமற்ற அனங்கனுக வும் இருந்து அவன் தன் தொழிலைச் செய்து வர அருள்புரிந்தார்.

இறைவன் காமனை எரித்ததால் காமதகன மூர்த்தி எனப் பெறுவார். இறைவனது எட்டு வீரச் செயல்களில் இது ஒன்ருகக் கூறப்படும் இவ்வாறு நிகழ்ந்த இடம் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்துள்ள குறுக்கை என்னும் தலமாகும்.

தேவாரம்


“கழைபடு காடுதென்றல் குயில்கூவவஞ்சு
 கணையோ னணைந்து புகலும்
மழைவடி வண்ணனெண்ணி மகவோனைவிட்ட
 மலரான தொட்ட மதனன்
எழில்பொடி வெந்துவீழவிமையோர் கணங்கள்
 எரியென்றி றைஞ்சி யகலத்
தழல்படு நெற்றி யொற்றை நயனஞ்சிவந்த
 தழல்வண்ண னெந்தை சரணே”
(-திருநாவுக்கரசர்)

8 ஸ்ரீ காலஸம்ஹாரமூர்த்தி

(தியான சுலோகம்)

ஸிந்தூராபம். த்ரிணேத்ரம் யுகபுஜஸஹிதம்
 ஹ்யுத்ருதம் சூல்ஹஸ்தம்
பாசம் ஸூசிவஹந்தம் பரசுமபிததா
 பீஷ்மதம்ஷ்ட்ரம் ஸுவக்த்ரம்
பாதம் குஞ்சித வாமமுதெருததலம்
 காலஸ்ய வக்ஷஸ்ஸ்தலே
ந்யஸ்த்வா பிந்நஜடாதரம் பசுபதிம்
 காலாந்தகம் நௌம்யஹம்.

பொழிப்புரை : சிவந்த நிறமுள்ளவரும், முக் கண்ணரும், நான்கு கைகளோடு கூடியவரும், சூலமேந்திய உயர்த்திய கையை உடைய வரும், பாசம், மழு ஏந்தியவரும், அகோர மான கோரைப்பற்களை உடையவரும் விரிந்த சடையை உடையவரும், யமனுடைய மார்பில் இடது காலை வைத்து யமனை ஸம்ஹரித்தவரு மான ஸ்ரீ காலஸம்ஹார மூர்த்தியைத் தொழு கின்றேன்.



(திருக்கடவூர்)

விளக்கம் :


மிருகண்டு முனிவர் தன் மனைவி மருத்துவதியோடு காசியை அடைந்து கங்கை நீராடி மகப்பேறு வேண்டித் தவம் செய்தார். பெருமான் அவர்கள் முன்தோன்றி தீய குணங்களோடு நூறுண்டு வாழும் புதல்வன் வேண்டுமா? நற்குணங்களோடு பதினாறு ஆண்டு வாழும் மகன் வேண்டுமா? என்றார். முனிவர் வயது குறைந்தாலும் நற்குணங்களுடைய மகனாகத் தருமாறு வேண்டினார். பெருமான் அவர் வேண்டியவாறு வரமளித்து மறைந்தார் முனிவர் மனைவி கருவுற்றாள். இறைவன் அருளியவாறே மைந்தன் பிறந்தான். மார்க்கண்டேயர் எனப் பெயரிட்டனர். மார்க்கண்டேயர் உரிய பருவத்தில் எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்து சிவபரம்பொருளே மெய்ப் பொருள் எனத் தெளிந்தார் வயது ஏற ஏறப் பெற்றோர் தம் மைந்தரைக் காணும்போது மிக்க மனக் கவலையை அடைந்து வந்தனர். மார்க்கண்டேயர் தாய் தந்தையின் மனக்கவலைக் குரிய காரணத்தைக் கேட்டறிந்து பெருமான் திருவருளால் காலனை வெல்வேன் கவலைப்படாதீர்கள் எனப் பெற்றோர்க்கு ஆறுதல் கூறிப் பல தலங்கட்கும் சென்று இறைவனை வழிபட்டுத் திருக்கடவூர் வந்தார். அபிராமி அம்மை உடனாக விளங்கும் அமுதகடேசுரரைப் பூசித்துக் கொண்டிருந்தார். அவரது வாழ்நாள் முடிந்ததை அறிந்த இயமன் தன் தூதர்களை அனுப்பி மார்க்கண்டேயரின் உயிரைக் கவர்ந்து வருமாறு பணித்தான். தூதர்கள் அவர் உயிரைக் கவர்ந்து வரும் வலியில்லாதவராய்த் திரும்பினார்கள். இயமன் சினந்து தானே தன் வாகனமாகிய எருமைக் கடா மீது ஏறிப் புறப்பட்டுச் சென்றான். மார்க்கண்டேயர் பெருமானைப் பூசித்து இருப்பதையும் மதியாது அவர்மீது காலபாசத்தை வீசினான். மார்க்கண்டேயர் அஞ்சிச் சிவபெருமானை ஆரத்தழுவினர். பெருமான் 'அஞ்சற்க' என்று கூறிச் சிவலிங்கத்திலிருந்து சினந்து தோன்றி இயமனை இடது காலால் உதைத்தருளினார். இமைப்போதில் இயமன் இறந்தான். மார்க்கண்டேயருக்கு என்றும் சிரஞ்சீவியாய் வாழும் வரத்தை அருளினார். பின்னர் பூமிதேவி வேண்ட இயமனை எழுப்பி அருள் புரிந்தார். மார்க்கண்டேயருக்காக இயமனை உதைத்தருளிய மூர்த்தி கால சம்ஹாரமூர்த்தி எனப்படுவார். இவர் சந்நிதியைத் திருக்கடவூரில் காணலாம.

தேவாரம்

"அந்தணாளனுள் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன்ற னுருயி ரதனை
வவ்வினாய்க்குன்றன் வண்மை
கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன்மற்றென் னடியா னெனவிலக்கும்
சிந்தையால் வந்துன்றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப்புன் கூருளானே."

அப்பர்

9. ஸ்ரீ திரிபுராந்தகமூர்த்தி



(திருவதிகை)

(தியான சுலோகம்)

ரக்தாபம் பரிபூர்ண சந்த்ரவதனம் க்ருஷ்ணம் ம்ருநகம் கார்முகம்
வாமே ஸவ்யகரே சரஞ்ச ததம் டங்கஞ்ச தேவ்யாயுதம்:
கங்காசந்த்ர கலாதரம் ஹரிவிரிஞ்சாத்யை ஸ்ஸதா ஸேவிதம்
ஹாஸைர் தக்த புரத்யம் த்ரிபுவனுதீசம் புராரிம் பஜே.

பொழிப்புரை : சிவந்த நிறத்துடன் பூர்ண சந்த்ரன் போன்ற முகத்தை உடையவரும், இடப்பக்கம் உள்ள கைகளில் மான், வில்லை யும் வலப்பக்கம் உள்ள கைகளில் அம்பு, மழுவையும் ஏந்தி உள்ளவரும் கங்கையையும் சந்த்ரகலையையும் தாங்கியவரும், விஷ்ணு பிரும்மா முதலியவர்களால் எப்பொழுதும் ஸேவிக்கப்படுபவரும் சிரிப்பினுலேயே முப்புரங் களையும் எரித்தவருமான த்ரிபுராந்தகப் பெரு மானை ஸேவிக்கின்றேன்.

விளக்கம் ;

தாரகாசுரனின் மைந்தர்களாகிய தார காட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூவரும் பிரமனை நோக்கிப் பெருந்தவம் புரிந்தனர். நான்முகன் அவர்கட்குக் காட்சி நல்கினுர். அசுரர் மூவரும் அயனிடம் அழியா வரம் வேண்டினர். பிரமன் ஈறிலாதவன் ஈசன் ஒருவனே யாவன், ஆகலின் அவ்வரம் ஒழித்து வேறு ஏதேனும் விரும்பினுல் கேளுங்கள் என்றுர். அவுணர் கணங்களாய மூவரும் மூவுலங் கட்கும் சென்றுவரும் பொன், வெள்ளி இரும்புக் கோட்டைகள் அருளவேண்டும் எனவும், அக்கோட்டைகள் சிவபெருமான் ஒருவராலன்றிஏனையோரால் அழித்தற்கியலாத வாறிருத்தல் வேண்டும் எனவும் கேட்டனர். பிரமன் அவர்கள் வேண்டியவாறே மூன்று கோட்டைகளை அருளிமறைந்தர். அவர்கள் மூவரும் அக்கோட்டைகளைப் பெற்று மூவுலகங்களுக்கும் சென்று இடர்விளைத்து வந்தனர். தேவர்கள் திரிபுரத்து அசுரர்களின் கொடுமைகளுக்கு ஆற்ருது சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனர். பெருமான் அவர்களுக்குக் காட்சி அளித்து அம் மூவரும் நம் அடியவராதலின் அவர்களை அழித்தல் கூடாது என்று கூறி மறைந்தார். திருமால் புத்தவடிவு கொண்டு திரிபுரார் களிடம் சென்று மருட்டிப் பிடக ஆகமத்தைப் போதித்து அவுணர் கூட்டத்தில் மூவரைத் தவிர ஏனையோரைப் பௌத்தராக்கினுர். சிவ பெருமானிடம் சென்று திரிபுரத்தசுரனை அழித்துத் தேவர்களுக்கு நல்வாழ்வு அருள வேண்டினுர். சிவபெருமான், திரிபுரதகனம் செய்யத் தேர்மீது ஏறிப்புறப்பட்டார். உலகம் தேர், மந்திர மலை அச்சு, சந்திர சூரியர் சக்கரங்கள், எட்டு மலைகள் தூண்கள், நான்கு வேதங்கள் குதிரைகள். பிரமன்சாரதி, மேரு வில், வாசுகிநாண், திருமால் அம்பு, அக்னி அம்புநுனி, தேவர்கள் தேரின் அங்கங்கள். இவ்வாறமைந்த தேர்மீது ஏறினுர். அச்சு முரிந்தது. பிரமன் விநாயகரை வேண்ட அச்சு முன்போலாகியது. இறைவன் தேர்மீது ஏறிச் செல்லும் போது தேவர்கள் அனைவரும் தம் துணையாலேயே திரிபுரங்களை அழிக்கும் செயல் நிகழப் போகிறது என்று எண்ணினர். அதனை உணர்ந்த சிவபெருமான் சிறிய தொழு நகை செய்தார். முப்புரங்கள் பொடியாயின. தேவர்கள் இறைவனது பேராற்றலையும் தம் அறியாமையையும் எண்ணிவருந்தினர். திரிபுர தகனத்தில் மூவர் உயிர்பிழைத்து இறைவனைச் சரணடைந்தனர். பெருமான் அவர்களில் இருவரை வாயிற்காவலராகவும் ஒருவரைக் குடமுழா முழக்கவும் அருள் புரிந்தார்.

தேவாரம்

''கல்லாநிழற் கிழாயிடர் காவாயென வானோ
எல்லாமொரு தேராயயன் மறை பூட்டினின் றுய்ப்ப
வல்வாயெரி காற்றீர்க்கரி கோல் வாசுகி நாண்கல்
வில்வாலெயி லெய்தானிடம் வீழிம் மிழலையே''

— திருஞானசம்பந்த

10. ஸ்ரீ சலந்தராரி மூர்த்தி

(தியான சுலோகம்)

ரக்தாபமுக்ர கமனம் த்ரிவிலோ சனுட்யம்
டங்காஸி க்ருஷ்ண ம்ருகசாப ஸுசோபி ஹஸ்தம்
பூமிஸ்த சக்ர தரணோத்க ஜலந்தரஸ்ய
கண்டக்ன மாபஜ ஜலந்தர ஹரஸ்வரூபம்.

பொழிப்புரை :- சிவந்த நிறமும் வேக மான நடையும் முக்கண்ணும் உள்ளவரும், மழு, கத்தி, மான், வில் முதலிய வைகளால் பிரகாசிக்கின்ற கைகளை உடையவரும், பூமியில் இருக்கின்ற சக்கரத்தைத் தரிப்பதில் ஆவல் கொண்ட சலந்தராசுரனின் கழுத்தைக் கொய்த வருமான சலந்தராரிப் பெருமானைத் துதிக்கின்றேன்.

விளக்கம்

தேவேந்திரன் ஒருநாள் திருக்கயிலைமால் வரைக்குச் சென்றான், பெருமான் வடிவம்மாறி வழியில் நின்றார். இந்திரன் அவரை நோக்கி நீயார்? எத்தொழில் செய்கிறாய்? என்றான். தன் வச்சிராயுதத்தினால் தாக்கினான். வச்சிரா யுதம் பொடியாயுதிர்ந்தது. பெருமான மிக்க சினத்தோடு உருத்திரவடிவு எடுத்தார் இந்திரன் அஞ்சி நடுங்கினான். பிழைபொறுத் தருள வேண்டினான். பெருமான் சினம் தணிந்து தன் வியர்வை நீரை வழித்து எறிந்தார். அது மேற்றிசைக் கடலில் விழுந்து அசுரச்சிறுவனாய் உருவெடுத்தது. கடலரசன் அச்சிறுவனை மகன்மை கொண்டு வளர்த்தான். சலந்தரன் எனப் பெயரிட்டான். சலந்தரன் அழகில் வளர்ந்து சிறந்து விருத்தையை மணந்து தேவர்களை அழிக்கப் புறப்பட்டான். இந்திரன் பெருமானைச் சரணடைந்தான். முடிவில் திருக்கயிலையை அடைந்த சலந்திரன் சிவபெருமானையே போருக்கு அழைத்தான். பெருமான் வயது முதிர்ந்த கிழவராய்ச் சலந்தரன் முன் சென்றார், இறைவனை வெல்லுதல் இயலாது "திரும்பிச்செல்" எனக் கூறினார். சலந்தரன் மறுத்தான். கிழவராய் வந்த பெருமான் திருவடியால் நிலத்தில் சக்கரம்போல் கீறி இதனை எடுக்க உனக்கு ஆற்றலுண்டானால் இறைவனை வெல்லுவது உறுதி என்றார். சலந்தரன் கிழவர் நிலத்தில் கீறிய சக்கரத்தைப் பெயர்த்துத் தன் தலைமீது வைத்துக் கொண்டான். அக்கணமே அச்சக் கரம் சலந்தரன் தலையை இருகூறாகக் கீறிப் பெருமான் திருக்கரத்தை அடைந்தது அசுரர்கணம் அழிந்தது. இந்திரன் முதலானோர் இறைவனது கருணையை வாழ்த்திப் பணிந்தனர். இறைவன் சலந்தரனைக் கொன்றருளியதலம் திருவிற்குடி வீரட்டமாகும்.

தேவாரம்

"ஆருமெதி ராதவலி யாகியச
 லந்தரனை ஆழியதனால்
ஈரும்வகை செய்தருள்
 புரிந்தவனிருந்தமலை தன்னைவினவில்
ஊருமரவம் மொளிகொண்
 மாமணியுமிழ்ந்த வையு லாவிவரலால்
காரிருள்கடிந்து கனகம்மென விளங்கு
 காளத்திமலையே".

(— திருஞானசம்பந்தர்)

11. ஸ்ரீ மாதங்காரி மூர்த்தி



(வழுவூர்)

(தியான சுலோகம்)

ஸ்தித்வா ஹஸ்தி சிரஸ்த தக்ஷசரணம்
வாமாங்க க்ஷோத்ருதம்
புச்சோர்த்வாவ்ருத சர்ம உத்ருதகரம் சூலாஸி
சருங்கோஜவலம்
டங்கம் கருஷ்ணம் தரம் வரகரம்
பீஷ்மாநநேந்துப்ரபம்
வாமோமாதி பயோர்ந்முகீ ஸுதயுதம்
ஸூச்யாட்ய ஹஸ்தம் ஹரம்.

பொழிப்புரை : யானையின் தலையில் ஊன்றிய திருவடியை உடையவரும், இரண்டு கைகளால் விரிக்கப்பட்ட யானைத்தோலை உடையவரும், மேலே இருக்கின்ற யானையின் வாலை உடையவரும், சூலம் உடையவரும், சூலம், கத்தி, தந்தம், மான்மழு இவைகளோடு கூடியவரும் ஸூசி ஹஸ்தத்துடன் கூடிய வரும் இடது பாகத்தில் பயத்துடன் கூடிய பார்வதியோடு கூடியவருமான ஸ்ரீ மாதங்காரி மூர்த்தியை வணங்குகிறேன்,

விளக்கம் :

யானைவடிவுடைய கயாசுரன் என்பவன் மேருமலையிற் சென்று பிரமனைக் குறித்துத் தவம் செய்தான், பிரமன் அவன் முன்தோன்றி அவன் விரும்பும் வரங்களைக் கொடுத்து, அன்பனே சிவபெருமானை எதிர்த்துப் போரிட முயல்வாயாயின் இவ்வரங்கள் அழிவடையும் என்று கூறி மறைந்தார். கயாசுரன் சிவ பெருமான் அல்லாத ஏனைய தேவர்களுடன் போர் செய்து அவர்களை வெற்றி கொள்ளலாம் என்று புறப்பட்டு, தேவர்கள் அனைவருடனும் போர் செய்து வென்றான். அவுணர்களுடனும் போரிட்டு வாகை சூடினான். பின் தவவலி படைத்த முனிவர்களை எதிர்த்தான், முனிவர்கள் அஞ்சிக் காசி சென்று விசுவநாதரைச் சரணடைந்தனர்.

கயாசுரன் காசி சென்று மணிகர்ணிகையை அடைந்து விசுவநாதர் கோயிலை அணுகி முனிவர்களைப் போருக்கழைத்தான். பெருமான் முனிவர்களைக் காக்க உக்கிரவடிவு கொண்டு உடுக்கை சூலம் ஆகியவற்றைத் திருக்கரங்களில் ஏந்தி எழுந்தார். திருவடியால் கயாசுரனை உதைத்தருளினார். கயாசுரன் பூமியில் விழுந்தான். பின்பு அவர் தமது திருக்கரத்தின் நகத்தால் அவனது முதுகைப் பிளந்து தோலை உரித்துப் போர்த்தியருளினார். இத்திருகோலமே மாதங்காரி எனப் பெயர் பெறுவதாயிற்று. தாருகாவன முனிவர்கள் செய்த வேள்வியினின்று எழுந்து தன்னைக் கொல்ல வந்த யானையைப் பெருமான் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்த தாகவும் இச்செயல் நிகழ்ந்த தலம் வழுவூர் வீரட்டம் எனக் கூறப்பெறுதலுமுண்டு. வழுவூரில் கஜசம்கார மூர்த்தி சிறந்து விளங்குகிறார்.

தேவாரம்

"விரித்தபல் கதிர்கொள்சூலம்
வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோலகால
பயிரவனாகி வேழம்
உரித்துமை யஞ்சக்கண்டு
ஒண்டிருமணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே."

12. ஸ்ரீ வீரபத்ரமூர்த்தி



ஆவுடையார்கோயில்)

(தியான சுலோகம்)

சதுர்புஜம் த்ரிணேத்ரஞ்ச ஜடாமகுட ஸம்
யுதம்
தக்ஷிணே கட்க பாணஞ்ச வாமே சாப
கதாதரம்
தம்ஷ்ட் ராகராளவதனம் பீமம் பைரவ
கர்ஜிதம்
பத்ரகாளி ஸமாயுக்தம் கராளம் ஹ்ருதி
பாவயே.

பொழிப்புரை நான்கு கைகள் உள்ள வரும், முக்கண்ணரும், சடாமகுடத்தோடு கூடியவரும், வலப்பக்கம் உள்ள கைகளில் கத்தியையும் அம்பையும் இடப்பக்கம் உள்ள கைகளில் வில்லையும் கதையையும் தாங்கிய வரும், தித்திப் பல்லால் பயங்கரமான முகம் உள்ளவரும், பயங்கரமாகக் கர்ஜிக்கின்ற வரும் பத்ரகாளியோடு கூடியவருமான ஸ்ரீ வீர பத்ரப் பெருமானை ஹ்ருதயத்தில் தியானிக் கின்றேன்.

விளக்கம் :

காசிப முனிவரின் மனைவியாகிய திதி, அதிதி ஆகியோரின் புதல்வர்களாகிய தேவர் களும், அசுரர்களும் தம்முள் தீராப்பகை கொண்டவர். அடிக்கடி அவர்களுக்குள் சண் டை மூண்டது. தேவர்கள் இந்திரன் தலைமை யில் அவுணர்களை வென்று வந்தனர். தோல் வியுற்று வந்த அவுணர்கள் தங்கள் குலகுரு வாகிய சுக்கிரனிடம் தங்கள் குறையைத் தெரி வித்தனர். சுக்கிரன், வீரமார்த்தாண்டன் என்பவனே அமரரை வெற்றி கொள்ளத் தக்க வன், 'பிரமனை மனத்தில் இருத்தித் தவம் செய்து வலிமை பெற்று அமரரை வெல்க' எனப்பணித்தார். வீரமார்த் தாண்டான் அருந் தவம் மேற்கொண்டான். பிரமன் வெளிப்பட்டு மூவுலகிலும் உன்னை வெல்வாரில்லா வரம் தந்தேன் என்று கூறினர். வீரமார்த்தாண்டன் வணங்கி விடைபெற்று அமரர் உலகடைந்து தேவரைச் சிறைசெய்து அரசாளத் தொடங்கி னன். துயருற்ற தேவர்கள் திருக்கயிலாயம் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் அமரர்களுக்கு அபயமளித்து வீரபத்திரரை விளித்து வீரமார்த்தாண்டனை எதிர்த்துப் போர் செய்யச் செய்தார். அவன் செய்த மாயைகள் பலவற்றையும் மாற்றி இறு தியில் வீரமார்த்தாண்டனைக் கொன்று தேவர் கள் துயர்தீர்த்து தேவர்களுக்கும் மறுவாழ் வருளிக் கயிலை சென்று தமது வெற்றிச் செய லைச் சிவபெருமான் பால் விண்ணப்பித்தார். வீரமார்த்தாண்டனைச் சங்கரிக்கச் சிவபெரு மான் அனுப்பிய கோலமே வீரபத்திரமூர்த்தம். தக்கன் வேள்வியைச் சிதைத்து வருமாறு அனுப்பப் பெற்ற வரும் இவரேயாவர். அகோர வீரபத்திரர் என இம்மூர்த்தம் கூறப்பெறும்

தேவாரம்

"எச்சனிணைத் தலைகொண்டார்
பகன்கண் கொண்டார்
இரவிகளி லொருவன்
பல்லிறுத்துக் கொண்டார்
மெச்சன் வியாத்திரன்
தலையும்வேறுக் கொண்டார்
விறலங்கிகரங் கொண்டார்
வேள்வி காத்து
உச்சநமன் தாளறுத்தார்
சந்திரனை யுதைத்தார்
உணர் விலாத்தக்கன்றன்
வேள்வி யெல்லாம்
அச்சமற அழித்துக்
கொண்டருளுஞ் செய்தார்
அடியேனையாட் கொண்ட அமலர்தாமே."
(- திருநாவுக்கரசர்)


13. ஸ்ரீ அரியர்த்தமூர்த்தி

(தியான சுலோகம்)

ஸவ்யாங்கே வித்ருமாபம் சசிதர மகுடம்
பஸ்மருத்ராக்ஷ பூஷம்
வாமாங்கே ச்யாமளாபம் மணிமகுடயுதம்
பீதவஸ்த்ராதி சோபம்
ஸவ்யே டங்கரபயம் ஸ்யாதிதர கரயுகே
சங்க கௌமோதகீச
கிஞ்சில் லால டதேத்ரம் ஹரிஹர
வபுஷம் ஸந்ததம் நௌமிசம்பும்

பொழிப்புரை : வலப்பக்கத்தில் சிவப்பு நிறமும் சந்திர கலையுள்ள மகுடமும் விபூதி உருத்திராக்ஷம் உள்ளவரும் இடப்பக்கத்தில் கருப்பு நிறமும் மணிமகுடமும் பீதாம்பரம்

தரித்தவரும், வலப்பக்கத்தில் உள்ள கைகளில் மழு, அபயமுத்திரை உள்ளவரும் இடப் பக்கம் உள்ள கைகளில் சங்கும் கௌமோதகி என்ற கதையைத் தாங்கியவரும் கொஞ்சம் தெரிகின்ற நெற்றிக்கண்ணை உடைய வருமான அரியர்த்த மூர்த்தியை இடைவிடாது வணங்குகின்றேன்.



(சங்கரன்கோவில்)

விளக்கம் :


திருமால் ஒருகாலத்தில் சிவபெருமானை நோக்கிக் கடும் தவம் புரிந்தார். பெருமான் அச்சுதன் செய்த அரிய தவத்திற்கிரங்கிக் காட்சியளித்து அவருக்குத் தேவாசுரர்களால் அழித்தற்கரிய ஆற்றலையும், எத்தகையோரை யும் மயக்கத்தக்க மாயையையும், அருளி அவரைத் தம் சக்தியாக இடப்புறத்தில் ஏற்றருளி 'அரியர்த்தர்' எனத் திருப்பெயர் கொண்டார். பெண் வடிவில் பார்வதியாகவும், ஆணுருவில் விஷ்ணுவாகவும், கோபவடிவில் காளியாகவும், போர் முனையில் துர்க்கை யாகவும் இருக்கும் வரம் பெற்றார். திருமாலைச் சிவபெருமான் இடப்பாகத்தில் கொண்ட நிலையில் 'அரியர்த்தர்' எனவும், 'கேசவார்த்தர்' எனவும் வழங்கப் பெற்றார் வலப்பாகத்தில் செந்நிறமுடைய சிவபெருமான் மழுவேந்தி விளங்கவும் இடப்பாகத்தில் திரு மால் பசுமை நிறத்தில் சக்கரம் ஏந்தித் திகழவும் சங்கர நாராயணராகக் காட்சி தரும் நிலையில் விளங்குவது இம்மூர்த்தம்.

தேவாரம்

"எரியலா லுருவ மில்லை
    யேறலால் ஏற வில்லை
கரியலாற் போர்வை யில்லை
    காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா அமரர் கூடிப்
    பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை
    ஐயன்ஐ யாற னார்க்கே"

—திருநாவுக்கரசர்

14. ஸ்ரீ அர்த்தநாரீச்வரமூர்த்தி



(திருப்பூந்துருத்தி)

(தொடர்ச்சி 53ம் பக்கம் பார்க்க)

(32ம் பக்கத் தொடர்ச்சி)

(தியான சுலோகம்)

பும்ஸ்த்ரீருபதரம், தநௌ சசிஜடா
டங்காருணாபம் பணிம்
வ்யாக்ர த்வக்வஸனம் ப்ரகோஷ்டவ்ருஷபம்
வக்ராங்க்ரிகம் தக்ஷிணே
வாமேச்யாமள வரோத்பலாலககுச
க்ஷௌமர்ஜு பாதாம்புஜம்
த்ஹேம விபூஷணுதி ருசிரம்
வந்தே அர்த்தநாரீச்வரம்

பொழிப்புரை: ஆண், பெண் உருவம் தரித்தவரும் வலது பாகத்தில் சந்திரன் சடைமுடி ஸர்ப்பம் இவைகளைத் தாங்கிய வரும் புலித்தோலாடை தரித்தும் வலது திருவடி கொஞ்சம் வளைந்தும் உள்ளவரும் இடது பாகத்தில் பச்சை நிறம் தாங்கியும் உத்பலம், முன்னெற்றி முடிதாங்கியும் பட்டாடை உடுத்தியும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அழகாகவுள்ளவரும் நேரான இடது திருவடியை உடையவருமான அர்த்தநாரீசுவரப் பெருமானை நமஸ்கரிக்கின்றேன்.

விளக்கம்:

திருக்கயிலைமால் வரையில் திருமால், பிரமன் முதலிய தேவர்களும் பிறரும் சிவபெருமானையும், தேவியையும், தொழுது மகிழ்ந்தனர். பிருங்கி முனிவர் மட்டும் உமையம்மையாரை வணங்காது சிவபெருமானை மட்டும் வணங்கி நின்ருர். அம்பிகை தன்னை மதியாத முனிவர் உடலில் சக்தி அம்சமாக உள்ள உதிரம், மாமிசம் முதலியவற்றை ஒடுக்கி அகற்றினுர். முனிவர் என்பும், தோலுமாய்த் தள்ளாடித் தோற் பதுமைபோல நின்று தன்னைப் பிரார்த்திப் பதைக்கண்ட பெருமான் மனம் தரியாது மூன்ருவதாக ஒரு காலை உதவினுர். மூன்று கால்களோடு இறைவன் முன்னின்று கூத்தாடி இறைவனைப் பாடிக் களித்தார். அம்பிகை வருத்த முற்றுத் தவம் புரிந்து இறைவன் அருளால் திருமேனியில் இடது பாகத்தைப் பெற்ருர். உமையம்மை இடது பாகமாகவும், பெருமான் வலப்பாகமாகவும், விளங்கும் திருக்கோலமேயாதொரு கூறர் என்று தமிழிலும், அர்த்தநாரீசுவரர் என்று வடமொழியிலும் வழங்கப் பெறும்.

தேவாரம்

"புதுவிரி பொன்செ யோலை யொருகாதொர் காது
சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேதகீத மொருபாடு மோத
மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர்
குழல் பாகமாக வருவர்
இதுவிவர் வண்ணவண்ண மிவள் வண்ண வண்ண
மெழில் வண்ணவண்ண மியல்பே"

— திருநாவுக்கரசர்

15. கிராத மூர்த்தி



(கும்பகோணம்)

(தியான சுலோகம்)

க்ருஷ்ணங்கம் த்விபுஜம் தனுச்சரதரம்
முக்தாலகம் ஸுஸ்திதம்
க்ரூராக்ஷித்வய ஸம்யுதம் விபுலஸத்வக்த்ரம
ஹ்யுரோ விஸ்த்ருகம்
சீர்ஷே பிஞ்சதரம் ஸுகந்தகுஸுமம்
சார்தூல சர்மாம்பரம்
பத்தவ்யால விராஜிதோதரமஹம் த்யாயேத்
கிராதம் ஹரம்.

பொழிப்புரை : கருநிறத் திருமேனியையும், இருகைகளிலும், வில் அம்புகளையும் தாங்குகின்ற வரும், தொங்குகின்ற முன்னெற்றி முடியை உடையவரும், நின்றதிருக் கோலத்தில் உள்ள வரும் கொடூரமான இருகண்களை உடைய வரும், விரிந்த மார்பை உடையவரும், ஸர்ப் பத்தால் கட்டப்பட்டு விளங்குகின்ற வயிற்றை உடையவருமான கிராத மூர்த்தியைத் தியானிக்கிறேன்.

விளக்கம்

பாண்டவர்கள் சகுனி செய்த மாயச் சூதால் தங்கள் நாடு நகரங்களைத் துரியோதனாதியரிடம் இழந்து மனைவியுடன் வனமடைந்து வாழ்ந்து வந்தனர். வியாச முனிவர் பாண்டவர்படும் துயரைக்கண்டு வருந்தி அவர்களைத் திடப்படுத்தி சிவபெரு மனை வேண்டித் தவம் புரியுமாறு கூறிச் சென்றார்.

முனிவர் சொன்னபடி அர்ச்சுனன் துறவிக் கோலம் தாங்கித் திருக்கயிலைமால் வரையின் மேற்புறம் நின்று ஒரு காலை ஊன்றித் தவஞ் செய்தான். அம்பிகை கருணை கொண்டு அருச்சுனனுக்கு அருள் புரியுமாறு வேண்டினார் துரியோதனன் அருச்சுனனது தவத்தைக் கெடுக்க எண்ணினான். மூகாசுரனை அழைத்து அருச்சுனனை அழித்து வருமாறு கூறினான். மூகாசுரன் பன்றி உருவு எடுத்து அருச்சுனன் தவம் செய்யுமிடத்திற்கு அருகில் சென்று தவத்திற்கு இடையூறு விளைத் தான். அருச்சுனன் அதனைக் கொன்றாலன் றித் தவம் செய்தல் இயலாது என்ற நிலையில் பன்றியைத் துரத்திச் சென்றான்.

பெருமான் அருச்சுனனுக்கு அருள் செய்ய உமையம்மை வேட்டுவிச்சியாய் உடன்வரத் தாம் வேட்டுருக் கொண்டு அவ்வனத்தை அடைந்தார். அருச்சுனன் துரத்திச் சென்ற பன்றியைத் தானும் தொடர்ந்து சென்று பன்றியின் பின்புறம் அம்பு எய்தார். அருச் சுனன் பன்றியின் முன்னால் நின்று கணை யெய்தான். பன்றி இறந்தது. யார் முதலில் எய்தது என்பதில் இருவருக்கும் போர் மூண் டது. பெருமான் அருச்சுனனது காண்டீபத் தின் நாணை அறுத்தார். அருச்சுனன் சினந்து நாணறுந்த வில்லால் கிராதராய் வந்த வேட ரை அடித்தான். அவ்வடி எல்லா உயிர்களின் மீதும் பட்டது. இறைவன் மறைந்து காட்சி தந்து அருச்சுனனது போர் வெற்றியைப் பாராட்டிப் பாசுபதக்கணை அளித்துப் பாரதப் போரில் வெற்றிபெற வாழ்த்தினார். அருச் சுனனுக்கு அருள் செய்ய இறைவன் கொண்ட வேட்டுவ வடிவமே கிராதவேடம் என்பர்.

தேவாரம்

''வெங்கடுங்கானத் தேழைதன்னொடும்
வேடனாய்ச் சென்
றங்கமர் மலைந்து பார்த்தற் கடுசர மருளினனை
மங்கை மாராடலோவா மன்னுகாரோ
ணத்தானைக்
கங்குலும் பகலுலங்காணப் பெற்று நாங்களித்து
வாழே

—திருநாவுக்கரசர்


16. ஸ்ரீ கங்காள மூர்த்தி

(தியான சுலோகம்)

ரக்தாபம் ஸ்மிதவக்த்ரமிந்து மகுடம்
வாமேது தோர்தண்டகே
த்ர்யக்ஷம் வேதகராம்புஜம் சதத்ருதே :
கங்காள வீணாதரம்
ஸவ்யே யஷ்டிதரம் பரேடமருகம்
ஸவ்யாபஸவ்ய க்ரமாத்
டங்கம் க்ருஷ்ணம்ருகம்
கங்காளதேவம் பஜே

பொழிப்புரை : சிவந்த நிறமுள்ளவரும் புன் சிரிப்புள்ள முகத்தை உடையவரும் பிறை அணிந்தவரும் நான்கு கைகள் உள்ளவரும் இடது தோளில் வீணையைத் தாங்கியவரும்

வலது பாகம் மேற்கையில் மழுவையும் கீழ்க் கையில் தண்டத்தையும் தாங்கியுள்ளவரும் இடது பாகம் மேற்கையில் மானையும், கீழ்க் கையில் உடுக்கையும் தாங்கியுள்ளவருமான ஸ்ரீ கங்காளமூர்த்தியைத் தியானிக்கிறேன்.



(ஸ்ரீ கங்காளர், குடந்தை)

விளக்கம்:

சிவாலயத்துள்ள திருவிளக்கொன்று சுடர் தட்டி அணையும் தறுவாயிலிருந்தது, சிவபெருமான் உமையம்மையைப் பார்த்து இத்திரு விளக்கைத் தூண்டிவிடுவோர் மூவுலகையும் அரசாள்வர் என்றருளினார். அப்பொழுது ஒரு எலி விளக்கின் மீது ஏறி எண்ணெய் குடிப்பதற்கு முற்பட்டது. எரியும் திரியருகில் வாய் வைத்ததால் சூடுபட்டு மூக்கைச் சிலிர்த்தது. அதனால் திரிதூண்டப் பெற்று விளக்கு நன்றாக எரியத் தொடங்கிற்று. இறைவன் எலிக்கு மூவுலகையும் அரசாளும் பேற்றை அருளினார். எலி மகாபலி என்னும் பெயருடன் அசுரர்குல அரசனாகப் பிறந்தது. தானவர் குலம் வலி மிகுந்து தழைத்தது. வானவர்கள் அஞ்சினர். திருமாலிடம் தங்கள் குறைகளைக் கூறினார்கள். திருமால் காசிப முனிவர்க்கும் திதிக்கும் மைந்தனாக வமான உருவில் தோன்றினார்.



(ஸ்ரீ சட்டைநாதர், சீகாழி)

மகாபலி அசுர அரசனாக இருந்தாலும் நற்கருமங்கட்கு வாரி வழங்கும் கொடையாளனாக இருந்தான். வாமன வடிவம் கொண்ட மாயவன் மாவலியிடம் சென்று மூன்றடிமண் கேட்டார், சுக்கிராச்சாரியார் தடுத்தும் கேளாதுமாவலி வாமனர்க்கு மூன்றடி மண் அளித்தான். மாயவன் உலகளாவிய திரிவிக்கிரம அவதாரம் எடுத்து ஓரடியால் நிலவுலகையும், மற்றொரு அடியால் வானுலகையும் அளந்து மூன்றாவது அடியை மாவலியின் சிரமேல் ஊன்றி அவனைப்பாதாள உலகிற்கு அனுப்பினார்.

மாவலியைக் கொன்ற வெறியால் அகந்தை கொண்டு ஆரவாரித்து உலகை அழிக்கத்

தொடங்கினர் திருமால், தேவர்கள் அஞ்சி நடுங்கிச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் உலகைக் காக்கத் திருவுளங்கொண்டு விரைந்து சென்று திருமாலின் மயக்கம் தீரச் சில வார்த்தைகள் கூறினர். பிருகு முனிவர் சாபத்தால் இறுமாப்புத் தவிராதிருந்தார் திருமால். பெருமான் வச்சிரதண்ட மொன்ருல் திருமாலின் மார்பில் அடித்தார். வாமனர் நிலமிசை இறந்து வீழ்ந்தார். பெருமான் அவரது தோலைக் கஞ்சுகமாகத் தரித்தும், முதுகெலும்பைத் தண்டமாகக் கொண்டும் காட்சி தந்து கயிலை சென்ருர்.

அச்சுதன் அகந்தை நீங்கிப் பண்டைய உணர்வு பெற்றுப் பரமனை வழிபட்டு வைகுந்தம் சேர்ந்தார். மாவலி நற்கதி பெற்ருன்.

சிவபெருமான் வாமனரது முதுகெலும்பைக் கோதண்டமாகக் கொண்ட கோலத்தில் கங்காளர் எனப்பெறுவார், ஸ்ரீ சட்டைநாதர் என்ற மூர்த்தமும் இதுவேயாகும்.

ஸ்ரீ சரப மூர்த்தமும் இவ்வாறே. திருமால் நரசிங்க உருவமெடுத்து இரணியனைக் கொன்ற கொலை வெற்றி வெறியைத்தரச் சரபப் பறவை உருவ மெடுத்து திருமாலின் வெறியகற்றி அருள் புரிந்த மூர்த்தமாகும்.

தேவாரம்

“நிறைமறைக் காடுதன்னில்
நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலகுமெல்லாம்
குறை வறக்கொடுப்பர் போலுங்
குறுக்கை வீரட்டனுரே.”

(திருநாவுக்கரசர்)

17. ஸ்ரீ சண்டேசானுக்ரஹமூர்த்தி



(ஸ்ரீ சரபர், திருபுவனம)



(கங்கைகொண்ட சோழபுரம்)

(தியான சுலோகம்)

சண்டேசம் பதவர்ணம் யுககரஸஹிதம்
தக்ஷஹஸ்தேரத் டங்கம்
பிப்ராணம் க்ருணஸாரம் வரகர ஸஹிதம்
பார்வதீ வாமபாகம் :
சண்டேசஸ்யோத் தமாங்கம் ப்ரதி நிஹிதகரம்
தக்ஷபாகே த்ரிணேத்ரம்
ஸர்வாலங்காரயுக்தம் சசிசகல தரம்
கங்கயாயுக்த மீடே.

பொழிப்புரை : மஞ்சள் நிறமுள்ளவரும் நான்கு கைகளை உடையவரும், வலது மேல்கையில் மழுவையும் இடதுமேல் கையில் மானையும் தாங்கியவரும் இடது பக்கத்தில் பார்வதி தேவியை உடையவரும், சந்திரகலை, கங்கை இவைகளைத் தாங்கியவரும் அலங்கரிக்கப்பட்ட வரும் வலது பக்கத்திலிருக்கின்ற சண்டேசப் பெருமானின் சிரஸில் வலது திருக்கரத்தை வைத்து அருள்புரிகின்றவருமான சண்டே சானுக்ரஹ மூர்த்தியை வணங்கிறேன்.

விளக்கம் :

சோழ நாட்டில் திருச்சேய்ஞ்ஞலூரில் வேதியர் குலத்தில் எச்சதத்தன் பத்திரை என்பார்க்கு அரும்பெறல் புதல்வராய் அவதரித் தவர் விசாரசருமர். முற்பிறவிகளின் புண்ணிய வயத்தினுல் ஏழு வயதில் வேதாகமம் முதலிய எல்லாக் கலைகளையும் அறிந்தார். சிவபெரு மானை வழிபடுவதே செய்யத்தக்கது என்பதை உணர்ந்தார். ஊர்மக்களின் பசுக்களை மேய்க்கச் சென்ற பசு மேய்ப்பான் ஒருவன் ஒரு பசுவை அடிப்பதைக்கண்டு அவற்றை மேய்க்கும் தொழிலைத் தாமே மேற்கொண்டு நாள்தோறும் அன்போடு பேணி மேயவிட்டு அவரவர் இல்லங்களில் சேர்ப்பித்து வந்தார். பசுக்களும் மிக்க பாலைத் தந்துவந்தன.

விசாரசருமர் சிவபூசை செய்ய விரும்பி மண்ணியாற்றங்கரையில் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பசுக்களின் மடியிற் சொரியும் பாலை அபிஷேகம் செய்து வழிபட்டு வந்தார். இதனை அறிந்த ஒருவன் விசாரசருமர் பசுவின் பாலைக் குடம் குடமாகக் கறந்து மண்ணிற் சொரிகின்ருர் என்று ஊர் மக்களிடம் குறை சொல்ல, விசாரசருமரின் தந்தையார் சினந்து நேரிற்கண்டு உண்மையறிய ஆற்றின் கரையை அடைந்தார். விசாரசருமர் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பாலை அபிஷேகம் புரிவதைக் கண்டு கோபித்துப் பாற் குடங் களைக் காலால் இடற்றினர். விசாரசருமர் சிவா பராதம் புரிந்தவர் தந்தை என்று அறிந்தும் அவர் காலைத் தடிதற் பொருட்டு அருகிலிருந்த ஒருகோலை எடுத்தார். அது மழுவாயுதமாக மாறிற்று. அதனுல் தந்தையின் காலைத் தடிந் தார். பெருமான் விடை மீது காட்சி தந்து அவரைத்தழுவி உச்சி மோந்து தொண்டர் களுக்கு எல்லாம் அதிபராகும் சண்டேசுவர பதத்தைத் தந்து, தாம் உண்ணும் திருவமுது, உடுக்கும் உடை சூடும் மலர் ஆகியவற்றை அருளினர். எச்சதத்தரும் தரிசித்துச் சிவபதம் அடைந்தார். விசாரசருமருக்கு இறைவன் அருள் செய்ய எழுந்தருளிய திருவடிவமே சண்டேசானுக்ரஹமூர்த்தம் எனப்பெறும்.

தேவாரம்

“தழைத்ததோ ராத்தியின் கீழ்த்
தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக்
கறந்து கொண்டாட்டக் கண்டு
பிழைத்த தன்தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்த தோரமுத மீந்தார்
குறுக்கை வீரட்டனாரே”

திருநாவுக்கரசர்

18. ஸ்ரீ நீலகண்டர்

(தியான சுலோகம்)

அபயவரத ஹஸ்தம் டங்க ஸாரங்க யுக்தம்
சசிதரமஹிபூஷம் பீத வஸ்த்ரம் த்ரிணேத்ரம்
சிவமஸிதகளாட்யம் தம் வ்ருஷாரூட தேவம்
விஷஹரணக மீசம் சித்ர பிஞ்சாட்ய ரூபம்.

பொழிப்புரை : அபயவரத ஹஸ்தம் உள்ள வரும் மழு மான் தாங்கியவரும் சந்திரன் ஸர்ப்பங்களை ஆபாரணமாகப் பூண்டவரும் பீதாம்பரம் தரித்தவரும் விடை ஏறியவரும் கருப்பான கழுத்தை உடையவரும் மங்களத்தைக் கொடுப்பவரும் விஷத்தைச் சாப்பிட்டவருமான ஸ்ரீ நீலகண்டப் பெருமானை வேண்டுகின்றேன்.

விளக்கம் :

தேவர்கள் அனைவரும் அமுதம் பெற விரும்பித் திருமால் பிரமர் துணையுடன் திருபாற்கடலைக்கடைய முற்பட்டனர். மந்தர மலையை மத்தாகவும், சந்திரனை அடை தாணாகவும் அட்ட நாகங்களில் ஒன்றான வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் ஒருபுறமும், அசுரர்கள் ஒருபுறமும், இருந்து கடைந்தனர். திருமால் கூர்ம வடிவமெடுத்து மலையின் அடிப்பகுதியைத் தாங்கி நின்றார். வாசுகி வருத்த மாற்றாது தனது ஆயிரம் வாயினின்றும் நஞ்சைக் கக்கியது. அவ்விடம் உலகம் இருள் மயமாகுமாறு எங்கும் பரவியது. தேவர் முதலியோர் அஞ்சியோடினர். திருமால் அமரர்களைக்காப்பேன் என்று கூறி, விடத்தை எதிர்த்தார். அவ்விடம் திருமாலின் உடலையும் கருநிற மாக்கி அடங்காமல் புறப்பட்டது. அனைவரும் திருக்கயிலைக்குச் சென்று சிவபெருமானைச் சரணடைந்தனர்.

சிவபெருமான் தேவர்களைக் காத்தருளத் திருவுளங்கொண்டு சுந்தரரை அனுப்பி அவ்வாலாலத்தைக் கொண்டு வரச்செய்தார். இறைவனருளினால் அந்நஞ்சு ஒன்று திரண்டு சுந்தரர் கையை அடைந்தது. சுந்தரர் அதனைக் கொண்டு வந்து இறைவனிடம் தந்தார். பெருமான் அதனைத் தாம் உண்டு கண்டத்தில் நிறுத்தி நீலகண்டர் என்னும் பெயர் பெற்றார்.

தேவாரம்

“பரியமா சுணங்கயிறுப்
பருப்பதமதற்கு மத்தாகப்
பெரிய வேலையைக் கலங்கப்
பேணிய வானவர் கடையக்
கரியநஞ்சது தோன்றக் கலக்கிய
வவர்தமைக் கண்டு
அரிய வாரமுதாக்கும்
அடிகளுக்கிட மரசிலியே.

— திருஞானசம்பந்தர்

நீல மாமிடற்று ஆலவாயிலான்
பாலதாயினர் ஞாலம் ஆள்வரே.

— திருஞானசம்பந்தர்

19. ஸ்ரீசக்ரப்ரத மூர்த்தி



(கங்கைகொண்ட சோழபுரம்)

(தியான சுலோகம்)

விஷ்ணுஸ்த்வீச புரஸ்ஸ்திதோ ரஞ்ஜலிகரோ
தேவஸ்ய பாதாப்ஜயோ :
அப்யர்ச்யாக்ஷிலஸத் ஸஹஸ்ர கமலம்
ஸம்ப்ராப்தவான் ஈச்வராத்
யஸ்மாச்சக்ரமதோ வரம் பசுபதே :
பத்மாக்ஷ இத்யாக்யயா
டங்கம் கிருஷ்ண ம்ருகம்வரம் பரகராத்
சக்ரப்தம் தம் பஜே,

பொழிப்புரை: விஷ்ணு பரமேச்வரன் முன் நின்று கைகூப்பி வணங்கி சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளில் தன் கண்ணை தாமரைபபூக்களில் ஆயிரத்திற்குப் பதிலாக ஸமர்ப்பணம் செய்து பூசையை நிறைவேற்றி எந்த பரமேச்வரனிட மிருந்து செந்தாமரைக் கண்ணன் என்ற பெயரையும் சக்ராயுதத்தை

யும் பெற்றுரோ அப்படிப்பட்ட மான் மழு வோடு கூடிய சக்கரப்ரத மூர்த்தியை ஸேவிக் கின்றேன்.

விளக்கம்

திருமால் த்தீசி முனிவரை எதிர்த்துத் தனது சக்கராயுதத்தை அவர்மீது விடுத்த அளவில் அது பயன்படாதொழிதலைக் கண்டு வருந்தியபோது தேவர்கள் சிவபெருமான் சலந்தரனைக் கொல்லும் பொருட்டு உண்டாக் கிய சுதர்சனம் என்னும் சக்கரப் படையே சிறந்தது என்றுகூறக் கேட்டு சிவார்ச்சனையால் சிவபெருமானிடம் அதனைப் பெறுகின்றேன் என்று கூறித் திருவீழி மிழலையை அடைந்து ஆயிரம் தாமரை மலர்களால் இறைவனை அர்ச்சிக்க முற்படும்போது ஒரு பூக்குறைதலை அறிந்து கமலக்கண்ணனுகிய திருமால் தன் கண் மலரையே தாமரையாகச் சாத்தி வழி பட்ட அளவில் இறைவன் வெளிப்பட்டுச் சலந்தரனைக் கொன்ற அச்சக்கரப் படையைத் திருமாலுக்கு அளித்து வாழ்த்தியருளினுர்.

பெருமான் சலந்தராசுரனைச் சக்கரத்தால் கொல்லக் கொண்டருளிய திருக்கோலமே சக்கரப்பிரதமூர்த்தி என்பதாகும்.

தேவாரம்

"தடமல ராயிரங்கள் குறை வொன்ற தகா
நிறை வென்று தன்கண தனல்
உடன்வழிபாடு செய்த திருமாலை
யெந்தைபெருமானுகந்து மிகவும்
சுடரடியான் முயன்றுசுழல் வித்தரக்க
னிதயம் பிளந்த கொடுமை
அட்ல்வலி யாழி யாழி யவனுக் களித்த
வவனாம் நமக்கொர் சரணே."

(- திருநாவுக்கரசர்)

20. ஸ்ரீ கஜமுகாநுக்ரஹ மூர்த்தி (விக்னப்ராஸத மூர்த்தி)

(தியான சுலோகம்)

டங்கம் க்ருஷ்ணம்ருகம் ததா நமமலம்
ப்ராலம்பி ஸவ்யாங்க்ரிகம்
வரமே நித்ரிதபாத மிந்து ஸத்ருசம், த்ரயக்ஷம்
ஜடாசேகரம்
வாமாங்கே த்ருத விக்ன ராஜமிதரம்
தந்மூர்த்நி விந்யஸ்ய தத்
ப்ரீத்யானுக்ரகம் த்ரிபுண்ட்ரதரணம்
விக்னப்ரஸாமம் பஜே

பொழிப்புரை : மழு, மான் தாங்கியவரும் தொங்கவிடப்பட்ட வலதுகாலை உடையவரும் இடது காலை மடித்து வைத்துக் கொண்டிருப்ப வரும் சந்திரனுக்கு ஸமமான காந்தி உள்ள வரும் ஜடாமகுடம் தரித்தவரும் மடித்து வைத்துக் கொண்டுள்ள இடது காலின் மேல் விநாயகரை வைத்துக் கொண்டும் அவரிடத் தில் உள்ள பேரன்பினுல் அவர் சிரசின் மேல் வலது திருக்கரத்தை வைத்து அருள்புரிகின்ற வருமான ஸ்ரீ விக்னப்ரஸாத மூர்த்தியை ஸேவிக்கின்றேன்.

விளக்கம் :

ஆன்மாக்களுடைய அறியாமையையும் இடையூறுகளையும் நீக்குவதற்காகப் பிரணவ வடிவினர்களாகிய சிவசக்தியிடம் தோன்றி ஓம் என்னும் பிரணவத்தையே தன் திருமுக மாகக் கொண்டருளிய விநாயகக் கடவுள் சிவ பெருமானையும் உமையம்மையாரையும் வணங்கியருளினுர். இருவரும் விநாயகரைத் தங்கள் திருக்கரங்களால் எடுத்து மார்போடு அணைந்து அவரைத் தம் தொடைமீது இருத்தி அருளினுர்கள்.

சிவபெருமான் விநாயகக் 'கடவுளைப் பார்த்து 'மூவுலகிலும் வாழ்வோர் தாங்கள் ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன் அச் செயல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு உன்னை வழிபடுவாராயின் அவர் களின் செயல் தடையின்றி இனிது முடிய அருள் செய்யும் ஆற்றலையும், திருமால், பிரமன் முதலிய தேவர்கட்கும் பூதகணங்களுக்கும் ஏனையோருக்கும் தலைவனுக விளங்கும் தன் மையையும் உனக்குத் தந்தோம்'என்று அருள் செய்தனர்.

இக்காரணத்தால் சிவபெருமான் கஜமுகா னுக்ரஹர் எனப்பெயர் பெற்றுர். கஜமுகன்- யானைமுகக் கடவுள்.

இடப்பாகத்தில் உமையும் வலப்பாகத்தில் விநாயகரும் அமர மூன்று திருக்கண்களும். அங்குசம், உருத்திராக்கமாலை தரித்த இரு கரங்களுடன் வரதம் அமைந்த ஒருகரமும், விநாயகர் நெற்றியில் விபூதி அணிவிக்கும் ஒரு கரமும் உடையவராய்ச் சிவபெருமான் நடுவில் விளங்கும் திருவடிவம் கஜமுகானுக் கிரக மூர்த்தியாவார்.

இம்மூர்த்தியைத் தியானிப்போர் அனைத்து விருப்பங்களும் ஈடேறப்பெறுவர். எவ்வித இடையூறுகளும் நீங்கப் பெற்று இன்புறுவர்.

தேவாரம்

"பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க்கருளும் பரிசு கண்டேன்
பாராகிப் புனலாகிநிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்ததொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந்தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்குமாறு கண்டேன்
வாய்மூரடிகளை நான் கண்ட வாறே."

(- திருநாவுக்கரசர்)

21. ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தி



(நாட்டரசன்கோட்டை)

(தியான சுலோகம்)

உத்யத் பானுநிபம் சதுஷ்கரயுதம் கேயூரஹாரைர்யுதம்
திவ்யம் வஸ்த்ரதரம் ஜடாமகுடினம் ஸம்சோபி நேத்ரத்ரயம்
வாமே கௌரியுதம் ஸுகஸ்தமுபயோர் மத்யே குமாரம்ஸ்திதம
ஸோமாஸ்கந்தவிபும் ம்ருகாபய வரம் டங்கம் ததாநம் பஜே.

பொழிப்புரை : உதிக்கின்ற சூரியனுக்கு ஒப்பானவரும், நான்கு கைகள் உள்ளவரும், வலது கைகளில் மழு, வரதம் தாங்கியவரும் இடது கைகளில் மான், அபயம் தாங்கிய வரும், தோள்வளை, ஹாரம் முதலியவைக ளால் அலங்கரிக்கப்பட்ட வரும், ஜடாமகுடம் உள்ளவரும், இடது பாகத்தில் பார்வதி தேவி யைக் கொண்டவரும், உட்கார்ந்து கொண் டிருப்பவரும், தனக்கும் பார்வதி தேவிக்கும் இடையில் நிற்கின்ற கந்தக் கடவுளை உடைய வருமான ஸோமஸ்கந்தப் பெருமானை வணங்கு கின்றேன்.

விளக்கம் :

சிவபெருமான் பார்வதி தேவியை மணந்து திருக்கயிலை யங்கிரியில் திருவோலக் கம் கொண்டு எழுந்தருளியிருக்கும் போது தேவர்கள் அனைவரும் திருநந்தி தேவரை இறைவனது சன்னிதானத்தில் சென்று வணங் கித் தேவரீர் உமையம்மையை மணந்தும், எங்களை நெடுநாட்களாகத் துன்பஞ் செய்து மகேந்திரபுரியில் அரசு செய்துவரும் சூரபது மன் முதலான அசுரரைச் சங்கரிக்கத் தக்க ஒரு புதல்வரைத் தந்து எங்கள் துன்பந் விர்த்திலீர், விரைவில் இது கைகூடுமாறு அருள் புரிய வேண்டும் எனக் குறையிரந்தனர்.

பெருமான் ஆறுதிருமுகங்கள் கொண்டு அம்முகங்கள் தோறும் விளங்கும் நெற்றி விழி களிலிருந்து ஆறுதீப்பொறிகளை வெளிவரும் படி அருள்செய்தார். அப்பொறிகளைக் கண்டு பார்வதி தேவியார் அஞ்சிப் பாதச் சிலம்புகள் ஒன்றுடனொன்று மோதும்படி விரைந்து எழுந்து அந்தப்புரம் அடைந்தார். தேவர்கள் அஞ்சினர். பெருமான் அக்கினியையும் வாயு வையும் அழைத்து அப்பொறிகளை எடுத்துச்

சென்று கங்கையில் விடுமாறு பணித்தார். கங்கை அவற்றை சரவணப் பொய்கையில் விட்டது. அப்பொறிகள் ஒன்ருகி ஆறு திருமுகங்களோடும் பன்னிருகரங்களோடும் முருகப் பெருமானுய் உருவெடுத்தது. கார்த்திகைப் பெண்கள் வளர்க்க வளர்ந்த குழந்தை முருகப் பெருமானைக் காணக் கயிலையிலிருந்து சிவபெருமானும், உமையம்மையும் சரவணப் பொய்கையை அடைந்தனர். இறைவன் கட்டளைப்படி ஆறு குழந்தைகளையும் உமையம்மை தம் இரு கைகளால் ஒன்ருய் வாரி எடுத்த அளவில் அக்குழந்தைகள் ஆறுமுகம் பன்னிரண்டு கரங்களும் உடைய ஒருருவாயின. கந்தன் என்ற பெயர் பெற்ற அம்முருகப் பெருமானை அம்பிகை எடுத்து வந்து உச்சி மோந்து பெருமானிடம் தர, அவ்விறைவன் இடபவாகனத்தில் தமக்கும் அம்மைக்கும் இடையில் அமர்த்தித் திருக்கயிலை சென்றடைந்தார். மூவரும் எழுந்தருளிய திருக்கோலமே சோமாஸ்கந்தர் என்னும் பெயருடையதாயிற்று. 'சோமாஸ்கந்தர்' என்பதற்கு உமையம்மையோடும், முருகனோடும் எழுந்தருளியவர் என்பது பொருளாகும்.

தேவாரம்


செல்வியைப்பாகங் கொண்டார்
சேந்தனைமகனைக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க்
கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்
தன்னுள்ளால்
எல்லியை விளங்க நின்ருரிலங்கு
மேற்றளி யனுரே.''
(திருநாவுக்கரசர்)

22. ஸ்ரீ ஏகபாத மூர்த்தி

(தியான சுலோகம்)

த்யாயேத் கோடிரவிப்ரபம் த்ரிநயநம்
சீதாம்சு கங்காதரம்
ஹஸ்தே டங்கம்ருகக்ம் வராபயகரம்
பாதைகயுக்தம் விபும்
சம்போர் தக்ஷிண வாகமக்ஷபுஜயோர்
ப்ரஹ்மாச்யுதாப் யாம்யுதம்
தத்தல்ல க்ஷணமாயுதை : பரிவ்ருதம்
ஹஸ்தத்வயாட் யாஞ்ஜலிம்.

பொழிப்புரை : கோடிசூர்யனுக்குச் சமமான ஒளி உடைய வரும், சந்திரன் கங்கையைத் தாங்கியவரும், மழு மான் வரதம் அபயங்களை உடையவரும், எங்கும் வியாபித்தவரும் வலது பாகத்தில் கைகூப்பி ஆயுதங்களோடு நிற்கின்ற பிரும்மாவை உடையவரும், இடது பாகத்தில் கை கூப்பி நிற்கின்ற விஷ்ணுவை உடையவரும் ஒருகால் உள்ளவருமான ஸ்ரீ ஏகபாத மூர்த்திப் பெருமானைத் தியானிக்கிறேன்.



(திருவதிகை)

விளக்கம் :

சிவபெருமான் பிரம விட்டுணுக்களை முன்னே தந்து அவர்களை அதிட்டித்து நின்று உயிர்களைப் படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்து, அவ்வுயிர்களுக்கு வினைப்பயன்களை நுகர்வித்து அவ்வுயிர்களில் இருவினையொப்பு, மலபரிபாகம் வரப்பெற்ற ஆன்மாக்களை வீடுபேறடையச் செய்து ஏனைய உயிர்களையும் உலகங்களையும் யுகமுடிவில் சங்

கரித்து 'அதன் பின்னர் பிரம விட்டுணுக்களைத் தம்முள் ஒடுங்கி தாம் முன் போலவே ஏகமாயிருப்பார். பின்னர் சிலகாலம் சென்றும் மீண்டும் முன்போல் உலகத் தோற்றத்தை புரிந்தருள்வார். சிவபெருமான் ஒடுக்ககாலத்தில் பிரமன் திருமால் ஆகியோர் எலும்புகளைத் தரித்தும் அவர்தம் மண்டையோடுகளை மாலையாகத் தொடுத்தணிந்தும் அவர்தம் சிகைகளைப் பூண நூலாகத் தரித்தும் விளங்குவார். அவர்களைத் தம் முத்தலைச் சூலத்தில் ஏந்திநிற்றலும் அவர்களை நெற்றிக் கண்ணால் சாம்பலாக்கி அச்சாம்பலைத் திருமேனியில் பூசுதலும்புரிவார். இவ்வாறு செய்தல் அத்தேவர்களிடம் இறைவன்கொண்ட கருணையினாலேயாகும். இவ்வாறு இறைவன் மும்மூர்த்திகளையும் தம்முள் ஒடுக்கி ஏகராய் நின்ற நிலையைக் குறிப்பதே ஏகபாதர் திருவுருவமாகும்.

தேவாரம்

"பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண்டேறி
யொத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்தனாரே."

(திருஞானசம்பந்தர்)

23 சுகாசநசு மூர்த்தி

(தியான சுலோகம்)

சாந்தம் ச்வேதம் த்ரிணேத்ரம்
ரஸபுஜஸஹிதம்
குண்டலோத்பாஸி கர்ணம்
தண்டம் கண்டாம் குரங்கம்பரசு
பணிதராபீதிகம் தக்ஷவாமை:
பிப்ராணம் வாமபாதம் சயிதமதபரம்
லம்பிபூதஸ்த பாதம்
வாமே கௌர்யாஸமேதம் சசிதரமகுடம்
தம் ஸுகாஸீனமீடே.

பொழிப்புரை: சாந்தமானவரும் வெண்ணிறமுள்ளவரும் முக்கண்ணரும் ஆறு கைகளோடு கூடியவரும் குண்டலத்தால் பிரகாசிக்கின்ற காதுகளை உடையவரும் வலது இடது கைகளில் தண்டம், மணி, மான், மழு ஸ்ர்ப்பம், அபயம் முதலியவைகளைத் தாங்கியவரும் மடித்து வைத்துக் கொண்ட இடது காலை உடையவரும் தொங்கவிடப்பட்டு பூதத்தின் மேல் இருக்கின்ற வலது காலை உடையவரும் இடது பாகத்தில பார்வதி தேவியோடு கூடியவரும் சந்திரகலதரனுயும் உள்ள சுகாசன மூர்த்தியை துதிக்கின்றேன்.

விளக்கம்:

வெள்ளிமால் வரையாகிய கயிலைமலையின் உச்சியில் கோடிக்கதிரவர்கள் தோன்றினாற் போன்று ஒளிவீசும் நவரத்தின மண்டபத்தில் அன்பர்களுக்கு அருள் செய்யும் குறிப்போடு உமையம்மையாருடன் இரத்தின சிங்காதனத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோலம் இது. அருகில் திருமால் பிரமன் முதலிய தேவர்களும் இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களும், அஷ்டவசுக்களும் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்து எண்ணாயிரம் முனிவர்கள் சனகாதியரும் கருடகந்தர்வ சித்தர்களும் நின்று ஹர! ஹர! சங்கர! மகாதேவா! எனறு துதித்து வணங்குகின்றனர். தும்புரு, நாரதர் இன்னிசை பாடுகின்றனர். வேதங்கள் தோத்தரிக்கின்றன. அரம்பையர் ஆடுகின்றனர். இறைவன் அருள் உள்ளம் உடையவராய் உமையோடு வீற்றிருக்கின்றார். முக்கால முனிவராகிய பிருங்கி முனிவர் ஆனந்தக்கூத்தாடி வழிபடுகின்றார். இறைவன் அவரவர்கட்கும் வேண்டும் வரங்கள் அளித்து தத்தம் இடங்களுக்கு அனுப்பி வைக்கின்றார். அம்பிகை வேதசிவாகமங்களின் உண்மையை உணர்த்தியருளுமாறு வேண்ட இறைவன் சுகாசனராக எழுந்தருளியிருந்து அன்னைக்கு அவற்றின் உண்மைப் பொருளை உபதேசித்தருளுகின்றார்.

தேவாரம்

"தொகுத்தவ னருமறை
யங்க மாகமம்
வகுத்தவன் வளர்பொழிற்
கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர்
புரங்கள் வெந்தறச்
செகுத்தவ னுறைவிடந்
திருவிற் கோலமே."

—திருஞானசம்பந்தர்

24. ஸ்ரீ லிங்கோத்பவமூர்த்தி

(தியான சுலோகம்)

தேவம் கர்பக்ருஹஸ்ய மாநகலிதே லிங்கே
ஜடாசேகரம்
கட்யாஸக்தகரம் பரைஸ்ச தததம் க்ருஷ்ணம்
ம்ருகம் சாபயம்
ஸவ்யே டங்கமமேய பாதமகுடே
ப்ரஹ்மாச்யுதாப்யாம் யுதம்
ஹ்யூர்த்வாதஸ்தித ஹம்ஸ கோலமமலம்
லிங்கோத்பவம் பாவயே.

பொழிப்புரை :- ஜடாமகுடத்தை உடைய வரும் இடுப்பில் வைத்துக்கொண்டிருக்கிற கையை உடையவரும், அபயம், மான், மழு முதலியவைகளை மன்றைய திருக்கரங்களால் தாங்கியுள்ளவரும், பிரும்மா விஷ்ணுக்களாலே காண முடியாத திருமுடி திருவடிகளை உடைய வரும் ப்ரும்மா விஷ்ணுவோடு கூடியவரும் மேலே அன்னப்பறவையையும் கீழே பன்றியை உடையவருமான ஸ்ரீலிங்கோத்பவ மூர்த்தியை மனதால் தியானிக்கிறேன்.



(திருவண்ணுமலே)

விளக்கம் :

பிரமன் படைப்புத் தொழிலினுற் செருக் குற்றுத் தன்னைவிடத் தெய்வம் வேறு இல்லை எனத்தருக்கெய்தித் திருமாலிடம் சென்று அவரைப் போருக்கு அழைத்து நம்மில் வெற்றி பெற்றவரே பெரியவர் என்று இருவரும் உறுதி செய்து கொண்டு போரிட்டனர். இருவரும் செய்தபோரால் உலகம் நடுங்கியது. சிவபெரு மான் இனியும் வாளாவிருந்தால் உலகம் அழியும் என்று திருவுளங்கொண்டு இருவருக்கு மிடையே அவர்கள் அஞ்சும்படி ஒரு அக்கினி தம்பமாய்த் தோன்றி இத்தம்பத்தின் அடியை யும், முடியையும் அறிந்தவரே பெரியவர் என்று அசரீரியாய்க் கூறியருளினர். பிரமன் யான் முடியைக் காண்பேன் என்றும் திருமால் யான் அடியைக் காண்பேன் என்றும் தம்முள் முடிவு செய்து கொண்டனர். பிரமன் அன்ன வடிவம் கொண்டு வானில் பறந்து சென்ருர். திருமால் பன்றி உருவமெடுத்து நிலத்தை அகழ்ந்து பாதாளம் சென்ருர். திருமால் பல காலம் முயன்றும் அப்பிழம்பின் அடியைக் காணுது திகைத்து இளைத்துப்பின் நல்லுணர்வு பெற்றுச் சிவபெருமானே இவ்வாறு தோன் றினுர் என்று அறிந்து வெளியில் வந்து தம் பிழை பொறுக்க வேண்டி நின்ருர். வானி டைப் பறந்து சென்ற நான் முகனும் அவ் வாறே பறந்து இளைத்து சித்தர்கள் சிலர் சிவபிரானது அடிமுடிகளை அறிதல் எளிதன்று என்று கூறக்கேட்டு மீண்டு நிலத்தடை வந்து வணங்கி நின்ருர். இருவரும் சிவபெருமானைப் பிரதட்சணம் செய்து வழிபட்டுப் பிழை பொறுக்க வேண்டினர். பெருமான் அவர்கட்கு காட்சியளித்து இருவர் பிழைகளையும்பொறுத்து மீண்டும் அவர்கட்கு படைத்தல், காத்தல் தொழில்களை அருளினர் என்பது இலிக்கோத் பவ மூர்த்தம் தோன்றியருளிய வரலாறு ஆகும்.

தேவாரம்

“செங்க ணனும் பிரமனுந் தம்முள்ளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினுன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.”

—திருநாவுக்கரசர்

25. தக்ஷிணுமூர்த்தி

(தியான சுலோகம்)


பாதேநாக்ரம்ய பூதம் ததுபரிகுணிதம்
பாதமேகம் நிதாய
வ்யாகுர்வன் ஸர்வசப்தாந் நிஜகடக
மஹீபாகபாஜாம் ம்ருகக்ஷிணாம்
வ்யாளம் வ்யாக்யாநமுத்ராம்
ஹுதவஹகலிகாம்
புஸ்தகம் சாக்ஷமாலாம்
பிப்ரத் தோர்பிஸ்சதுர்பிஸ் ஸ்புரது
மமபுரோ தட்சிணுமூர்த்திரீச :

பொழிப்புரை : வலது திருவடியால் முயல கனை மிதித்துக்கொண்டும் இடது திருவடியை மடித்து வலது முழங்காலின் மேல் வைத்துக் கொண்டும் தன் திருவடி சமீபம் அமர்ந்திருக் கின்ற ஸனகாதி முனிபுங்கவர்களுக்கு வேதாக மங்களின் கருத்தை விளக்கிக் கொண்டும் நான்கு திருக்கரங்களால் அக்ஷமாலை, ஜ்வலிக் கின்ற அக்னி, சின்முத்திரை, புஸ்தகம் முதலிய வைகளைத் தாங்கிக் கொண்டுமிருக்கிற ஸ்ரீதக்ஷிணுமூர்த்திப் பெருமான் எப்பொழுதும் என் முன்னிருந்து அருள்வாராக.

விளக்கம் :

உமையம்மை தக்கன் மகளாய்ப் பிறந்த பழிநீங்குமாறு அருள்புரிய வேண்டுமாறு சிவ பெருமானைப் பணிய, பெருமான் மகிழ்ந்து உமையம்மையை நோக்கி மலையரசனுகிய இமவான் உன்னை மகளாகப் பெறத் தவம் புரி கின்றுன், அவன் மகளாகப் பிறந்து வளர்ந்து நம்மை அடைக என்று அருளிச் செய்தார். அம்மை மகிழ்ந்து இமயமலையையடைந்து தாமரைத் தடாகத்தில் குழந்தையாய்த் தோன்றி இமவான் மகளாய் வளர்ந்து பார்வதி என்னும் பெயர் தாங்கித் தவம் இயற்றிச் சிவ பெருமானை மணம் புரிந்துகொள்ளத் தவம் செய்து வந்தார்.

சிவபெருமான் உமையம்மையைப் பிரிந்து கல்லால் மரநிழற்கீழ் தென்திசை நோக்கி யோகியாய் எழுந்தருளியிருந்தார். அப்போது பிரமபுத்திரர்களாகிய சனகர், சனந்தனர், சனு தனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் நால் வேத, ஆறு அங்கங்களைக் கற்றும் அவற்றின் உட்கிடையை அறிய இயலவில்லை, அதனை உணர்த்தியருள வேண்டும் எனப் பிரார்த் தித்தனர். பெருமான் அவர்கட்குத் தம் வலது திருக்கையை மார்பின் நடுவே நிறுத்தி மோன முத்திரையால் பதி, பசு, பாசம் ஆகிய முப் பொருள்களின் இயல்புகளையும் பசு, பாசத்தின் நீங்கிப் பதியை அடைதலே முத்தி என்பதை யும் உணர்த்தி அம்முனிவர்கட்கு அருள் புரிந்தார்.



(கம்பனூர்-நாச்சியாபுரம்)

தேவாரம்

ஏரிஸ்சயும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கி நின்று
நேரிய நான் மறைப்பொருளை
உரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிஸ்சயும் பண்டிதர்கள் பன்னுளும்
பயின்ருேதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள் சொல்லும் மிழலை யாமே

—ஞானசம்பந்தர்

உ சிவமயம்

அஷ்டலெட்சுமி வணக்கம்

பேராசிரியர் டாக்டர் அர. சிங்காரவடிவேலன்

தனலெட்சுமி

எட்டு 'வகையாய் இலங்கும் திருமகளே !
கொட்டு மழைபோல் கொடுப்பவளே ! — இட்டமலர்
அத்தனையும் பொன்ஞகி அன்பு மணியோங்கப்
பக்தர்களை ஏறிட்டுப் பார்.

கெஜலெட்சுமி

ஆனை இருபுறமும் அள்ளிச் சொரிபுனல்போல்
தானம் கொடுக்கும் தவப்பயனே ! — ஈனமெனும்
இந்தப் பிறவி இனிமேலே போயொழியத்
துந்திக்கை தாராய் துணை.

விஜயலெட்சுமி

வெற்றித் திருவே ! விளக்கேற்றிக் கும்பிடுவார்
கற்றுச் சிறந்திடவும் கல்வியுடன் – மற்றவையும்
உற்றுச் சிறந்திடவும் உண்மை நிமிர்ந்திடவும
எற்றிடுக எங்கள் இடர்.

சந்தானலெட்சுமி

கள்ளூறும் வாயால் கனிமழலை பேசுகிற
பிள்ளை வரமருளும் பேரன்பே! — எல்லாரும்
நல்லாரைப் பெற்றிடவும் நாடு சிறந்திடவும்
வல்லவளே! ஈவாய் வரம்,

வீரலெட்சுமி

பஞ்சான கையால் படைக்கருவி ஏந்தாமல்
எஞ்ஞான்றும் வெல்லும் இயல்புடையாய் ! — அஞ்சாமல்
நேர்மைப் படையால் நெருங்கும் பகைவெல்லும்
கூர்மை எமக்குக் கொடு

ஆதிலெட்சுமி

சோதி மலரே ! சுடரின் சுடராகும்
ஆதிப் பொருளாய் அமைந்தவளே ! — நீதியெனும்
மூலத்தின் மேலே முளைக்கின்ற கோபுரமாய்
ஞாலத்தை எந்நாளும் தாங்கு.

தானியலெட்சுமி

புல்லை விதையாக்கிப் பூமியிலே நட்டாலும்
நெல்லாக மாற்றும் நிறைவுடையாய்! — கல்லெல்லாம்
ஆக்கிப் புசிக்கும் அருமை உணவாக்க
வாய்க்குத் தருவாய் வரம்.

ஐசுவரியலெட்சுமி

வீடும் விளைநிலமும் வேண்டும் நலம்பிறவும்
தேடிக் கொடுக்கும் திருமகளே ! — ஓடும்
புனல்கூட மின்னும் பொருளாக மாறத்
தினமும் விளக்கில் திகழ்.

உ சிவமயம்

"திருமகள் திருநோக்கு வேட்டல்"

கவிஞர் சிவல்புரி சிங்காரம்

ஆதிலட்சுமி

எட்டுவகை லெட்சுமியால் ஏராளமான செல்வம்
கொட்டும்வகை நானறிந்தேன் கோலமயி லானவளே !
வெற்றியுடன் நான்வாழ வேனும் ஆதிலட்சுமியே !
வட்டமலர் மீதிருந்து வருவாய் இதுசமயம் !

சந்தானலட்சுமி

சிந்தனைக்குச் செவிசாய்த்து சீக்கிரம்என் னில்லம்வந்து
உந்தனருள் தந்திருந்தால் உலகமெனைப் பாராட்டும் !
வந்தமர்ந்து உறவாடி வரங்கள்பல தருவதற்கே
சந்தான லட்சுமியே தான் வருவாய் இதுசமயம் !

கஜலட்சுமி

யானையிரு புறமும்நிற்கும் ஆரணங்கே உனைத்தொழுதால்
காணுமொரு போகமெலாம் காசினியில் கிடைக்குமென்பார் !
தேனிருக்கும் கவியுரைத்தேன் தேர்ந்தகஜ லட்சுமியே !
வானிருக்கும் நிலவாகி வருவாய் இதுசமயம் !

தனலட்சுமி

அன்றாட வாழ்க்கையினில் அனுபவிக்கும் துன்பமெல்லாம்
உன்றனருள் பெற்றுவிட்டால் ஓடுவதும் உண்மையன்றோ !
இன்றோடு துயர்விலக இனியதன லட்சுமியே !
மன்றாடிக் கேட்கின்றேன் வருவாய் இதுசமயம் !

தானியலட்சுமி

எங்கள்பசி தீர்ப்பதற்கு இனியவயல் அத்தனையும்
தங்கநிறக் கதிராகித் தழைத்துச் சரிப்பவளே !
பங்குபெறும் வாழ்க்கையினைப் பார்தான்ய லட்சுமியே !
மங்கலமாய் என்னில்லம் வருவாய் இதுசமயம் !

விஜயலட்சுமி

கற்றுநான் புகழடைந்து காசினியில் எந்நாளும்
வெற்றியின்மேல் வெற்றிபெற வேணுமென்று கேட்கின்றேன்
பற்றுவைத்தேன் உன்னிடத்தில் பார்விஜய லட்சுமியே !
வற்றாத அருட்கடலே வருவாய் இதுசமயம் !

மகாலட்சுமி

நெஞ்சிற் கவலையெலாம் நிழல்போல் தொடர்ந்ததனால்
தஞ்சமென உனையடைந்தேன் தாமரைமேல் நிற்பவளே
அஞ்சாது வரம்கொடுக்கும் அழகுமகா லட்சுமியே !
வஞ்சமிலா தெனக்கருள வருவாய் இதுசமயம் !

வீரலட்சுமி

ஏழுவித லெட்சுமிகள் என்னில்லம் வந்தாலும்
சூழுகிற பகையொழிக்கும் தூயவளும் நீதானே !
வாழும் வழிகாட்டிடவே வாவீர லட்சுமியே !
மாலையிட்டுப் போற்றுகிறேன் வருவாய் இதுசமயம் !

தொண்ணூற்றுரூரார்

தொகுப்பு : நா. சே. நாராயணன்

நாச்சியாபுரத்தில் எழுந்தருளி உள்ள அருள்மிகு உமா மகேஸ்வரி உடனுறை அருள்மிகு உமா மகேஸ்வரர் குடமுழுக்கு விழா மலரில், இத்தொகுப்பு இடம் பெற ஊக்க மளித்த 'ஐயா' திரு. சுப. சொ. சுப்பையா செட்டியார் அவர்களின் அன்புள்ளம் பாராட்டுதற்குரியது.



மன்னர் பின்னோராகவும், கோயில் சார்ந்த குடிகளாகவும் தொண்ணூற்றாறு ஊர்களில் வாழ்ந்த நகரத்தார் காலமாற்றத்தில் தற்போது எழுபத்தாறு ஊர்களில் மட்டுமே வாழ்கின்ற அவர்களால் வணங்கப்படும் சிவாலயத்தின் தொகுப்பு ஒன்றினை 2-9-1985ல் நடைபெற்ற நாட்டரசன் கோட்டை அருள்தரு சிவகாமிஅம்மன் உடனாய அருள் தரு கரிகால சோழீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேக மலரில் வெளியிட்டிருந்தோம்.

அத்தொகுப்பில் நெற்குப்பை பொன்னமராவதி இரண்டு ஊர்களின் செய்திகள் இடம்பெறாதது பின்னர் தெரிந்தது. அதனையும் சேர்த்து இம்மலரில் வெளியிடுகிறோம்.

இத்தொகுப்பினை ஊன்றிக் கவனித்தால் ஓர் உண்மை புலனாகும். அதாவது நகரத்தார் யாவரும் ஒன்பது கோவில்களைச் சார்ந்தவர்கள். அந்த ஊரிலிருந்து வாழ்வின் விரிவு வேண்டித் தொண்ணூற்றுரு ஊர்களுக்குச் சென்றவர்கள். தாங்கள் சென்று வாழத்தொடங்கிய அந்தந்த ஊர்களில் முன்பு இருந்த கோயில்களாக இருந்தாலும் சரி, புதியதாகக் கட்டிய கோயில்களாக இருந்தாலும் சரி, தங்கள் பிரிவின் கோயிலில் உறையும் இறைவனின் பெயரையோ, அல்லது ஒரே விதமான வேறு ஒரு பெயரினையோ இட்டு அழைத்து வணங்காமல், இறைவனுக்கு 39 பெயர்களையும் இறைவிக்கு 29 பெயர்களையும் இட்டு வணங்கும் பாங்கு, அவர்களிடம் சைவத்தின் தத்துவம் எவ்வளவு வேரூன்றி இருக்கின்றது என்பதனையும், "சிவமதத்திலேயே இருக்கிறது. அந்நிய மதங்களில் சேரக்கூடாது" என்று "பூங்கொன்றைக் கல்வெட்டும், துளாவூர்ச் செப்பேடும்" கூறுவதை இன்றளவும் கைக்கொண்டு வாழுவதையும் காணலாம்.

சைவ சமயமே சமயம் என்று நகரத்தார் பெருமக்கள் வாழும் ஊர்களில் உறையும், இறைவன் — இறைவியின் திருப்பெயர்களைத் திரட்டி ஒரு சேரத் தொகுக்கத் துணைநின்ற திரு. சுப. ராமநாதன் செட்டியார், திரு. சுப. சுப்பிரமணியன் ஆகியோருக்கும், நாங்கள் கேட்டிருந்த விபரங்களைத் தந்துதவி சிவப்பணியில் ஈடுபட்ட, "ஒரு நாமம் ஓருருவமில்லார்க்கு ஆயிரம் திருநாமம்" கூற வாய்ப்பளிக்கும் எல்லா ஊர் நகரத்தார்களுக்கும் எந்தைபிரான் ஸ்ரீகரிகால சோழீஸ்வரர்; எம் அன்னை ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் பொற்றாள் வணங்கி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஊர் பெயர்		சுவாமிபெயர்	அம்மன் பெயர்	கட்டப்பெற்ற ஆண்டு	குடமுழுக்கு நடைபெற்ற ஆண்டு
1 அமராவதி புதூர்	-623 301	வத்தருளீஸ்வரர்	வாழவந்தநாயகி	26—6—1908	1908, 40
2 அரண்மனை சிறுவயல்	-623305	மும்முடீஸ்வரர்	கருணகடாச்சி	1780	1948 (பிறதெரியவில்லை)
3 அரிமளம்	-622 201	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	5—5—1944	5-5-1944 23-5-58 2-2-65
4 அரியக்குடி	-622 202	இரத்தினபுரீஸ்வரர்	சுந்தரபரமேஸ்வரி	1915	1915:74
5 அலவாக்கோட்டை	-623564	சொக்கலிங்க சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	4—9—1924	4-9-1924, 1989
6 அழகாபுரி (க)		சிவன் கோயில் இல்லை			
7 அழகாபுரி (கொ)	-623 561	சிவன் கோயில் இல்லை			
8 ஆத்தங்குடி	-623 101	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	24—4—1928	24-4-1928; விரோதிகிருதுவூ ஆனிமீ
9 ஆத்திக்காடு தெற்கூர்	-623 201	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	01—2—1911	01-2-1911; 1-11-38; 1-9-82
10 ஆவினிப்பட்டி		சொக்கலிங்கம்	மீனாட்சி	1909	மூன்றுமுறை
11 உ. சிறுவயல்	-623 208	அயிராவதேஸ்வரர்	சௌந்தரநாயகி	1861	7 முறை
12 உலகன்பட்டி	-622 410	உலகநாதர்	உலகநாயகி	1929	3 முறை
13 ஒக்கூர்	-623 557	சிவன் கோயில் இல்லை			
14 கடியாபட்டி		பூமிஸ்வரசுவாமி	பிரம்மவித்யாம்பாள்	1895	1895; 7-12-1926
15 கண்டரமாணிக்கம்	-623 204	கைலாசநாதர்	பெரியநாயகி	1835	6-2-1976
16 கண்டவராயன்பட்டி	-623 203	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1905	1905; 12-7-72
17 கண்டனூர்	-623,104	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1835	1835; 54; 1951; 78
18 காருங்குளம்	-623 204	சொக்கநாதர்	மீனாட்சி	4.7.85	4-7-85

19	கல்லல்	-623 305	சோமசுந்தரேஸ்வரர்	சௌந்தரநாயகி	1800	1860; 1910; 25; 52; 3-7-77
20	கல்லுப்பட்டி	-623 306	கைலாசநாதர்	நித்திய கல்யாணி		
21	காரைக்குடி	-623 001	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	21—4—1872	21-5-1912ம் 3வது 28-1-74
22	காளையார்மங்கலம்		ஷ	மீனாட்சி	1905	1974
23	காணாடுகாத்தான்	-623 102	சிவலோகநாதர்	ஒப்பிலாம்பிகை	1906	1906;34
24	கீழச்சிவல்பட்டி	-623 205	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1877	இராஜகோபுரம் கட்டி 20-4-1970
25	குருவிக்கொண்டான் பட்டி	-622 415	சொக்கலிங்கம்	மீனாட்சி	1920	1920; 18-6-70
26	குழிபிறை (கூழிபிறை)	-622 402	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1892	1892; 1905; 76
27	கொத்தமங்கலம்	-623 105	சூதவனேஸ்வரர்	சௌந்தரநாயகி	29—9—1909	29-9-1909; 26; 49; 7-6-79
28	கொப்பனாபட்டி	-622 401	விசுவேஸ்வரர்	விசாலாட்சி	1934	1934; 55; 22-9-85
29	கோட்டையூர்	-623 106	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1870	1870; 1940; 57; 62; 80
30	கோனாபட்டு	-622 503	ஷ	மீனாட்சி	1885	1885
31	சக்கந்தி		ஷ	மீனாட்சி	1936	1936; விசுவாவசு
32	சண்முகநாதபுரம் (ஆருவயல்)	-623 314	ஷ	மீனாட்சி	1805	மூன்றும்முறை ராக்ஷஸ பைங்குனி 20
33	சிராவயல்	-623 214	தியாகராஜமூர்த்தி	திரிலோகநாயகி	1912	1912; 27; 60; 79
34	சிறுகூடல்பட்டி		சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1880	1945, கீலக, பிங்கள, ருத்ரோத்காரி
35	செம்பனூர்	-623 313	கண்டீஸ்வரர்	நித்யகல்யாணி	1905	1905; 58
36	செவ்வூர்	-622-417	சொக்கநாதர்	மீனாட்சி	21—4—1932	21-4-1932; 31-5-64; 11-11-84
37	சொக்கநாதபும்		திருக்கண்ணன்குடி நாயனார்	சிறுதேன்மொழி அம்பாள்	சாதாரண	சாதாரண 40 ஆண்டுளுக்குமுன்பு 2-2-1980

38	சொக்கலிங்கபுரம் மதகுபட்டி	-623 553	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	14—6—1922	14-6-1922; 8-2-35; 2-11-79
39	சொக்கலிங்கம் புதூர்		சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1920	1920-75
40	சோழபுரம்		அருள்மொழிநாதர்	அறம்வளர்த்த ஈஸ்வரி	1890	1890; 1936; 89
41	தேவகோட்டை	-623 302	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1818	1818, 71; 1968; 89
42	தேனிப்பட்டி	-622 202	அகத்தீஸ்வரர்	அகிலாண்டேசுவரி	1936	1936, 14-9-69
43	நடராசபுரம்	-623 555	இராமனுதசுவாமி	பர்வதவர்தினி	1922	1922; 56; சூலை 79
44	நற்சாந்துபட்டி	-622 404	சிதம்பரேசுவரர்	சிவகாமி	1928	1928; 72
45	நாச்சியாபுரம்	-623 207	உமாமகேஸ்வரர்	உமாமகேஸ்வரி	1910	1910; 45, 89
46	நாட்டரசன்கோட்டை	-623 556	கரிகாலசோழீஸ்வரர்	சிவகாமி	1200	1866, 1926, 61, 2—9—85
47	நெற்குப்பை	-622 405	மனமொத்தகண்டீஸ்வரர்	மரகதவல்லி	1000	
48	நேமுத்துப்பட்டி		சிவன் கோயில் இல்லை			
49	பட்டமங்கலம்	-623 310	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	21—5—1930	1930; 42; 54; 66; 21-1-83
50	பலவான்குடி		சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1895	5வது கும்பாபிஷேகம் 1-5-1975
51	பள்ளத்தூர்	-623 107	சுந்தரேஸ்வரர்	மினாட்சி	1913	1913; 31; 39; 56; 73
52	பறியாமருதுபட்டி	-622 405	பரியா மருதீஸ்வரர்	பார்வதி		
53	பனங்குடி	-623 555	சிவன்கோயில் இல்லை	பெரியநாயகி கோவில்	1835	கடைசி கும்பாபிஷேகம் 1-5-1977
54	பணையபட்டி	-622 406	சொக்கலிங்கேஸ்வரர்	மீனாட்சி	3—7—77	3-7-1977
55	பாகநேரி	-623 558	நீலகண்டேசுவரர்	கருணைகடாக்ஷி	1905	1905; 1945
56	பிள்ளையார்பட்டி	-623 207	திருவீசர்	சிவகாமி	800	1889; 1928; 51; 76

57	புதுப்பட்டி	-622 408	பூலோகநாதர்	புவனேஸ்வரி	1951	11-2-1951; 5-2-68; 29-4-82
58	புதுவயல்	-623 108	வீரசேகரர்	உமையாம்பிகை	800	இதுவரை 4 முறை
			கைலாசநாதர்	நித்யகல்யாணி	1300	இதுவரை 3 முறை
59	பூங்குடி	-623 552	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1870	6-5-1870; 5-9-1932; 3-7-77
60	பூலாங்குறிச்சி	-622 413	எரிக்கீஸ்வரர்	பூலோகநாயகி	1835	1835; 1960
61	பொன்னமராவதி	-622 407	சோழீஸ்பரர்	ஆவுடயநாயகி	1000	
62	மகிபாலன்பட்டி		சிவன் கோயில் இல்லை குடகுமலையில் ஸ்ரீ தர்மலிங்கசுவாமிமட்டும் இருக்க, மகிபாலன்பட்டியில் ஸ்ரீ பூங்கொன்றை அம்மன், மங்கள விநாயகர் கோயில் இருக்கிறது.			
63	மானகிரி	-623 307	கண்டீசுவரர்	கண்டவளநாயகி	1700	தெரியவில்லை
64	மிதிலைப்பட்டி	-622 409	ஆத்மநாதசுவாமி	சிவயோகவல்லி	1915	1915; 21-1-40; 17-3-57 12-10-94
65	ஆ. முத்துப்பட்டினம்	-623 101	விசுவநாதர்	விசாலாட்சி	1785	கடைசிகும்பாபிஷேகம் 16-5-1973
			இது லோகநாயகி அம்மன் கோயில் பிரகாரத்தில் இருக்கிறது.			
66	மேலைச்சிவபுரி	-622 403	சொக்கலிங்கேசுவரர்	மீனாட்சி	1922	1922; 42; 62; 84
67	ராங்கியம்	-622 409	பூமிநாதர்	சிவகாமி	1400	1950
68	ராயவரம்	-622 506	சுந்தரேஸ்வரர்	பிரசன்ன மீனாட்சி	6—2—1870	6-2-1870; 1914; 51; 9-2-81
69	லெட்சுமிபுரம் ' (கொ)		சொக்கலிங்கம்	மீனாட்சி	1902	1902, 36, 57
70	லெட்சுமிபுரம் (நெ)	-622 412	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1910	இரண்டு தடவைகள்
71	வலையபட்டி	-622 411	வலம்புரிநாதசுவாமி	வடுவகிர் விழியாள்	1892	1892; 1941; 78
72	விராமதி	-623 212	சிவன்கோயில் இல்லை	செல்வ விநாயகர்	30—4—1952	30-4-52, 30-11-79
73	விரையாச்சிலை	-622 412	சிவன் கோயில் இல்லை			
74	வெற்றியூர்	-623 305	அருந்துதி ஈசுவரர்	சௌந்தர நாயகி	1865	1865
75	வேகுப்பட்டி		சிவலோகநாதர்	சிவகாமசுந்தரி	1924	1924; 52; 69; 76
76	வேந்தன்பட்டி	-622 419	சொக்கலிங்கேசுவரர்	மீனாட்சி	12-11-1911	12-11-1911, 1 -6-22, 25-1-31,
			நந்திக்கு நெய் அபிஷேகம் இங்கு விசேடம்			14-11-48, 12-9-73, 18-5-83

"எழுபத்தாறு ஊரில்" கோயில் கொண்டுள்ள இறைவன் இறைவி திருநாமங்கள்

இறைவன் திருநாமம்-38

1.	வந்தருளீஸ்வரர்	1
2.	மும்முடீஸ்வரர்	1
3.	சுந்தரேஸ்வரர்	23
4.	இரத்தினபுரீஸ்வரர்	1
5.	சொக்கலிங்க சுந்தரேஸ்வரர்	1
6.	சொக்கலிங்கம்	3
7.	அயிராவதேஸ்வரர்	1
8.	உலகநாதர்	1
9.	பூமீஸ்வரசுவாமி	1
10.	கைலாசநாதர்	3
11.	சொக்கநாதர்	2
12.	சோமசுந்தரேஸ்வரர்	1
13.	சிவலோகநாதர்	2
14.	சூதவனேஸ்வரர்	1
15.	விசுவேஸ்வரர்	1
16.	தியாகராஜமூர்த்தி	1
17.	கண்டீசுவரர்	2
18.	திருக்கண்ணன்குடி நாயனார்	1
19.	அருள்மொழிநாதர்	1
20.	அகத்தீஸ்வரர்	1
21.	இராமநாதசுவாமி	1
22.	சிதம்பரேசுவரர்	1
23.	உமாமகேஸ்வரர்	1
24.	கரிகாலசோழீஸ்வரர்	1
25.	மனமொத்தகண்டீஸ்பரர்	1
26.	பரியாமருதீசர்	1
27.	சொக்கலிங்கேசுவரர்	3
28.	நீலகண்டீசுவரர்	1
29.	திருவீசர்	1
30.	பூலோகநாதர்	1
31.	வீரசேகரர்	1
32.	எரிக்கீஸ்வரர்	1
33.	சோழீஸ்பரர்	1
34.	ஆத்மநாதசுவாமி	1
35.	விசுவநாதர்	1
36.	பூமிநாதர்	1
37.	வலம்புரிநாதசுவாமி	1
38.	அருந்துதி ஈஸ்வரர்	1

இறைவி திருநாமம்-29

1.	வாழவந்தநாயகி	1
2.	கருணாகடாச்சி	2
3.	மீனாட்சி	32
4.	சுந்தர பரமேஸ்வரி	1
5.	சௌந்தரநாயகி	3
6.	உலகநாயகி	1
7.	பிரம்மவித்தியாம்பாள்	1
8.	பெரியநாயகி	1
9.	நித்யகல்யாணி	3
10.	ஒப்பிலாம்பிகை	1
11.	விசாலாட்சி	2
12.	திரிலோக நாயகி	1
13.	சிறுதேன்மொழி அம்பாள்	1
14.	அறம் வளர்த்தஈஸ்வரி	1
15.	அகிலாண்டேஸ்வரி	1
16.	பர்வதவர்தினி	1
17.	சிவகாமி	4
18.	உமாமகேஸ்வரி	1
19.	மரகதவல்லி	1
20.	பார்வதி	1
21.	புவனேஸ்வரி	1
22.	உமையாம்பிகை	1
23.	பூலோகநாயகி	1
24.	ஆவுடையநாயகி	1
25.	கண்டவளநாயகி	1
26.	சிவயோகவல்லி	1
27.	வடுவகிர்விழியாள்	1
28.	சௌந்தரநாயகி	1
29.	சிவகாமசுந்தரி	1

சிவன்கோயில் இல்லாத நகரத்தார் ஊர்கள்

1. அழகாபுரி - க
2. அழகாபுரி - கொ
3. ஒக்கூர்
4. நேமுத்துப்பட்டி
5. பனங்குடி
6. மகிபாலன்பட்டி
7. விராமதி
8. விரையாச்சிலை

உ சிவமயம்

பிரதோஷப் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

காலத்துக்கு அதிக வலிமையுண்டு கால மறிந்து ஒரு தருமஞ் செய்தால் ஞால முழுவதும் நமது வசமாகும்.

ஞாலம் கருதினும் கைகூடும் — காலம்
கருதி இடத்தால் செயின்

என்று திருவள்ளுவ தேவர் கூறுகின்ருர். ''காலம் அறிதல்'' என்று அதிகாரத்தையே அமைத்தார்.

காலத்தில் செய்வதற்கு அதிக பயன். ''பாலோடாயினும் காலமறிந்து உண்'' என்பது ஒரு பழமொழி.

இறைவனை எப்போதும் வழிபட வேண்டும் ஆனால் புண்ணிய தினங்களில் வழிபட்டால் ஜெபம் செய்தால் ஒன்றுக்குக் கோடி மடங்கு மிகுதியான உயர்ந்த பயன் விளையும். சோம வாரம், சிவராத்திரி, தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்தர்சஷ்டி, வைகுண்ட ஏகாதசி, சூரிய சந்திர கிரகண காலங்கள் திருவாதிரை முதலிய புண்ணிய நாள்களில் அன்புடன் வழிபாடு புரிபவர்கள் பாவங்களினின்றும் நீங்கி புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலன்களையும் எளிதில் பெறுவார்கள்

விரத நாட்களில் உண்ணுது நோன்பிருந்து ஆலய வழிபாடு செய்து, திருமுறைகளை ஓதி திருவைந்தெழுத்தைச் செபிக்க வேண்டும்.

1. ஆலய வழிபாடு — உடல் நலமும்
2. திருமுறைகளை ஓதுவது—வாக்கு நலமும்
3. பஞ்சாட்சர ஜெபம்— மன நலமும்

தந்து நம்மைக் காக்கும். வினைகள் விலகும் அருளாற்றல் உண்டாகும். மார்க்கண்டேயர் சிவவழிபாடு செய்து மறலியை வென்று வீடு பேறு பெற்ருர்.

அத்தன் ஆலயம் அணைத்தும் வைகலும்
பக்தியோடு முன் பரவியே மிகும்
சுத்தனுகிய தொலைவில் ஆருயிர்
முக்தி எய்தினன் முழுதுணர்த்துளோன்
— கந்தபுராணம்

பிரதோஷ வரலாறு

தேவர்களும், அசுரர்களும் ஒருவரை ஒருவர் பகைத்துப் போர்புரிவார்கள். தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணம் என்ற துன்பங்கள் இன்றி வாழ விரும்பினுர்கள். இவை அணுகாது வாழ வேண்டுமாயின் சிவமூர்த்தியை வேண்டினுல் இறைவன் ஒரு சொல்லால் இவற்றையருளுவரன்.

''நீகு ஒக மாட — நாகு ஒக மூட'' என்பார் தியாகப் பிரமம். இந்த சுருக்கமான நெறியை அறியாத தேவர்கள் பிரம தேவனிடம் சென்று தங்கள் கருத்தையறிவித்தார்கள். பிரம தேவர் தேவர்களுடன் திருமாலிடம் சென்று, 'சாவா மூவா நலம்பெற என்ன வழி'' என்று வினவினுர்கள். திருமால் ''திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் உண்டால் மரணமின்றி சந்ததமும் இளமையுடன் வாழலாம்'' என்று ஆலோசனை கூறினுர்.

இந்திராதி தேவர்கள், திருப்பாற்கடலையடைந்து பாற்கடலைக் கடைய முயன்ருர்கள். மந்தரகிரியை மத்தாகவும், சந்திரனை தறியாகவும் வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிருகவும் அமைத்தார்கள். திருமால் கூர்மமாகி மந்தரகிரியைத் தனது முதுகில் தாங்கினுர். அசுரர்கள் தலைப்புறமும், தேவர்கள் வால்ப்புறமும் நின்று கடையலானுர்கள்.

அந்த நாள் தசமிதிதி. அன்று ஒரு வேளையுண்டு திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். மறு நாள் ஏகாதசி, பதினேராவது திதி.

பாற்கடலைக் கடைந்த போது, வாசுகி வருத்தந் தாங்காது பதைபதைத்து நஞ்சை உமிழ்ந்தது. கடலில் இருந்தும் நஞ்சு தோன்றியது. வாசுகி கக்கிய ஆலமும், கடலில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் எனப்பேர் பெற்றது.

இந்த ஆலாலம் மிக்க பயங்கரமான வெப்பமுடன் உலகத்துக்கே முடிவு செய்வது போல் விண்ணவரை விரட்டியது. வலமாகவும் இடமாகவும் மறித்துத் துரத்தியது. திசை தோறும் தேவர்கள் நடுங்கி ஒடுங்கி ஓடினுர்கள்

வெண்ணிறமாக இருந்த விஷ்ணுமூர்த்தி விஷவேகத்தால் நீல நிறம் ஆனுர். வானவர்கள் அஞ்சி திருக்கயிலாயஞ் சென்று அரனுரிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

தஞ்சம் புகுந்த வானவர்கள் "தேவ தேவ மகா தேவா! அருட்பெருங் கடலே! கருணைக் குன்றே! தேவரீர் ஆண்டான், நாங்கள் அடிமைகள். தேவரீர் உடையவர் நாங்கள் உடைமைகள். நாங்கள் பாற்கடல் கடைந்தோம். அந்த விவசாயத்தில் முதலில் விளைந்தது தேவரீருக்கு உரியது என்று கூறி முறையிட்டார்கள்

கருணையே வடிவாய கண்ணுதற் கடவுள் தமது அருகில் திருநீற்றுக் கோயிலைத் தாங்கி நிற்கும் சுந்தரரைப் பார்த்து 'சுந்தரா! அவ்விடத்தை இவ்விடத்துக்குக் கொண்டுவா' என்று பணித்தருளினர்.

சுந்தரர் மாலயனுதி வானவர்களால் அணுக முடியாத அதிபயங்கரமான கொடிய விஷத்தை நாவல் பழம் போலத் திரட்டி உருட்டி கொணர்ந்து சிவபெருமானிடம் தந்தார்.

அக்கொடிய விடத்தை அடியவர்களாய அமரர்கள் உய்ய அமுதம்போல் உண்டருளினர். அந்தவிடம் உள்ளே சென்றல் உள்முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும். உமிழ்ந்தால் வெளிமுகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும். ஆதலால் உண்ணுமலும் உமிழாமலும் கண்டத்தில் தரித்தருளினர். அதனுல் செம்மேனி எம்மானுடைய கண்டங்கரியதாக ஆயிற்று. அதனுல் மணிகண்டர்! நீலகண்டர் என்று பேர் பெற்றர்.

சிவபெருமானுடைய கருணைக்கு உதாரணம் இது ஒன்று போதாதா? "நாலம் வா" என்று ஒரு பாடலை ஆதி சங்கரர் சிவானந்தலகரியில் பாடியருளினர்.

இவ்வாறு எம்பெருமான் நஞ்சுண்டருளிய கருணைத் திறத்தை நால்வர்களும் மற்றைய ஆன்றேர்களும் புகழ்ந்து கூறுகின்றர்கள்.

இறைவன் ஆலால விடத்தை உண்ணவில்லையானல் பிரம விஷ்ணு இந்திராதி தேவர்கள் அன்றே மாண்டிருப்பார்கள். எல்லோருடைய கண்டத்தையும் எந்தை பிரான் கண்டந் தீர்த்தது.

மாலேங்கே? வேதனுயர் வாழ்வெங்கே?
இந்திரன் செங்
கோலெங்கே? வானேர் குடியெங்கே?
கோலஞ் செய்
அண்டங்கள் எங்கே? அவனி எங்கே?
எந்தைபிரான்
கண்டமங்கே நீலமுருக்கால்.

என்கின்ருர் வடலூர் வள்ளலார்.

பரவி வான்வர் தானவர் பலரும்
கலங்கிட வந்த விடம்
வெருள உண்டு கந்த
அருள் என் கொல்? விண்ணவனே
கரவின் மாமணி பொன் கொழித்திழி
சந்து காரகில் தந்து பம்பை நீர்
அருவி வந்தலைக்கும்
ஆமாத்தூர் அம்மானே.

—திருஞானசம்பந்தர்

இந்த விடத்தின் வெண்மையால் திருமால் நீல நிறம் பெற்றேர். அதற்கு முன் அவர் வெண்ணிறமுடன் இருந்தார் என்பதை பின்வரும் பாடல்களால் அறிக.

"மலை வளர் சிறகு கண்டேன்
வாரிதி நன்னீர் கண்டேன்
சிலை மதன் உருவு கண்டேன்
சிவன் சுத்த களம் கண்டேன்
அலை கடல் கடையக் கண்டேன்
அயன் சிரம ஐந்துங் கண்டேன்
சிலை ஏரி இரு கண் கண்டேன்
கொடுத்ததை வாங்கக் கண்டேன்

இந்தக் கருத்தை வலியுறுத்தும் வடமொழிப் பாடல் ஒன்று காண்க.

இந்த்ரம் த்வயக்ஷம் அமந்த
பூர்வ முதிதம் பஞ்சானனம் பத்மஜம்
வார்தீம் சுத்த ஜலம் சிவம் சித களம்
லட்சுமீபதிம் பிங்களம்
சைலான் பக்ஷ தரான ஹயான பிததா
காமஞ்ச சத்விக்ரகம்
சர்வம் த்ருஷ்டம் இதம்மயா ரகுபதே
தத்தாபஹாரம் விநா

இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விஷத்தை உண்டருளியது ஏகாதசி மாலை நேரமாகும்.

மீண்டும் பாற்கடல் கடைந்தது.

சிவபெருமான் தேவர்களை நோக்கி மீண்டும் சென்று திருப்பாற் கடலைக் கடையுமாறு பணித்தருளினர். அமரர்களும், அசுரர்களும் மீண்டும் கடலருகில் சென்று நின்று முன்போலவே கடலைக் கடையத் தொடங்கினர்கள்.

பாற்கடலிலிருந்து இலக்குமி, ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச்ரவம், முதலியன ஒவ்வொன்ருகத் தோன்றின. இலக்குமியைத் திருமால் ஏற்றுக்கொண்டார்.

ஏனைய பொருள்களை இந்திராதி தேவர்கள் அடைந்தார்கள்.

ஏகாதசியாகிய அன்று இரவு முழுவதும் உறக்கம் இன்றிப் பாற்கடலைக் கடைந்தார்கள் மறுநாள் துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் தோன்றியது. அதனை தேவர்கள் பகிர்ந்து உண்டார்கள். அமிர்தம் உண்ட அமரர்கள் அந்தமகிழ்ச்சியினால் துவாதசியன்று ஆடியும், பாடியும் பொழுதைப் போக்கினார்கள்.

பிரதோஷம்

மறுநாள் திரயோதசி 13 (பதிமூன்றும் நாள்) தேவர்கள சிவபெருமானை முன்னாளே வணங்காது பொழுது போக்கிய தங்கள் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானிடம் சென்று பணிந்து தங்கள் குற்றத்தை மன்னித்தருளுமாறு வேண்டினார்கள்.

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் மகிழ்ந்து தேவர்களுக்கு அருள் புரியத் திருவுளம் கொண்டு கயிலையில் அன்று மாலை (4-30 மணி முதல் 6 மணி வரை) பிரதோஷ வேளையில் தம் திரு முன் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று அம்பிகை காணத் திருநடம் செய்தருளினார். தேவர்கள் அதனைத் தெரிசித்து சிவபெருமானைத் துதிசெய்து வணங்கினார்கள். அது முதல் திரயோதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷ காலம் என்று வழங்கலாயிற்று (பிரதோஷம் — ரஜனீ முகவேளை பாபத்தை போக்கும் நேரம்)

இது சிவமூர்த்திக்கு உரிய பலவித விரதங்களில் தலையாயது. இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் துன்பங்களில் நின்றும் நீங்கி இன்பத்தை எய்துவர்.

விரதம் அனுஷ்டிக்கும் முறை

வளர்பிறை, தேய்பிறை என்ற இரண்டு பட்சங்களிலும் வரும் திரயோதசி திதியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, நீருடி நித்திய கடன்களை முடிக்க வேண்டும். சிவாலயம் சென்று வழிபட வேண்டும். அன்று முழுவதும் உணவின்றி உபவாசமாக இருக்க வேண்டும், திருமுறைகளை ஓதவேண்டும். பிரதோஷ நேரம் மாலை 4-30 முதல் 6 மணிவரை. அந்த நேரத்தில் சிவாலயம் சென்று உள்ளம் உருகி ஐந்தெழுத்தை ஓதி வழிபட வேண்டும். வசதியுள்ளவர்கள் சுவாமிக்கும் அம்பிகைக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்விக்கவேண்டும்.

தேவியுடன் கூடியசந்திரசேகர் இடப வாகனத்தில் ஆலயத்தை மூன்று முறை வலம் வருவதை சேவித்து வணங்க வேண்டும். முதல் சுற்றில் தேவபாராயணமும் இரண்டாவது சுற்றில் திருமுறை பாராயணமும் மூன்றுவது சுற்றில் நாதஸ்வர இன்னிசையும் நடைபெற வேண்டும்.

சுவாமி திருமுன் இருக்கும் இடப தேவருக்கு அறுகம்புல் மாலையும், சிவப்பு அரிசி நிவேதனமும் நெய்விளக்கும் வைத்து வழிபட வேண்டும்.

பிரதோஷ வேளையில் சிவலிங்க மூர்த்தத்தை இடபதேவரின் இரு கொம்புகளுக்கிடையே கண்டு வணங்கவேண்டும். ஐந்தெழுத்தை (ஓம் சிவாய நம) என்று ஜபம் செய்ய வேண்டும்.

சோம சூக்தப் பிரதட்சிணம்

மற்றை நாட்களில் ஆலயத்தில் மூன்று முறை வலம் வரும் வழக்கத்திற்கு மாருக பிரதோசத்தன்று சோம சூக்தப் பிரதட்சிணம் செய்ய வேண்டும்.

ஆலகால விடம் தேவர்களை முன்னும், பின்னும், வலமும் இடமுமாகத் துரத்தியது. தேவர்கள் அஞ்சி, நடுங்கி ஒடுங்கி கயிலை மலைக்கு ஓடினார்கள். இறைவனை வலமாக வந்து உள்ளே சென்று பரமனைச் சரணடையலாம் என்று எண்ணிய அவர்களை ஆலகால விஷம். அப்பிரதட்சிணமாகச் சென்று எதிர்த்தது. இதைக் கண்டு அஞ்சிய தேவர்கள் வந்த வழியே திரும்பிவர ஆலகால விஷம் அந்தப் பக்கத்திலும் எதிர்த்துச் சென்று பயமுறுத்தியது. இவ்வாறு தேவர்கள் வலமும் இடமுமாக வந்த அந்த நிகழ்ச்சி தான் சோம சூக்தப் பிரதட்சிணம் எனப் பெயர் பெற்றது.

பிரதட்சிண முறை

முதலில் சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்கிக் கொண்டு, அப்பிரதட்சிணமாகச் சண்டேசுரர் சந்நிதி வரை சென்று அவரை வணங்கிக்கொண்டு அப்படியே திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தையும், ரிஷபதேவரையும் வணங்கிக்கொண்டு வழக்கம்போல்பிரதட்சிணமாக ஆலயத்தை வலம் வரும்போது சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மாலியத்

தொட்டியைக் கடக்காமல் அப்படியே வந்த வழியே திரும்பி அப்பிரதட்சிணமாக சந்நிதிக்கு வந்து சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்கவேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அநேக அசுவமேதயாகம் செய்த பலன் கிடைக்குமென்று நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு ஆலயத்தில் பிரதோஷ வழி பாடு முடித்தபின் வீட்டிற்குச் சென்று உணவருந்துதல் வேண்டும்.

வருஷம் சண்டம் வருஷம் சைவ
ஸோம ஸுத்ரம் புனர் வ்ருஷம்
சண்டஞ்ச ஸோம ஸுத்ரஞ்ச
புனச் சண்டம் புனர் வ்ருஷம்

ப்ரதோஷ வழிபாடு செய்ய மாலயனுதி வானவர்களும் சிவாலயம் செல்வார்கள். ஆதலால் பிரதோஷ நேரத்தில் திருமால் கோயில்களில் வழிபாடு செய்வதில்லை.

ஒவ்வொரு நாளும் மாலை 4½ முதல் 6 மணி வரை பிரதோஷ நேரமாகும். தினப் பிரதோஷம் எனப்படும்.

பிரதோஷ வழிபாட்டின் மகிமை

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடப தேவரின் இரு கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடம் புரிந்தார். அப்போது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினர். பிரம தேவர் தாளம் போட்டார். இலட்சுமி தேவி பாடினுள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் திசைபாலர்கள் முதலிய அனைவரும்வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபடுகின்ருர்கள்.

இயக்கர் கின்னரர் யமனெடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானரா நாகம்
வசுக்கள் வானவர் தானவரெல்லாம்
அயர்ப் பொன்றின்றி நின் திருவடியிணை
யர்ச்சித் தாற் பெறு மாரருள கண்டு
திகைப் பொன்றின்றி நின் திருவடியிணை
செழும் பொழிதிருப் புன் கூருளானே
— சுந்தரர்

தேவர்கள் பிரதோஷ வழிபாடு செய்வதோடன்றி அவ்வழிபாட்டிற்கு தாங்களே முன் வந்து உதவுகிருர்கள் என்பதை பிரமோத்தர காண்டம் தெரிவிக்கிறது.

"வாக்தேவீ த்ருதவல்லகீ சதமகோ
வேணும் தகத் மத்மஜ
தாலோன் னித்ரகரோ ரமா பகவதீ
கேயப்யோ காஞ்சி தா
விஸ்ணுஸ் ஸாந்தா மிருதங்க வாதனபடுர்
தேவாஸ் ஸமந்தாத் ஸ்திதா
ஸேவந்தே தமனுப பிரதோஷ ஸமயே
தேவம் மருடானி பதிம்

சரஸ்வதிதேவி, இந்திரன், பிரமதேவன், திருமால், இலக்குமி இவர்கள் எல்லோரும் இதில் கலந்து கொள்ளுகிருர்களென இச்சுலோகம் தெரிவிக்கிறது.

இவ்வாறு சிவபெருமான் செய்த திருநடனத்தின் போது திருமால் மத்தளம் வாசித்தார். பிரமதேவர் தாளம் இட்டார். இதனை அடியில் வரும் பாடலால் அறிக.

"வரத்தின் அருள்பெற்ற மத்தளமாயோன்தன்
கரத்தினனி பொத்திக் களிப்ப—நாரைத்
தலையோன் தாளம் பிடிக்க"
—கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டு விடு தூது

உஜ்ஜயினி மாநகருக்கு அரசன் சந்திரசேனன், சிவ வழிபாட்டில் சிறந்தவன். சனிப் பிரதோஷ வழிபாடு செய்து எல்லாப் பேறுகளையும் பெற்றுப் புகழுடன் விளங்கி வந்தான்.

இந்த அரசன் செய்யும் வழிபாட்டை கண்ணுற்ற ஒரு சிறுவன் வீதியிலே மணலால் ஒரு சிவால்யம் அமைத்து ஒரு சிலையை சிவலிங்கமாகப் பாவித்து வழிபாடு செய்து பெரும் பேறு பெற்றுன். சந்திரசேனனும் இறுதியில் சிவகதி பெற்றுன்.

பிரதோஷ வழிபாடு செய்தால் வறுமை, பயம், பாவம், மரண வேதனை, இவையெல்லாம் ஒழிந்து விடும். நலம் பல விளையும்

"இரண நல்குர விரும்பவ மிரும்பசி யுரோகா
அரணுறும் பயங் கிலேசங் கேதமவ மிருத்து
மரண வேதனை யிவையெலா மகற்றென
வணங்கி
புரண நாதனைப் பிரதோடத்திற் போற்றிடத்
தகுமால்'
—கடம்பவன புராணம்

பிரதோஷ காலத்தில் அடியிற்கண்ட தேவாரங்களை ஓதுக.

'நாகந்தான் கயிறுக நளிர்வரையதற்கு
மத்தாகப்
பாகந்தேவ ரொடசுரர் படுகடலிள யெழக்
கடைய
வேதநஞ் செழவாங்கே வெருவொடு
மிரிந்தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்தமாக்கு வித்தான்
மறைக்காடே''
— திருஞானசம்பந்தர்

பருவரை ஒன்று சுற்றி அரவங்கை விட்ட
இமையோ ரிரிருந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்து விசை போய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பிதிகார மொன்றை
அருளாய் பிரானே என்லும்
அருள் கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே
—திருநாவுக்கரசு நாயனுர்

"கோல் வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிக விரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்த பித்த நீ செய்த
சிலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே''
— சுந்தரர்

"கோலால மாகிக் குரைகடல்வாயன்றெழுந்த
ஆலால முண்டா வைன்சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனேல் அயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவகாண் சாழலோ'
—மாணிக்க வாசகர்

இனியோ நாமுய்ந்தோம் இறைவன் தாள்
சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப்பிறவிக்
கனைக் கடலை தீந்திேனும் காண்
—காரைக்கால் அம்மையார்

அடியவராம் இமையவர்தம் கூட்ட முய்ய
அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே!
செங்கண்
நெடியானும் நான்முகனும் காணுக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே!
பொங்கர்வாசக்
கடியாரும் மலர் சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே! காவாய்
என்றும்.
—பெரிய புராணம்

உலகில் செல்வம் உடையவர் சிலர். வறியவர் பலர். இதற்கு என்ன காரணம்.?

இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர் —திருக்குறள்

சனிக்கிழமை வரும் பிரதோஷம்
மிகச் சிறந்ததாகும்

இறைவனை நினைந்து உணர்ந்து நோற்பார் மறுபிறப்பில் தனவந்தராக இனிது வாழ்வார்கள், அல்லாதவர் வறுமையில் வாடுவார்கள், ஆதலால் விரதத்தின் அவசியம் விளங்குகின்றது. சனிக்கிழமை தவிர மற்ற கிழமைகளில் வரும் பிரதோஷ தினத்தன்று பிரதோஷ வேளையாகிய மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை சிவாலயத்தில் ஆலய வழிபாடு செய்தால் ஒருவருடம் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்த பலனும், சனிப்பிரதோஷத் தன்று பிரதோஷவேளையில் சிவாலயத்தில் இறைவழிபாடு செய்தால் ஐந்து வருடம் தினம் தவருமல் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும். ஆதலால் எல்லோரும் பிரதோஷ விரதம் இருந்து பெரும்பேறு பெறுவார்களாக.

திருச்சிற்றம்பலம்.

காப்பாய் அப்பா

("பொற்கிழிக் கவிஞர்'' "காசிஸ்ரீ'' அரு, சோமசுந்தரன் M. A. B.T.,

நீர்வளமும் வயல்வளமும் சூழ்ந்தநல்ல நெடும்புகழின் நாச்சியா புரம்த ழைக்க
ஊர்புகழ எழுந்தருளி உலகம் காக்கும் உமையம்மை உடனுய உமாம கேசா
கார் முகிலின் நலத்தாலே செல்வம் பொங்கக் கவினேடு மாந்தரெலாம் செழித்து வாழப்
பார்புகழும் பதினறு பேறும் தந்து பல்லூழி வளமருளிக் காப்பாய் அப்பா !

உ
சிவமயம்
ஸ்ரீ தெண்டாயுதபாணி துணை







நாச்சியாபுரம்

அருள்மிகு உமாமஹேஸ்வரி சமேத உமாமஹேஸ்வரர் உடனுறை

ஜீரணோத்தாரண மஹா கும்பாபிஷேக அழைப்பு

ஸ்ரீ கணபதி

மாவேழும் ஏழுவழி நகரத்தார்க்கு என்றும்
கோவாழும் செல்வக் குலதெய்வம்-ஆய்வாழ்
மரகதவிநாயகனை மாமலர்தூய் வாழ்த்த
வர நலவாழ் வெல்லாம் வரும்.

ஸ்ரீ முருகன்

காலமாய்க்காலம் இன்றிக் கருமமாய்க்கருமம்
இன்றிக்
கோலமாய்க்கோலம் இன்றிக் குணங்களாய்க்
குணங்கள்இன்றிக்
ஞாலமாய்ஞாலம் இன்றி அநாதியாய் நங்கட்
கெல்லாம்
மூலமாய் இருந்தவள்ளல் மூவிருமுகங்
கொண்டுற்றான்.

ஸ்ரீ உமாமஹேஸ்வரர்
(நா. புரம் ஸ்வாமி பெயர்)

இன்பம்பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர் அறுத்துச் சோதியாய்
-அன்புஅமைத்துச்
சீர்ஆர்பெருந்துறையான் என்உடைய சிந்தை
யுள்ளே
ஊராகக் கொண்டான் உவந்து.

ஸ்ரீ உமாமஹேஸ்வரி
(நா. புரம் அம்மன் பெயர்)

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண்ணெம் பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள்போற்றி.

பேரன்புடையீர்,

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானும், போகமும் திருவும் புணர்ப்பானும், பின்னை நம் பிழைபொறுப்பானும், பிழையெலாம் தவிரப்பணிப்பானுமான தென்கூடற்திருவாலவாய்ச் சிவ பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருத்தலங்கல் ஆயிரமாயிரம். அவற்றுள் நம் நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள் தமிழகமெங்கணும் அமைத்து ஆராதித்து வரும் ஆலயங்கள் அளவிடற்பாலது.

அவ்வண்ணமே பாண்டி பதினான்கிலொன்றுறைய தென்திருப்புத்தூருக்கும், கலியுகவரதன் கந்தப்பெருமான் விண்ணுயர் குன்றையே தம் தோகை மயிலாகக்கொண்டு வீற்றிருந்து அருள் பாலித்துவரும் குன்றக்குடிக்கும் அருகே அமைந்துள்ள நம் நகரத்தார்வாழ் நகரங்களிலொன்று யதும் அருள்மிகு நாச்சியார் அம்மனின் கருணைகடாக்ஷத்திலுள்ளதுமான நாச்சியாபுரம் எனும்

நற்பதியில் அவ்வூர் நகரத்தார்களின் பெருமுயற்சியில் அருள்மிகு உமாமஹேஸ்வரருக்கும், பரிவார தேவர்கட்கும் அமைக்கப்பெற்றிருக்கும் ஆலயத் திருப்பணிகள் திருவருட் துணையொடு நிறைவெய்தியிருக்கின்றன.

இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் உமாமஹேஸ்வரருக்கும் பரிவார தேவர்கட்கும் நிகழும் விபவ ஆ ஆனி மீ 17உக்கு 1-7-'88 வெள்ளிக்கிழமை உத்திராட நக்ஷத்திரம் சித்தயோகம் சிம்ம லக்கனத்தில் காலை மணி 9-30க்கு மேல் 10-25க்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெற விருக்கிறது.

நிகழ்ச்சி நிரல்

1988 ஆ	விபவ ஆ	கிழமை	நேரம்	விபரம்
27—6—88	13	திங்கள்	காலை மணி 9-00க்கு மேல் 9.45மணிக்குள்	அனுக்ஞை விக்கினேஸ்வர பூசை தனபூசை, கணபதி ஹோமம்.
28—6—89	14	செவ்வாய்	காலை 8-00 மணி அளவில்	நவக்கிரக ஹோமம், வாஸ்த்து சாந்தி வகையரு.
			அன்று இரவு	கெடஸ்த் தாபனம், முதல் கால யாகசாலை
29—6—89	15	புதன்	காலை	இரண்டாங் காலம் மூன்றுங் காலம் சாலை.
			மாலை	நான்காம் காலம் ஐந்தாங் காலம் யாகசாலை.
30—6—88	16	வியாழன்	காலை மாலை	ஆறுங்காலம் யாகசாலை
1—7—88	17	வெள்ளி	காலை	காலை 9-30க்கு மேல் 10-25க்குள் மஹாகும்பாபிஷேகம்

வேத பாராயணம், தேவார இன்னிசை, நாதஸ்வர இசை முதலிய நிகழ்ச்சிகளோடு நடைபெறும். சிவநேசச் செல்வர்களனைவரும் வந்து குடமுழுக்குக் கண்டு தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு பெற விழையும்,

நாச்சியார்புரம்
13—6—88

நாச்சியாபுரம் நகரத்தார்கள்
திருப்பணிக் கமிட்டியார்.

உமாமகேசுவரர் வாழ்த்து

கண்ஒளிச சோதி யானைக் கருதுவார் வடிவி னுனைப்
பண்ஒளிர் தேவா ரத்தைப் பரவுவார் நெஞ்சத் தானை
உள்நினைந்து உருகக் காக்கும் உமாமகே சுவரன் தன்னை
தண் நாச்சி யார் புரத்துத் தலைவனை வழுத்து வோமே! 1

ஐயனை! அகந்தைப் பேயை அகற்றியே அருள வல்ல
மெய்யனை! மேவு பாசம் மெல்லவே மாற்று வானை
உய்யவோர் மூல மாகும் உமாம கேசுவரன் தன்னை
செய்ய சீர் மேனி யானைத் தேவனைச் சிந்திப் போமே! 2

உலகினில் கமலப் பூக்கள் ஒளிர்கதிர் நாடுதல்போல்
உலகுயிர் நாடு வானை உழலாது அருளைப் பெய்ய
கலைநாச்சி யார்பு ரத்தே கால்கொண்ட கோயி லானை
திலகமாம் நகரத் தார்தம் திருவுயரப் போற்று வோமே! 3

கவிச்செம்மல் ரெ. முத்துக்கணேசன்-காரைக்குடி.

உ சிவமயம்
பாலருவாயர் துணை

"நகரக் கோயிற் பதிகம்"

"சைவசித்தாந்த சரபம்" "சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்" தேவகோட்டை

காப்பு

மருதங் குடிப்பதி வாழ்முத லாந்தன வைசியர்கள்
ஒருதங் குடிக்கிறை யென்று கொண்டாடு முயர்பரனும்
திருதங்கு மார்பினன் நான்முக னாகிய தேவரெலாம்
சுருதங்க ளாற்றும் கற்பக மூர்த்தி துணை நமக்கே

1. இளையாற்றங்குடி

திருமகள் நாமகள் சேர்ந்து தினம்பணி செய்திறைஞ்சப்
பெருமை தருநித்ய கல்யாணி பங்கினன் பேணுபவர்க்கு
இருமையும் இன்பருள் கைலாய நாதனிளை சைநகர்த்
தரும வணிகர்க் கரணும் பராபரன் தாள்பணிவாம்

2. மாற்றூர்

வேற்றூர் களிற்சென்று பல்கால் முயன்றதில் வெற்றியின்றி
தோற்று வருந்திய கொங்கணர் நெஞ்சத் துயரொழித்துச்
சாற்றும் வணிகர்க் கிறையாய்ப் பெரிதாய் தன்னெடுற்ற
மாற்றூரைஞ் நூற்றிறை மாமலர்ப் பாதங்கள் வாழ்த்துவமே

3. வயிரவன் கோயில்

மயிலெனுஞ் சாயல் வடிவுடை யம்மை, மகிழ்கொழுநன்
தயிரியமிக்க வடுகத் திருமேணி தாங்கி நிற்போன்
உயிரெனச் சைவத்தைப் பேணும் வணிகர்க் குவந்தபதி
வயிரவன் கோயில் வளரொளி நாதனை வந்திப்பமே

4. இரணிக் கோயில்

வாட்கொண்ட கண்ணணி சிவபுரத் தாயை மணம்புரிந்து
தாட்கொண்டு நாளும் வணங்கும் வணிகர் தமக்கருள்வோன்
நாட்கொண்ட நோயிலா வாழ்வுடன் செல்வங்கள் நல்குமெங்கள்
ஆட்கொண்ட நாதன் இரணியூர் அத்தன் அடிபணிவாம்

5. பிள்ளையார் பட்டி

பீடாரும் பிள்ளையார் பட்டித் திருநகர் பேணியுறை
வாடா மலர்மங்கை மாமரு தீசர் மலர்க்கழலே
ஏடார் குழற் சிவகாமி திருவீசரின் பதமே
ஈடாரு மில்லா வணிகர் தினம்ப்பணிந் தேத்துவீரே

6. நேமம்

காமனைக் காய்ந்து சவுந்தர நாயகி காதலுடன்
நேம நகரிற் செயங்கொண்ட சோழீச நீடுசெல்வச்
சேம வணிகர்க்கோர் வைப்பா யிலங்கும் சிவபரனே
சாமி யுனது திருவடிச் சார்பின்றிச் சார்பிலமே

7, இலுப்பைக்குடி

வந்தித்து வாழ்த்தும் வணிகர் மரபு வளம்பொலியச்
சிந்தித் தவர்க்கருள் செய்யிலுப் பைக்குடிச் சீர்ப்பதியில்
கந்தர்க் குழலி சவுந்தர நாயகி காதலுறும்
எந்தையைத் தான்றோன்றி யீசனைத் தேசனை யேத்துவமே

8. சூரைக்குடி

நாரைக்கு முத்தி நலந்தந்த நாயகன் நானிலத்தில்
சூரைக் குடிப்பதி யாவுடை யன்னை துணைவியெனச்
சாரப் புகழ்புரி சைவன் வணிகர் தமக்கிறைவன்
காரைப் புரைகளத் தேசிக நாதன் கழல்பணிவாம்

9. வேலன்குடி

காமாட்சி யம்மைக்குக் காதலன் மாலுக்கும் நான்முகற்கும்
தாமாட்சி நல்கிய தந்தை தனக்குத்தாய் தந்தையிலான்
மேமாட்சி மன்னிய வேலன் குடிக்கிறை மெய்வணிகர்
தாமாட் படவாழும் சண்டீசர் பாதம் சரண்நமக்கே.

ஒன்பது நகரக்கோவில் இறைவன் இறைவியர்

டாக்டர் அர. சிங்காரவடிவேலன்

காப்பு — மரகத விநாயகர்

ஒன்பான் நகரத்தார் ஓங்கு திருக்கோவில்
முன்பார்க்க விற்றிருக்கும் மூர்த்திகளை —
வெண்பாவாம்
மாலையிட்டுப் போற்ற மரகதப் பிள்ளாய்நீ
கோலை எடுத்துக் கொடு.

முருகப் பெருமான்

மாவின் கனியை மறுத்ததனல் பெற்றோர்மேல்
மேவும் சினப்படியில் மேலேறிக்—கூவும்
மயில்மீதும் ஊர்ந்தவனே! மாம்பழமே !
பெற்றோர்
ஒயிலை உரைக்க உதவு.

தோற்றுவாய்

எல்லாம் சிவமே: இயக்கும் உமையைத்தான்
வல்ல துணையாய் வகுத்துள்ளார்-பல்லூர்க்குத்
தக்க பெயரிட்டுத் தாபித்த தெய்வங்கள்
துக்கம் தவிர்க்கும் துணை.

1. இளையாற்றங்குடி—
கயிலாசநாதர் - நித்தியுகல்யாணி
இளையாமல் தங்குடியை எந்நாளும் காக்க
மலையாக நம்பும் மனத்தில்—நிலையாய்க்
கயிலாச நாதருடன் கல்யாணி அம்பாள்
ஒயிலாக நிற்பாள் உவந்து.

2. மாற்றூர்க் கோவில் —
ஐந்நூற்றீஸ்வரர்-பெரியநாயகி
ஆயிரத்தில் பாதியவர்; ஐந்நூற்றூர் : மாபெரிய
நாயகியார் அன்னுரின் மாதேவி போயினிமேல்
வேற்றூரில் சுற்றி விணையைப் பெருக்காமல்
மாற்றூர்க்கே செல்வீர் மகிழ்ந்து.

3. வயிரவன் கோவில் —
வளரொளிநாதர்-வடிவுடையம்மை
வளரொளியார் வார்க்கவடிவுடையாள்தாங்கத்
தளர்வின்றி வாழ்கின்ற தக்கோர் — உலகில்
வயிரம் கொழிக்க வளரினத்தார் தம்முள்
வயிரவன் கோவில் வகை.

4 இரணியூர்—
ஆட்கொண்டநாதர்-சிவபுரந்தேவி
ஆட்கொண்ட நாதருடன் அம்பாள்
சிவபுரத்தாள்
பாக்கொண்டு நித்தம் பணிவோரைக் காக்கத்
தரணியிலே வந்துறையும் தக்கதிருக் கோவில்
இரணியூர் என்றே இயம்பு.

5. பிள்ளையார்பட்டி- திருவீசர் சிவகாமவல்லி
மருதீசர் — வாடாமலர் மங்கை
திருவீசர் : தேவி சிவகாம வல்லி
மருதீசர் என்போமேல் வாடாமலர் மங்கை
என்று பெயரிரண்டை ஏற்றவரைப் பிள்ளையார்
கன்றுவளர் பட்டியிலே காண்.

6. நேமங்கோவில்—
ஜெயங்கொண்ட சோழீசர்-சவுந்தரநாயகி
ஐயன் ஜெயகொண்டார் அம்மை
சவுந்தரத்தைப்
பையச் சிரித்தே பயன்கொண்டார்வையத்தார்
சேமம் தினம்கண்டார் செல்வம்கொழிக்கின்றூர்
நேமந்தான் கோவில் நெறி.

7. இலுப்பைக்குடிக்கோவில்—
தான்தோன்றிஈசர்-சவுந்தரநாயகி
தான்தோன்றி ஈசர் சவுந்தரநாயகியார்
வான்தோய என்றும் வளர்கோயில் - மீன்பாய
ஏடுமலரும் இலுப்பைக் குடி, நாட்டின்
சூடா மணியென்றே சொல்.

8. சூரைக்குடி— தேசிகநாதர்-ஆவுடையநாயகி
தேசு திகழ்கின்ற தேசிக நாதருடன்
ஆசி மழைபொழியும் ஆவுடையாள் -
நாசியெனப்
பாரை வளர்த்துவரும் பக்தி வளர்கோவில்
சூரைக் குடியைத் தொழு.

9. வேலங்குடி-சண்டீசர் - காமாட்சி
வண்டுவிழிக் காமாட்சி வாழ்வருளும் சண்டீசர்
கொண்டாடும் அன்பர் குலம்காக்கச் -
செண்டாகக்
காலமெலாம் தோன்றிக் கருணை தரும்கோவில்
வேலங் குடியாம் விளக்கு.

நகரத்தார் வாழும் எழுபத்தைந்து ஊர்கள்

எண்	ஊர் பெயர்	புள்ளிகள்	எண்	ஊர் பெயர்	புள்ளிகள்
1	அமராவதிபுதூர்	30	40	செம்பனூர்	59
2	அரண்மனைசிறுவயல்	117	41	செவ்வூர்	128
3	அரிமளம்	540	42	சொக்கநாதபுரம்	187
4	அரியக்குடி	137	43	சொக்கலிங்கம்புதூர்	143
5	அலவாக்கோட்டை	196	44	சோழபுரம்	18
6	ஆத்தன்குடி	365	45	தாணிச்சாவூரணி	2
7	ஆ. முத்துப்பட்டணம்	155	46	தேவகோட்டை	3,127
8	ஆ. தெற்கூர்	229	47	தேனிபட்டி	17
9	ஆவினிப்பட்டி	165	48	நடராஜபுரம்	104
10	ஆருவயல்	302	49	நற்சாந்துபட்டி	522
11	இராங்கியம்	255	50	நாச்சியாபுரம்	262
12	இராயவரம்	520	51	நாட்டரசன்கோட்டை	674
13	உய்யக்கொண்டான் சிறுவயல்	365	52	நெற்குப்பை	470
14	உலகம்பட்டி	163	53	நேமத்தான்பட்டி	243
15	ஒக்கூர்	109	54	பட்டமங்கலம்	97
16	கடியாபட்டி	553	55	பலவான்குடி	192
17	கண்டரமாணிக்கம்	338	56	பள்ளத்தூர்	711
18	கண்டவராயன்பட்டி	352	57	பனங்குடி	25
19	கண்டனூர்	633	58	பனையப்பட்டி	211
20	கருங்குளம்	60	59	பாகனேரி	348
21	கல்லல்	382	60	பில்லமங்கலம்அழகாபுரி	170
22	கல்லுப்பட்டி	194	61	புதுவயல்	497
23	காரைக்குடி	2,165	62	பூலாங்குறிச்சி	293
24	காளையார்மங்கலம்	101	63	பொன். புதுப்பட்டி	366
25	கானாடுகாத்தான்	327	64	மகிபாலன்பட்டி	113
26	கீழ்ச்சிவல்பட்டி	581	65	மதகுபட்டி	134
27	கீழப்பூங்குடி	102	66	மானகிரி	75
28	குருவிக்கொண்டான்பட்டி	209	67	மிதிலைப்பட்டி	196
29	குழிபிறை	526	68	மேலைச்சிவல்புரி	351
30	கொத்தமங்கலம்	256	69	வலையபட்டி	1005
31	லெட்சுமிபுரம்	69	70	விராமதி	139
32	கொப்பனாபட்டி	268	71	விரையாச்சிலை	235
33	கொல்லங்குடி அழகாபுரி	54	72	விரையாச்சிலை லெட்சுமிபுரம்	96
34	கோட்டையூர்	402	73	வெற்றியூர்	74
35	கோட்டையூர் அழகாபுரி	137	74	வேகுப்பட்டி	318
36	கோனாபட்டு	444	75	வேந்தன்பட்டி	521
37	சக்கந்தி	23			
38	சிறுவயல்	87		மொத்தப் புள்ளிகள்	24339
39	சிறுகூடல்பட்டி	245			

1. ஒன்பது கோயில்களின் மொத்தப்புள்ளிகள் ஏறுவரிசையில் :

வேலங்குடி	36
சூரைக்குடி	1130
நேமம்	1428
இரணியூர்	2387
இலுப்பைக்குடி	2407
பிள்ளையார்பட்டி	2962
இளையாத்தங்குடி	4558
மாற்றூர்	4563
வயிரவன்பட்டி	4868

2. ஒன்பது கோயிற் புள்ளிகளும் உள்ள ஒரே ஊர் :

காரைக்குடி

3. அதிகமான புள்ளிகளை உடைய முதல் ஐந்து ஊர்களாவன :

1.	தேவகோட்டை	3127
2.	காரைக்குடி	2165
3.	வலையபட்டி	1005
4.	பள்ளத்தூர்	711
5.	நாட்டரன்கோட்டை	674

4. ஒன்பது கோயில்களில் ஒவ்வொரு கோயிலிலும் அதிகமான புள்ளிகளை உடைய ஊர்கள் அகர வரிசையில் :

1.	இரணியூர்	—	கொப்பனுபட்டி	—	247	புள்ளிகள்
2.	இலுப்பைக்குடி	—	தேவகோட்டை	—	845	,,
3.	இளையாத்தங்குடி	—	தேவகோட்டை	—	630	,,
4.	சூரைக்குடி	—	கீழைச்சிவல்பட்டி	—	193	,,
5.	பிள்ளையார்பட்டி	—	காரைக்குடி	—	580	,,
6.	நேமம்	—	,,	—	225	,,
7.	மாற்றூர்	—	தேவகோட்டை	—	503	,,
8.	வயிரவன்பட்டி	—	,,	—	615	,,
9	வேலங்குடி	—	காரைக்குடி	—	14	,,
	,,	—	கருங்குளம்	—	14	,,

எழுபத்தைந்து ஊர்களைப் பற்றிய வெண்பா

டாக்டர் அர. சிங்காரவடிவேலன்,

கோட்டையிலே மூன்று; குடிகளிலே ஆறுகும்
பாட்டைவளர் பட்டிஇரு பத்தாகும் — நாட்டமிகும்
ஊர்பத்தாம்; ஏரி, குளம், ஊருணி ஒவ்வொன்றும்; 1
சேர்வயல்கள் ஐந்தென்று செப்பு,

மங்கலம் மூன்று; வரம்ஒன்றே; ஆறுபுரம்
திங்கள்வகை ஒவ்வொன்று; சீர்புரிகள் நான்கு;
பிறஊர்கள் பத்து; சில குறிச்சி ஒன்றே(டு)
அறம்வளர்ப்பார் ஊர்எழுபத் தைந்து 2

திங்கள் வகை : விராமதி; குழிபிறை

பெயர்வகை அடிப்படையில் 75 ஊர்கள்

கோட்டை		**குளம்**	
அலவாக்கோட்டை		கருங்குளம்	1
தேவகோட்டை		**ஊரணி**	
நாட்டரசன்கோட்டை	3	தாணிச்சாவூரணி	1
குடி		**வயல்**	
அரியக்குடி		புதுவயல்	
ஆத்தன்குடி		உ. சிறுவயல்	
காரைக்குடி		அ. சிறுவயல்	
கீழப்பூங்குடி		ஆருவயல்	
பலவான்குடி		சிருவயல்	5
பனங்குடி	6	**மங்கலம்**	
பட்டி		கொத்தமங்கலம்	
வலையபட்டி		காளையார்மங்கலம்	
கடியாபட்டி		பட்டமங்கலம்	3
வேந்தன்பட்டி		**வரம்**	
நற்சாந்துபட்டி		இராயவரம்	1
கண்டவராயன்பட்டி		**புரம்**	
கீழச்சிவல்பட்டி		நாச்சியாபுரம்	
பொன். புதுப்பட்டி		சொக்கநாதபுரம்	
கொப்பனபட்டி		கொ. லெட்சுமிபுரம்	
சிறுகூடற்பட்டி		வி. லெட்சுமிபுரம்	
நேமத்தான்பட்டி		நடராஜபுரம்	
வேகுப்பட்டி		சோழபுரம்	6
கல்லுப்பட்டி		**மதி**	
பணையபட்டி		விராமதி	1
குருவிக்கொண்டான்பட்டி		**பிறை**	
மதகுபட்டி		குழிபிறை	1
மிதிலைப்பட்டி		**புரி**	
ஆவினிப்பட்டி		பி. அழகாபுரி	
உலகம்பட்டி		கொ. அழகாபுரி	
மகிபாலன்பட்டி		கோ. அழகாபுரி	
தேனிபட்டி	20	மேலச்சிவல்புரி	4
ஊர்		**பிறஊர்கள்**	
கண்டனூர்		அரிமளம்	
பள்ளத்தூர்		ஆ. முத்துப்பட்டணம்	
கோட்டையூர்		இராங்கியம்	
ஆ. தெற்கூர்		கண்டரமாணிக்கல்	
செவ்வூர்		கல்லல்	
சொக்கலிங்கம்புதூர்		கானுடுகாத்தான்	
வெற்றியூர்		கோனபட்டி	
செம்பனூர்		மானகிரி	
அமராவதிபுதூர்		நெற்குப்பை	
ஒக்கூர்	10	சக்கந்தி	10
ஏரி		**சிலை**	
பாகனேரி	1	விரையாச்சிலை	1
		குறிச்சி	
		பூலாங்குறிச்சி	1
		மொத்த ஊர்கள்	75

உ சிவமயம்

ருத்ராக்ஷ மகிமை

தொகுப்பு: நா. சே. நாராயணன்

தோற்றம்:

திரிபுரத்து அசுரர்கள் வரபலத்தால் பொன் வெள்ளி இரும்பு என்பனவற்றால் மூன்று கோட்டைகளைக் கட்டிக் கொண்டார்கள். அக் கோட்டைகளோடு ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்று நினைத்த இடங்களில் எல்லாம் இறங்கிப்பூவுலகத்தாரையும் தேவலோகத்தாரையும் துன்புறுத்தினார்கள். துன்பம் தாங்காத தேவர்கள் திருக்கைலாய மலைக்குச் சென்றார்கள்- அங்கே பரமேஸ்வரனாய ருத்ர மூர்த்தி கண்மூடித் தியானத்திலிருந்தார். தேவர்கள் நெடுங்காலம் காத்திருந்து ருத்ர மூர்த்தி யோகம் கலைந்ததும் தமது துயரத்தை எடுத்துரைத்து முறையிட்டார்கள். தேவர்களின் முறையிடு கேட்டு ருத்ரமூர்த்தி இரக்க முற்றுத்தமது திருக்கண்களிலிருந்து நீர்த்துளிகளைச் சிந்தினார். அந்த நீர்த்துளிகள் பூமியில் சிந்தி மரமாக முளைத்தன. அந்த மரங்களே ருத்ராக்ஷ மரம் என்றும் அந்த மரத்தின் வித்துக்களே ருத்ராக்ஷமணி என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன,

பெயர்க்காரணம் :

ருத்ரமூர்த்தியின் கண்ணிலிருந்து தோன்றியதால் ருத்ராக்ஷம் என்றுகூறப்படும் (ருத்திர-ருத்திரமூர்த்தி; அக்ஷம்-கண்) கண்ணில் தோன்றியதால் கண்மணி என்றும் அக்குமணி என்றும் கூறப்படுகிறது. (அக்கு-அக்ஷம்-கண்.) சில ருத்ராக்ஷம் இரட்டையாக ஒட்டிக் கொண்டிருக்கும். அர்த்த நாரிசுவரரின் வடிவில் வலப் பாகத்தில் சங்கரனும் இடப்பாகத்தில் கௌரியும் இணைந்து இருப்பதுபோல இந்த மணியும் இரட்டையாக ஒட்டிக் கொண்டிருப்பதால் இதனைக் கௌரிசங்கர் என்று கூறுவர். இந்த மணியில் இரண்டு துளையிருக்கும். விபூதி, ருத்ராக்ஷம் முதலியன சைவ சமய சாதனமாக இருந்தாலும், ருத்ராக்ஷத்தை மட்டும் சாதனம் என்று கூறும் வழக்கு இருக்கிறது. இந்த வழக்கை ''எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால்'' என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கால் அறியலாம். கண்டத்தில் அணிவதால் கண்டிகை என்று கூறப்படுகிறது.

அளவும் அமைப்பும் :

நெல்லிக்காய் அளவுள்ள ருத்திராக்ஷம் சிறந்த பலனைத் தரும் என்றும் இலந்தைப் பழ அளவுள்ள ருத்திராக்ஷம் நடுத்தரமான பலனைத்தரும் என்றும் கடலை அளவுள்ள ருத்திராக்ஷம் குறைவான பலனைத் தரும் என்றும் ருத்ராக்ஷ ஜாபாலோபநிஷத் கூறுகிறது. ருத்ராக்ஷத்தின் துளை பிரம்ம விஷ்ணு ருத்திரர்களின் சொரூபம் என்றும், மேலே உள்ள புள்ளிகள் (கரடுகள்) சர்வதேவர்களின் சொரூபம் என்றும் மேற்படி உபநிஷத் கூறுகிறது. இயற்கையிலேயே துளையைப் பெற்ற மணி மிகவும் சிறந்ததாகும். செயற்கையாகத் துளையிடப் பெற்ற மணி மத்திமமாகும். இரட்டையாக ஒட்டியிருக்கும் கௌரி சங்கர் மணி அளவற்ற சிறப்புடையதாகும்.

முகங்கள் :

உருத்திராக்க மணியில் நீளவாட்டில் சில வரைகள் (அதாவது கோடுகள் அல்லது பள்ளங்கள்) இருக்கும். ஒரு கோட்டுக்கும் அடுத்த கோட்டுக்கும் இடையே உள்ள பாகம் முகம் என்று கூறப்படும். ஒரு மணியில் எத்தனை வரைகள் அல்லது கோடுகள் உள்ளனவோ அத்தனை முகங்கள் அந்த மணியில் இருக்கும். எனவே கோடுகளை எண்ணிமுகத்தைக் கணக்கிடுவார்கள். பெரும்பாலான மணிகளில் 5 முகங்கள் இருக்கின்றன. ஒன்று முதல் பதினான்கு முகம் வரை இருப்பதாக ருத்ராக்ஷ ஜாபாலோபநிஷத் கூறுகிறது. ஒன்று முதல் பதினாறு முகம்வரை இருப்பதாக ஆறுமுக நாவலர் சைவ வினாவிடையில் எழுதி இருக்கிறார். ஒன்று இரண்டு மூன்று முகமணிகள் கிடைப்பது மிக மிக அரிது. பன்னிரண்டுக்கு மேற்பட்ட முகமுள்ள மணிகள் கிடைப்பதும் அரிது.

முகங்களின் சிறப்பு :

ஒருமுக மணி பரப்பிரம்ம சொரூபமாகும் இதை அணிந்தால் இந்திரிய ஜயம் கிட்டும்; இறுதியில் பரப்பிரம்மத்தோடு ஐக்கியம் ஏற்படும். இரண்டு முகமணி அர்த்த நாரீஸ்வர சொரூபமாகும். இதை அணிந்தால் பரமேஸ்வரனும், பரமேஸ்வரியும் திருப்தி அடைவார்கள். மூன்றுமுக மணி மூன்று வகை யாகாக்கினி சொரூபமாகும். இதை அணிந்தால் அக்னிபகவான் திருப்தி அடைவார். நான்கு முகமணி பிரம்மாவின் சொரூபமாகும் இதையணிந்தால் பிரம்மா திருப்திஅடைவார். ஐந்து முகமணி சதாசிவமூர்த்தியான ஸ்ரீ பரமேஸ்வரரின் சொரூபமாகும். இதை அணிந்தால் பிரம்மஹத்தி முதலிய பாபங்கள் நிவர்த்தியாகும். ஆறுமுகமணி சுப்ரமணிய சொரூபமாகும். இதை அணிந்தால் அஷ்ட ஐசுவரியமும் தேக ஆரோக்கியமும் ஏற்படும், மேலும் புத்திக் கலக்கம் நீங்கித் தெளிந்த ஞானமுண்டாகும். மகான்களில் சிலர் ஆறுமுக மணியைக் கணபதி சொரூபம் என்று கூறுகிறார்கள். ஏழுமுக மணி சப்த மாதர்களின் சொரூபமாகும். இதைத் தரித்தால் ஐசுவரியமும்

ஆரோக்கியமும் உண்டாகும். எட்டுமுகமணி அஷ்ட வசுக்கள், அஷ்ட லக்ஷிமிகள் ஆகியோரின் சொரூபமாகும். இதை அணிந்தால் அஷ்ட வசுக்களும கங்காதேவியும் திருப்தி அடைவார்கள், லக்ஷிமிகடாட்சம் உண்டாகும். ஒன்பது முகமணி நவசக்திகளின் சொரூபமாகும் இதை அணிந்தால் நவசக்திகள் திருப்தி அடைவார்கள். சகலகாரிய சித்தி உண்டாகும். பத்துமுக மணி யமதர்ம சொரூபமாகும். இதை அணிந்தால் தசாபுத்தி தோஷங்கள் நீங்கும்பதினோரு முக மணி ஏகாதச ருத்ர சொரூபமாகும். இதை அணிந்தால் எப்போதும் சௌபாக்கியம் பெருகும். பன்னிரண்டு முக மணி மகாவிஷ்ணு துவாதச ஆதித்தர் ஆகியோர்களின் சொரூபமாகும். இதை அணிந்தால் மகாவிஷ்ணு சூரியர்கள் அனுக்கிரகம் ஏற்படும். பதின்மூன்று முகமணி சகல தேவ சொரூபமாகும். இதை அணிந்தால் சகல காரிய சித்தி உண்டாகும். பதினான்கு முக மணி ருத்ர நேத்ர சொரூபமாகும். இதைத் தரித்தால் சகல வியாதிகளும் நீங்கி ஆரோக்யம் ஏற்படும் இவ்வாறுருத்ராக்ஷ ஜாபா லோப நிஷத்து விவரிக்கிறது.

செபமாலை :

பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களைச் செபிக்கும் போது உருக்களைக் கணக்கிடுவதற்காகக் கோக்கப்பட்ட மாலையானது செபமாலை எனப்படும். இல்லறத்தார் இருபத்தேழு மணிகளாலும் துறவறத்தார் இருபத்தைந்து மணிகளாலும் செபமாலை தயாரித்து கொள்ள வேண்டும். இனி இல்லறத்தார் ஐம்பத்து நான்கு மணிகளாலும் நூற்றெட்டு மணிகளாலும் செபமாலை செய்து கொள்ளலாம் செபமாலைக்கு இரண்டு முகம், பன்னிரண்டு முகம பதின்மூன்று முகம் ஆன மணிகள் ஆகா, மற்ற முகங்கள் ஆகும். ஒரு செபமாலையில் கோக்கும் மணிகள யாவும ஒரே விதமான முகங்களை உடையதாக இருக்க வேண்டும். வெவ்வேறு வித முகங்களை உடையதாக இருக்க கூடாது. வெண்பட்டு பருத்தி என்ற வற்றில் இருபத்தேழு இழையால் திரித்த கயிற்றில் நுனியோடு நுனியும் அடியோடு அடியும் பொருந்துமாறு கோக்க வேண்டும. மற்றும் மணிகள் ஒன்றை ஒன்று தொடாத படி இடை இடையே நாக பாசம் பிரம்மகிரந்தி சாவத்திரி என்பவைகளில் ஏதாவதொரு வகை முடிச்சை இட்டுக் கோக்க வேண்டும். பிறகு கோக்கப்பட்ட கயிற்றின் இரண்டு நுனிகளையும் ஒன்று சேர்த்து அதில் நாயக மணி ஒன்றைக்கோத்து முடிச்சிட்டுக் கொள்ள வேண்டும் நாயக மணிக்கு மேரு என்ற வேறு பெயரும் உண்டு. செம்பு வெள்ளி, பொன் கம்பிகளாலும் செபமாலை கட்டலாம்.

அணியத்தக்க காலம் :

சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தியானம், ஆலயதரிசனம், புராணம்படித்தல் புராணம் கேட்டல், சிரார்த்தம் முதலானவற்றைச் செய்யும்போது கட்டாயம் உருத்திராக்கம் அணிந்து கொள்ள வேண்டும். சயனத்திலும் மலசலமோசனத்திலும் வியாதியிலும் ஆசௌசங்களிலும் உருத்திராக்கம் அணியக் கூடாது.

அணிவதன் பலன் :

நல்லகாரியம் செய்யும் போது ருத்ராக்ஷத்தை தரிசிக்க நேர்ந்தால் அந்தக் காரியத்தின் புண்ணியம் லக்ஷம் மடங்காகப்பெருகும். உருத்திராக்க மணியைக் கைகால் தொட்டவாறு நல்லகாரியம் செய்தால் அந்தக் காரியத்தின் புண்ணியம் கோடி மடங்காகப் பெருகும். உருத்திராக்கத்தை அணிந்து கொண்டு அக்குமாலை கொண்டு பஞ்சாட்சர செபம் செய்தால் அதன் புண்ணியம் ஆயிரம்கோடி மடங்காகப்பெருகும் இவ்வாறு ருத்ரக்ஷ ஜாபாலோபநிஷத் கூறுகிறது. உருத்திராக்கத்தை கழுத்தில் அணிந்து கொண்டால் 2000 கோதான பலனும், காதுகளில் அணிய முயற்சித்தால் 16000 கோதான பலனும், சிகையில் அணிந்து கொண்டால் ஒரு கோடி கோதான கைகளில் அணிந்து கொண்டால் அளவற்ற கோதான பலனும் கிடைக்கும் என்று கலாக்னிருத்திரர் கூறியதாகமேற்கண்ட உபநிஷத் கூறுகிறது. பக்தி இல்லாதவன் ஆனாலும் மூடனாக இருந்தாலும் எவன் ஒருவன் உருத்திராக்கத்தை அணிகிறானோ அவன் எல்லா விதமான பாதகங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்றும், உருத்திராக்கம் அணிவதை மகாவிரதமாக முனிவர்கள் கருதுகிறார்கள் என்றும், எவன் 1000 கண்மணிகளை அணிகிறானோ அவன் எல்லாத் தேவர்களாலும் வணங்கப்படுகிறான் என்றும் 1000 கண்மணிகள் கிடைக்காவிட்டால் சிகையில் ஒன்று காதுகளில் அவ்வாறும் தோள்களில் பதினாறு பதினாறும் முன்கைகளில் பன்னிரண்டு பன்னிரண்டும் கழுத்தில் முப்பத்திரண்டுமாக அணிந்து கொண்டால் அவன் ஸ்ரீ ருத்ரனுக்குச் சமம் ஆவான் என்றும் வடமொழி ஸ்காந்தம் கூறுகிறது. நீராடும்போது உருத்திராக்க மணியில் பட்டு வழியும் நீர் கங்கைநீருக்குச் சமம் என்று ஆறுமுக நாவலர் குறித்துள்ளார். உருத்திராக்கம் அணிந்தவரைப் பேய் பூதங்கள் நெருங்க மாட்டா என்று புராணங்கள் கூறுகின்றன.

உபயோகம் :

உருத்திராக்க மணிகள் அணிந்து கொள்ளப்படுவதோடு வேறு சில வகைகளிலும் பயன்படுகிறது, சிவபூசை செய்கிறவர்கள் புற்றுமண் சந்தனம் முதலியவற்றுள் உருத்திராக்கத்தையும் க்ஷணிகலிங்கமாக வைத்துப் பூசிக்கிறார்கள். திருக்கோயில்கள் சிலவற்றில் கருப்பக்கிருகத்தில் சிவலிங்கத்துக்கு மேலே உருத்திராக்கத்தால் பந்தல் இட்டிருக்கிறார்கள். மருத்துவர்கள் உருத்திராக்கத்தை உரைத்து மருந்தோடு கலந்து கொடுக்கிறார்கள்.

"புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும்."

—கந்தர் கலிவெண்பா

கந்தர்கலிவெண்பாவில் முருகனது வடிவத்தைக் கேசாதி பாதமாக வருணிக்கும்போது "முருகன் தனது மார்பில் முப்புரிநூலும் உருத்திராக்கக் கண்டிகையும் அணிந்திருக்கிறான்" என்று குமரகுருபரர் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை:

பூசிய திருநீறு கூட வியர்வையில் ஒரோவழி அழியக்கூடும். உருத்திராக்கம் எந்நேரமும் அழியாச் சின்னமாக விளங்கும். எனவே மக்கள் யாவரும் தத்தம் குழந்தைகளுக்கு தீட்சை செய்வித்து கழுத்தில் ஆறுமுகம் கொண்ட ஒரு உருத்திராக்கத்தை சிகப்புபட்டு நூலில் கோர்த்து நிலை பேறாகத் தரிக்கச் செய்ய வேண்டும்.

திருச்சிற்றம்பலம்.

